கலை
இலக்கிய
மாத
சஞ்சிகை

224

தை

01.01.2024

100/-

# ஜீவநதி

பிரதம ஆசிரியர் : க.பரணீதரன்



ஆதிலட்சுமி சிவகுமார்
இ.புஷ்பா
ஆசி.கந்தராஜா
கிரிசாந்
சோ.ப
தியா.காண்டீபன்
சோ.தேவராஜா
த.கலாமணி
சிவசேகரன்
வ.ந.கிரிதரன்
தமிழ்க்கவி
கி.நடராசா
கெகிறாவ ஸுலைஹா
ஐங்கரன் விக்னேஸ்வரா
தில்லைநாதன் கோபிநாத்
த.அபிநாத்
கோகிலா மகேந்திரன்

02 MAR 2024

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


கலை இலக்கிய மாத சஞ்சிகை
2024 - தை (01.01.2024)

# பொருளடக்கம்


பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

**சிறுகதைகள்**
ஆதிலட்சுமி சிவகுமார் - 08
இ.புஷ்பா - 16

**அறிவியல் புனைகதை**
ஆசி. கந்தராஜா - 22



**கவிதைகள்**
கிரிசாந் - 11
சோ.ப. - 17
தியா. காண்டீபன் - 24
சோ.தேவராஜா - 22
த.கலாமணி - 31
சிவசேகரன் - 37




**தொடர் நாவல்**
வ.ந.கிரிதரன் - 27
தமிழ்க்கவி - 32


**கட்டுரைகள்**

**பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியல் கருத்துகள்**
கி.நடராசா - 03

**Ruskin Bond இன் வண்ணத்துப்பூச்சியாகின்றேன்**
கெகிறாவ ஸுலைஹா - 12



**என்றும் மரணிக்காத காசாவின் குரல் - ரிவாட் அலாரீர்: காசா பல்கலைக்கழகப் பேராசிரியர் இஸ்ரேலால் படுகொலை!**
ஐங்கரன் விக்கினேஸ்வரா - 18



**சுன்னாகம் திராவிட வித்தியாசாலை**
தில்லைநாதன் கோபிநாத் - 20

**மாலைமாற்றெனும் விந்தை**
த.அபிநாத் - 26

**சொல்ல நினைத்தவை - 01**
த.கலாமணி - 36

**முடிவைத்தொடுவாய் முயன்று - 1**
கோகிலா மகேந்திரன் - 38

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

[Ptejp

2024 தை இதழ் - 224

**பிரதம ஆசிரியர்**
க.பரணீதரன்

**துணை ஆசிரியர்கள்**
வெற்றிவேல் துஷ்யந்தன்
ப.விஷ்ணுவர்த்தினி

**பதிப்பாசிரியர்**
கலாநிதி த.கலாமணி

**தொடர்புகளுக்கு :**
கலை அகம்
சாமணந்தறை ஆலடிப்பிள்ளையார் வீதி
அல்வாய் வடமேற்கு
அல்வாய்
இலங்கை.

**ஆலோசகர் :**
திரு.கி.நடராஜா

**தொலைபேசி** : 0775991949
0212262225

**E-mail** : jeevanathy@yahoo.com

**வங்கித் தொடர்புகள்**
K.Bharaneetharan
Commercial Bank, Nelliady
A/C - 8108021808 - CCEYLKLY



இச்சஞ்சிகையில் இடம்பெறும் அனைத்து ஆக்கங்களின் கருத்துக்களுக்கும் அவற்றை எழுதிய ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள்.



ஜீவநதி சந்தா விபரம்

தனிப்பிரதி - 100/= ஆண்டுச்சந்தா - 3000/=
வெளிநாடு - $ 100U.S
மணியோடரை
அல்வாய் தபால் நிலையத்தில் மாற்றக்கூடியதாக அனுப்பி வைக்கவும்.
அனுப்ப வேண்டிய பெயர்/முகவரி
**K .Bharaneetharan,**
**Kalaiaham ,**
**Alvai North west, Alvai.**
வங்கி மூலம் சந்தா செலுத்த விரும்புவோர்
K.Bharaneetharan Commercial Bank - Nelliady Branch
A/C No.- 8108021808 CCEYLKLY


# ஜீவநதி

## (கலை இலக்கிய மாத சஞ்சிகை)

அறிஞர் தம் இதய ஓடை
ஆழ நீர் தன்னை மொண்டு
செறி தரும் மக்கள் எண்ணம்
செழித்திட ஊற்றி ஊற்றி...
புதியதோர் உலகம் செய்வோம்.!
- பாரதிதாசன்-

## புதிய கனவுகளுடன்...

புதிய கனவுகளுடனும், புதிய திட்டங்களுடனும் ஜீவநதி 2024 இல் காலடி எடுத்து வைக்கின்றது. சென்ற ஆண்டு ஜீவநதி 68 வெளியீடுகளையும் 36 இதழ்களையும் வெளியீடு செய்து ஈழத்து இலக்கிய வரலாற்றில் சாதனை படைத்தது. இந்த ஆண்டு 100 இற்கு மேற்பட்ட நூல்களை வெளியீடு செய்யத் திட்டமிட்டுள்ளது. ஆவணப்படுத்தல் சார்ந்த சிறுநூல்களை வெளியீடு செய்வதில் அதிக கவனம் செலுத்தவுள்ளது. சிறுநூல்களை வெளியீடு செய்ய விரும்பும் எழுத்தாளர்கள் தொடர்பு கொள்ளுங்கள். இந்த ஆண்டு மாதாந்த இதழும், ஆளுமைச் சிறப்பிதழும் வெளியாகும். ஆண்டுச் சந்தா 3000.00 (24 இதழ்). மன்னிக்கவும் சந்தா செலுத்தாத எவருக்கும் இதழ்களை அனுப்ப முடியாத சூழ்நிலை, எனவே இலவச பிரதிகளை இனிவரும் காலங்களில் எதிர் பார்க்க வேண்டாம்.

ஜீவநதி வெளியீடு செய்த பல புத்தகங்கள் சென்ற ஆண்டும் இலக்கியப் பரிசுகள் பலவற்றை பெற்றுக் கொண்டது. நூலாசிரியர்களுக்கு எமது வாழ்த்துக்கள். ஜீவநதி முடிந்த வரையில் தன்னாலான இலக்கிய பணிகளை மேற்கொள்ளும். ஜீவநதி சஞ்சிகை ஆரம்பிக்கின்ற போதே சஞ்சிகை நடாத்துவதின் கஷ்டங்களை அறிந்து கொண்டே ஆரம்பித்தேன். எனவே தொடர்ச்சியாக ஜீவநதி தன் பாய்ச்சலை மேற் கொண்டு வரும். அதன் பயணத்தில் துணை நிற்பவர்களுக்கு என்றும் நன்றி.

பாடசாலைகள், நூலகங்கள் சந்தா செலுத்தினால் ஜீவநதியின் பாய்ச்சலுக்கு மேலும் வளமாகும். யாரையும் சந்தா செலுத்தச் சொல்லி ஒருபோதும் ஜீவநதி நிர்ப்பந்தித்ததும் இல்லை. விரும்பியோர் இதழ்களைப் பெற்று வாசியுங்கள். புத்தகக் கடைகளில் இதழ்களை போட்டு விற்கும் செயற்பாடு துன்பகரமானது என்பதை யாவரும் அறிவீர்கள்.

ஜீவநதியின் 200 ஆவது இதழ் சாதியச் சிறப்பிதழாக வெளி வந்துள்ளது. ஈழத்தில் இருந்து முதன்முதலாக வெளிவந்துள்ள சாதியச் சிறப்பிதழ் என்பதும் குறிப்பிடத்தக்கது. 240 பக்கங்களில் வெளி வந்துள்ளது. அதன் விலை 800.00. தபால் செலவு 200.00. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளுங்கள்.

- க.பரணீதரன்

**ஜீவநதி கிடைக்கும் இடங்கள்/ விற்பனையில் உதவுவோர்**

1. புத்தகக்கூடம் - திருநெல்வேலி
2. பூபாலசிங்கம் புத்தகசாலை - யாழ்ப்பாணம், கொழும்பு செட்டித்தெரு
3. புத்தகப்பண்பாட்டுப் பேரவை, 68, நீதிமன்ற வீதி, மல்லாகம்
5. பண்டாரவன்னியன் புத்தகசாலை - வவுனியா
4. அ.யேசுராசா
5. பரணி புத்தகக்கூடம் - நெல்லியடி
6. மு.யாழவன்- திருகோணமலை,
7. கந்தர்மடம் அ.அஜந்தன்
8. சி.ரமேஷ்
9. நா.நவராஜ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கி.நடராசா**

# பழந்தமிழ் இலக்கியங்களில் அறிவியற் கருத்துக்கள்

வாழ்க்கைக்கு இசைவாக கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதற்கான வளமும் மொழி நலமும் பெற்றது எம் தமிழ்மொழி. பிற மொழிகளின் உதவியின்றி கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கு ஏற்ற சொல் வளமும், கருத்து வளமும், இலக்கண அமைதியும் கொண்ட உயர்தனிச் செம்மொழி தமிழ். மிகப் பழைமையான பண்பட்ட மொழியாக மட்டுமன்றி இரண்டாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட வரலாற்றுப் பாரம்பரியம் கொண்ட பெருமைக்கும் உரியது.

சங்க காலத்திலிருந்து மேலை நாட்டவர் கீழ்த்திசை நாடுகளிற் காலூன்றிய காலம் வரை தமிழர் பல துறைகளில் சிறப்புற்று தனி ஆதிக்கம் செலுத்தி வந்தமைக்குச் சான்றுகள் உள்ளன. தமிழன் என்றொரு இனமுண்டு. தனியே அவர்க்கு ஒரு குணமும் உண்டு என்பதை எவரும் மறுத்துரைக்க முடியாது. நதிகளின் வெள்ளப் பெருக்கை கட்டுப்படுத்தல், நுட்பமான பாசனமுறை அமைத்தல், நெருப்பினை உண்டாக்கி கட்டுப் படுத்தி பயன்படுத்துதல், விலங்குகளை அடக்கி அவற்றினைத் தம் தேவைக்கும் பயன்படுத்துதல், சக்கர வண்டிகளை உருவாக்குதல், நெசவு மட்பாண்டம் வரைதல், போரியல் நுட்பங்களை அறிந்திருத்தல், நாவாய் அமைத்தல், மருத்துவம், காலநிலை, வானியல் என எவ்வகையான துறைகளிலும் நம்முன்னோர் பெருமை பெற்றிருந்தனர்.



அறிவியல் தொடர்பாக பல வகையான வரையறைகள் உள்ளன. "SYSTEMATIZED KNOWLEDGE DERIVED FROM OBSERVATION, STUDY AND EXPERIMENTATION CARRIED ON IN ORDER TO DETERMINE THE NATURE OR PRINCIPLES OF WHAT IS BEING STUDIED" என்பது ஒரு பொதுவான விளக்கம் என்பதை பல கட்டுரைகளில் படித்திருக்கிறேன். இவ்விளக்கம் பலகட்டுரையாளர்களால் எடுத்துரைக்கப்பட்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

திருக்குறள் அறிவியலுக்கு, (மெய் உணர்தல் - 355)என எடுத்துரைக்கின்றது. அறிவியல் என்னும் போது பொதுவாக விஞ்ஞானம், ஆய்வுத்துறை, இயல்நூல், பருப்பொருட்களை ஆய்வு செய்தல்என பல்துறைகளை உள்ளடக்கிய தொகுதியையே குறிக்கும் மானிடம் பயனுற வாழ வளமும் நலமும் தந்து மேன்மையுறச் செய்வதே அறிவியல். இன்று நாம் பெற்றுள்ள அறிவியல் துறை சார்ந்த பல்வேறு விடயங்கள் பழைய தமிழ் இலக்கியங்களில் எவ்வாறு இடம் பெற்றிருந்தன என்பதை வெளிக் கொணர்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

### வானியல் தொடர்பான கருத்துக்கள்

#### திருவாசகம்

எம்மைச் சூழ்ந்திருக்கின்ற பேரண்டத்தைப் பற்றியும் அதில் அடங்கியுள்ள கோள்கள் பற்றியும், அவற்றின் வடிவம், இயக்கம் பற்றியும், முழுமையாக இருபதாம் நூற்றாண்டின் பின்னரே அறிய முடிந்தது. இன்னும் அறியப்பட வேண்டியவற்றை அறிந்து கொள்வதற்காக பல நாடுகள் தொடர்ந்து முயன்று கொண்டுதான் இருக்கின்றன. எனினும் தமிழ் இலக்கிய வரலாற்றில் பல்லவர் காலம் என்று சொல்லப்படும் காலத்தில் வாழ்ந்த மாணிக்க வாசகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடிய திருவாசகம் என்ற நூலில் பேரண்டம் பற்றிய கருத்துக்கள் இடம் பெற்றுள்ளன. அடிப்படையில் இந்நூல் பக்தி இலக்கியமாயினும் அறிவியலையும் இறைவனது படைப்பே என்பதைக் காட்ட முயன்றிருக் கின்றது.

"அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந்தன்மை வளப்பெருங்காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரிந்தன
இன்னுழை கதிரின் துன் அணுப் புரையச்
சிறியவராகப் பெரியோன் தெரியின்"

(இப் பாடல் வரிகள் நூலின் திருவண்டப் பகுதியில் இடம் பெற்றுள்ளது)

இந்தப் பாடற் பகுதியில் அண்டப்பகுதியென்றது வான் வெளியில் காணப்படும் உலகங்களை உணர்த்தி யது. உண்டைப் பிறக்கம் என்பது அண்டப்பகுதிகள் எல்லாம் உருண்டை வடிவம் கொண்டன என்பதைக் குறிக்கின்றது. அளப்பருந்தன்மை என்பது ஒவ் வொன்றின் அளவும் அவற்றின் இடைவெளித் தூரமும் அளந்தறிய முடியாது என்பதை அறியத் தருகின்றது.

உலகம் உருண்டை வடிவானது என்று மேற் குலகம் கண்டறிந்தது மகெலனின் கடற்பிரயாணத்தின் பின்னரேயாகும். அதுவரை உலகம் தட்டையானது என்றே நம்பினர். பேரண்டத்தில் உள்ளபொருட்கள் அனைத்தும் உருண்டை வடிவமானதே என வான்வெளி அற்புதங்களை மாணிக்க வாசகர் தெளிவாக வலியுறுத்தியுள்ளார்.

புறநானூறு:

வானியல் தொடர்பாக திருவாசகம் அண்ட வெளி பற்றி கூறியது போல சங்க இலக்கியங்களில் ஒன்றான புறநானூறு என்ற நூலிலும் வானியல் பற்றிய சில செய்திகள் இடம் பெற்றிருந்தன. முரஞ்சியூர் முடி நாகராயர் என்ற புலவர்

மண்டிணிந்தநிலனும்
நிலனேந்திய விசும்பும்
விசும்பு தைவரு வளியும்
வளித் தலைஇய தீயும்
தீ முரணிய நீருமென்றாங்கு
கைம்பெரும் பூதத்தியற்கை

(புறநானூறு - 2ம் பாடல் 1-6 வரிகள்)

ஐம்பெரும் பூதங்கள் பற்றிய செய்தியை தருகின்றார். மேற்குலகம் அறிவதற்கு முன் ஐம்பூதங்கள் பற்றிய அறிவியல் அறிவு நம் தமிழர்க்கு இருந்திருக் கின்றது. வடமொழியில் ஐம்பூதங்களுக்குப் பதிலாக சதுர்ப்பூதம் என்னும் நான்கு கூறுகளையே அவர்கள் அறிந்திருந்தனர். காற்று வேறு, காற்று இயங்கும் வெளிவேறு என்றும் அந்த வெளியின் பெயர் விசும்பு என்ற தெளிவும் எம் முன்னோரிடம் இருந்தது.

உறையூர் முதுகண்ணன் என்னும் சாத்தனார், சூரியனது இயக்கம், இயக்கத்தால் சூழப்படும் மண்டலமும், காற்று செல்கின்ற திசையும்எவ்வித ஆதாரமுமின்றி நிற்கும் வானமும், எத்தன்மையானவை என்பதை பின்வரும் பாடல் வரிகள் மூலம் தருகின்றார்.

செஞ்ஞா யிற்றுச் செலவுமஞ் ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளி திரிதரு திசையும்
வறிது நிலையே காயமு மென்றிவை
சென்றனந்தோர் போல வென்றும்
இனைத்தென் போருமுனரே யனைத்தும்

(புறநானூறு 30ம் பாடல் 1-6 வரிகள்)

புறநானூறு இன்னுமொரு வானியல் சம்பந்த மான கருத்தை தருகின்றது.

"மாக விசும்பின் வெண் திங்கள்
மூ-ஐந்தான் முறைமுற்ற
கடல் நடுவண்கண்டன்ன"

(புறநானூறு 400ம் பாடல்)

என்ற பாடல்வரியில் கோவூர் கிழார், மாகமாகிய விசும்பி னிடத்து இயங்குகின்ற வெண்மதியம், பதினைந்து நாள் திதி முறையே முடியகடலின் நடுவில் அதனைக் காணலாம் எனக் கூறியிருக்கின்றார். மேலும் புற நானூற்றில் வான் வெளியில் சந்திரனின் செயற் பாட்டுடன் சில வாழ்விற்குத் தேவையான அறிவியல் பற்றிய செய்தியையும் உறையூர் முதுகண்ணன் சாத்தனார் தருகின்றார்.

"தேய்தல் உண்மையும் பெருகலுண்மையும்
மாய்தல் உண்மையும் பிறத்தலுண்மையும்
அறியாதோரையும் அறியக்காட்டி
திங்கட் புத்தே ளிரிதரு முலகம்"

(புறம் 27ம் பாடல் 11-14 வரிகள்)

இப்பாடல் வரிகளில் வளர்தலும் தேய்தலும் பிறத்தலும் இறத்தலும் உடையது இவ்வுலகம் என்பதற்கு சந்திரனை உவமானம் காட்டி உரைப்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

புறநானூற்றில் நாள், கோள், நட்சத்திரங்கள், திசைகள் போன்றவற்றை மக்கள் நன்கறிந்திருந்தனர் என்ற செய்தி கூறப்பட்டுள்ளது. கூடலூர் கிழார் என்ற புலவன் சேரல் இரும்பொறை என்ற மன்னன் இன்ன நாளில் துஞ்சும் என அஞ்சி அவர் இறந்த இடத்து பாடியபாடலில் நாள், நட்சத்திரங்கள் பற்றிய செய்தி இடம் பெற்றுள்ளன.

ஆடு இயல் அழல் குட்டத்து
ஆர் இருள்அரை இரவில்
மூடப் பனையத்து வேர்முதலாக்
கடைக் குளத்துக் கயம் காய
பங்குனி உயர்அழுவத்து
தலை நாள் மீன் நிலை திரிய
நிலை நாள் மீன் அதன் எதிர் ஒர்தர
தொல்நாள் மீன் துறை படிய
பாசிச் சொல்லாது ஊசித்துண்ணாது
அளக்கர் திணை விளக்காக

(புறநானூறு 229ம் பாடல் 1-9 வரிகள்)

இதில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடு மேடராசி
அழல் – கார்த்திகை
முடப்பனையத்து – அனுஷநாள்
உயர் அழுவம் – முதற் பதினைந்தாம் நாள்
தலை நாள்மீன் – உத்தரம்
நிலை நாள் மீன் – மூலம்
தொல் நாள் மீள் – மிருகு சீரிடம்
பாசி கீழ்த்திசை – ஊசி வடதிசை
அளக்கர்த்திணை – கடல் சூழ்ந்த பூமி

சோழன் நலங்கிள்ளியின் ஆட்சிக் காலத்தில் ஆகாயத்தில் செலுத்துபவன் இல்லாது தானே இயங்கும் வானவூர்தி பயன்படுத்தப்பட்டதை முது கண்ணன் சாத்தனார்என்ற புலவர் குறிப்பிடுகின்றார்.

"............................ விசும்பின்
வலவன் ஏவா வான ஊர்தி
எய்துப என்ப"

(புறநானூறு– 27ம் பாடல் 7–9வரிகள்)

இப்பாடல் வரிகளில் சொல்லப்பட்ட செய்தியை இன்றைய உலகிலும் காணக் கூடியதாக உள்ளது.

பரிபாடல் :

வானியல் தொடர்பாக பரிபாடல் என்ற சங்க கால நூலிலும் சில தகவல்கள் கூறப்பட்டுள்ளன. திருமாலின் பெருமை பற்றி குறிப்பிடும் போது ஐம்பூதங்கள் தொடர்பான அறிவியற் கருத்துக்கள் இடம்பெற்றுள்ளன.

"ஒன்றினுள் போற்றிய விசும்பும் நீயே
இரண்டின் உணரும் வளியும் நீயே
மூன்றின் உணரும் தீயும் நீயே
நான்கின் உணரும் நீரும் நீயே
ஐந்துடன் முற்றிய நிலமும் நீயே

(பரிபாடல் 13ம் பாடல் 14,18–22 வரி)

இசைமை எனப்படும் ஓசையால் அறியப்படும் வானமும் நீயே; ஓசை ஊறு எனப்படும் இரண்டாலும் அறியப்படும் காற்றும் நீயே; ஓசை, ஊறு, ஒளி என்னும் மூன்றாலும் உணரப்படும் தீயும் நீயே; ஓசை, ஊறு, ஒளி, சுவை என்னும் நான்கால் உணரப்படும் நீரும் நீயே; இறுதியாக ஐம்புலன்களாலும் உணரப்படும் ஒருவன் நீயே என முடிக்கின்றார்.

பரிபாடல் என்ற நூலில் மழை எவ்வாறு பெய்கின்றது என்பதற்கான விளக்கம் கூறப்பட்டுள்ளது.

"நிறைகடல் முகந்து ஊராய் நிறைந்து
நீர் துளும்பும் தம்
பொறை தவிர்ப்பு அசைவிட பொழிந்தன்று வானம்"

(பாடல் 6ம் பாடல் )

மோகமானது நீர் நிறைந்து கடலில் உள்ள நீரை முகந்து கொண்டு விண்ணில் போய்எங்கும்பரவி தன் பாரம் தீர்ந்து இளைப் பாறிக்கொள்ள மழையைப் பொழிந்தது.

"வடவயின் விளங்கு ஆல் உறையெழு மகளிருள்
கடவுள் ஒரு மீன்சாலினி ஒழிய
அறுவர் மற்றையோரும்"

(பரிபாடல் 5ம் பாடல் 43–45 வரிகள்)

இப்பாடல் வரிகளில் வட துருவத்தையொட்டி ஏழு விண் மீன்கள் அடங்கிய பெருங்கரடி என்னும் தோற்றம் கொண்டு விளங்கும் சப்தரிஷி மண்டலத்தைக் குறிப்பிடுகின்றது.

விண்வெளியில் பலகோடி விண்மீன்கள் உள்ளன. இவற்றின் கண்கொண்டு பார்த்த பண்டைத் தமிழன் இருபத்தேழு விண் மீன்களை மட்டும் தன் எண்ணத்தில் கொண்டு ஒருமாதத்தின் இருபத்தேழு நாட்களின் பார்வையில் சேர்த்து அந்த நாட்களில் உதயாதி நாழிகை வேறுபாட்டை அறிந்து கொள்கிறான். இவ்விருபத்தேழு விண்மீன்களையும் பன்னிரண்டாகப் பிரித்துப் பார்க்க முற்பட்டான். இந்த விண்மீன் சுற்றுப் பாதையின் வழியாகவே சூரியன் செல்லும்பாதை அமைகின்றது. பன்னிரண்டு ராசி என்ற பெயர் வரக் காரணமும் இதுவே. இதனைப் பரிபாடல் என்றநூலில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

"விரிசுதிர் மதியமொரு வியல் விசும்பு புணர்ப்ப
எரிசடை எழில் வேழம் தலையெனக் கிழிருந்து
தெருவிடைப்படுத்த மூன்று ஒன்பதிற்றிக்கையுள்
உருகெழு வெள்ளி வந்த தேற்றியல் சேர"

(பரிபாடல் 11ம் பாடல் 1–4 வரிகள்)

பதிற்றுப் பத்து:

குமட்டூர் கண்ணனார் என்ற புலவர் இமய வரம்பன் நெடுஞ்சேரலாதனைப் புகழ்ந்து பாடுகின்ற இடத்தில் வானியல் பற்றிய சில செய்திகள் இடம் பெற்றுள்ளன.

நீல நீர் வளி விசும் பென்ற நான்கின்
அளப்பரியையே
நாள் கோள் திங்கள் ஞாயிறு கனையழல்
ஐந்தொருங்கு புணர்ந்த விளக்கத்தனையை

(பதிற்றுப்பத்து2ம்பத்து14ம்பாடல்1–4வரிகள்)

நிலமும், நீரும், காற்றும், வானமும் என்று சொல்லப்படுகின்ற இந்நான்கு பூதங்களைப் போல நீயும் நின் பெருமையால் இத்துணையாய் என்று பிறரால் அளந்தறிதற்கு அரியனவே. நட்சத்திரங்களும் கோள்களும் சந்திரனும் சூரியனும் மிக்க தீயுமாகிய இவ்வைத்தும் ஒன்றாகக் கூடினாற் போன்ற பேரொளியை உடையவனே ஆவாய்.

பதிற்றுப்பத்து என்ற நூலில் மேலும் சில தகவல்கள் மூன்றாம் பத்தில் வானியல் தொடர்பானதாக அமைந்துள்ளன. (24ம் பாடல்)

நெடு வயினொளிறு மின்னுப் பரந்தாங்கும் என்பது நீண்ட தூரத்தில் உள்ள வானத்தில் ஒளி விட்டு விளங்கும் மின்னலைப் பற்றிக் கூறுகின்றது.

"நீர் நிலந் தீவளி விசும் போடைந்தும்
அளந்து கடை அறியினும்"

(பாடல் வரி 15–16)

இவ் வரிகளில் நீரும் நிலமும் நெருப்பும்காற்றும் வானுமாகிய ஐந்தினையும்அளந்து அறியலாம் என வெளிப்படுத்துகின்றது.

"வறிது வடக்கிறைஞ்சி சீர்சால் வெள்ளி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயங்கெழு பொழுதொடுஆநியம் நிற்ப
கலிழும்கருவியொடு கையுற வணங்கி
மன்னுயிர் புரைஇய வலனேர்பு இரங்கும்
கொண்டல் தண்தனிக் கமஞ்சூல் மாமழை
காரெதிர் பருவம்"

(பாடல் வரிகள் 24-29)

இப் பாடல் வரிகளின் ஊடாக வானியலின் கிரகநிலை, மழைக்காலம் பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன.

வடக்கே சிறிது சாய்ந்துள்ள வெள்ளி என்னும் கிரகமானது பயன் பொருந்திய மற்ற கிரகங்களோடு மழை பொழிதற்குரிய நல்ல நாளில், நீரினைச் சொரியும்மழைத் தொகுதி. நாற்புறமும் கவிந்து உயிர்களைக் காக்கும் பொருட்டு வலமாக எழுந்து ஒலிப்பதும் குளிர்ந்த நீர் தொகுதியுடன் கருக்கொண்ட கார்மேகம் மழை பெய்யாவிடினும் உன் கொடை வற்றாதது.

(வெள்ளி சுக்கிரன்; பயக்கெழு பொழுது, பயனுள்ள கிரகங்கள்; ஆநியம் - மழை பொழிவதற்குரிய நல்ல நாள்; கவிழ்தல் - நீர்சொரிதல்)

## குறுந்தொகை

குறுந்தொகை அகப்பொருள் இலக்கியமாயினும் தலைவன் தலைவி உறவு நிலையை சுட்டிய வேளைகளில் வானியல் பற்றி செய்திகள் இடம் பெற்றிருந்ததனை அவதானிக்க முடிகின்றது.

"சேயுயர் விசும்பின் நீர்உறு கமஞ்சூல்
தண்குரல் எழிலி ஒண்சுடர் இமைப்ப
பெயல் தாழ்வு இருளிய புலம்பு கொள் மாலை

(குறுந்தொகை 314 முல்லை)

மேகங்கள் நீரை முகந்து கொண்டு, மேலெழுந்து மின்னி, யாண்டும் இருள் சூழும்படி யெய்த, கார்காலத்து மாலைப்பொழுதினைக்கண்டு தலைவனோடு இருக்கப் பெறவில்லையே எனதலைவியின் ஆற்றாமையைக் கூறியது போது இக்கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

## சிறுபாணாற்றுப்படை

பதினைந்தாம் நூற்றாண்டுவரை புவிமையக் கொள்கையே பகுத்தறிவின் ஆய்வுப் பயனாக விளங்கியது. வானத்தை உற்று நோக்கி ஆராய்ந்த தமிழர் அதனைதாம் ஆக்கிய இலக்கியங்களில் அவ்வப்போதுகூற முற்பட்டனர். நல்லியக் கோடனை நல்லூர் நத்தத்தனார் பாடிய சிறுபாணாற்றுப்படையில்,

"வாள் நிற விசும்பின்கோள் மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து" (242-243)

என்ற பாடல் வரிகள் சூரியமையக் கொள்கைக்கு வலுச் சேர்ப்பனவாக உள்ளன புவி மத்திய கோட்டில் வாழ்ந்த மிழிர் மட்டுமே சூரியனின் வடக்கு நோக்கிய பெயர்வையும் தெற்கு நோக்கிய பெயர்வையும் அறிய முடிந்தது.

## கம்பராமாயணம்

கம்பன் கவிச்சக்கரவர்த்தியானாலும் அவனிடமும் அறிவியல் சிந்தனை மேலோங்கி யிருந்தது. புவிகோள வடிவமானது என்பதை ககன முட்டை" என்று உருவகித்தவன் ஆகாய விமானம் ஓடிச் சென்ற பின்தான் மேலே எழும் என்ற செய்தியை விமானம் கண்டுபிடிப்பதற்கு முன்னமே வெளியிட்டிருந் தான். சீதையை இராவணன் புஷ்பக விமானத்தில் தூக்கிச் சென்ற பின் இராமன் அந்த இடத்தை நோக்குகின்றான்.

"மண்ணின்மேலவன்தேர் சென்ற சுவடெல்லாம் மாய்ந்து
விண்ணின் ஓங்கிய ஒரு நிலை"

(ஆரணிய காண்டம் பாடல் 78)

இப் பாடல் வரிகளின் படி விமானம் சென்ற இடத்தில் சிறிது தூரம் சக்கரத்தின் அடையாளம் தென்பட்ட பின்னர் மறைந்து விட்டது. இது கற்பனையாக இருந்தாலும் அறிவியல் ஆழம் கொண்டதாகவே காணப்பட்டது.

வானவியலில் சோதிடக் கலையின் ஓர் அம்சமான பன்னிரு ராசிகள் பற்றியும் இருபத்தேழு நட்சத்திரங்களையும் கம்பன் அறிந்திருக்கின்றான். சுபத்திரை ஆயிலியநட்சத்திரத்தில் கடக ராசியில் ஒரு மகனைப் பெற்றாள் என்பதை பின்வரும் பாடல் தெரிவிக்கின்றது.

"தனை அவிழ்தருவுடைச் சயில கோபனும்
கிளையும் அந்தரமிசைக் கெழுமி ஆர்ப்புற
அளை புகும்அரவினோடு அலவன் வாழ்வு
இளையவற் பயந்தனன் இளைய மென் கொடி"

(கம்பராமாயணம் - பாலகாண்டம் - 284)

இப்பாடலில் வரும் அளைபுகும் அரவினோடும் என்பது பாக்கியஆதில்யத்தோடு (ஆதிகேடன்) எனப் பொருள்படும். அலவன்என்பது நேர்ப்பொருள் நண்டு. இங்கு கடகராசியைக் குறிக்கின்றது.

## நற்றிணை

வானியலில் காற்று, மழை போன்றவற்றைப் பற்றிய சில தகவல்கள் நற்றிணை என்ற நூலில் கூறப்பட்டுள்ளன. வானிலையாளர்கள் மழையைக் குறிக்கப் பல சொற்களைப் பயன்படுத்துவதுண்டு. நற்றிணை என்ற நூலில் பரவலாக அவை இடம் பெற்றுள்ளன. இடிமின்னல் மழை பற்றி,

"தழங்கு குரல் ஏறொடுமுழங்கி வானம்
இன்னே பெய்ய மின்னுமாய்"

(நற்றிணை 7ம் பாடல் 5-6 வரிகள்)

இடியோடு மின்னி முழக்கம் செய்து, மழை பெய்யும் என்பதை இப்பாடல் வரி உணர்த்துகின்றது.

"அரவுத் தலை பனிப்ப
படுமழை உருமின் உரற்று குரல்"

(129ம் பாடல் 7-8 வரிகள்)

இடி முழக்கம் கேட்ட படப்பொறி கொண்ட பாம்பின் தலை நடுங்கியதாக கூறப்பட்டுள்ளது.

"…. நாகத்து
அணங்குடை அருந்தலை உடலி, வலன் ஏர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்கலி நல்ஏறு திரிதரும்

கார் செய் மாலை வரூஉம்"

(37ம் பாடல் 8-12 வரிகள்)

இப்பாடல் வரிகள் உணர்த்துவது யாதெனில், பாம்பினது தலை துணிந்து விழும்படியாக வலமாக எழுந்து இடித்து முழங்கி மாலைப் பொழுதில் மழைபெய்யும்என விளக்கப்பட்டுள்ளது.

நற்றிணைஎன்ற நூலில் ஒவ்வொரு திசையில் இருந்து வரும் காற்றுக்கும் பெயர் குறிப்பிடப் பட்டிருந்தது. கிழக்குத் திசையில் இருந்து வீசும் காற்றை நற்றிணை கொண்டல் எனக்கூறும். (74ம் பாடல்) வடக்குத் திசையில் இருந்து வரும் காற்றை வாகை, வடத்தை என்று கூறும் (5ம் 152ம் பாடல்கள்)

**தொல்காப்பியம்**

ஐம்பூதங்களின் சேர்க்கையாகவே பண்டைத் தமிழன் நாம் வதியும் உலகினைப் புரிந்து கொண்டான்.

"நிலம் தீ நீர்வளி விசும் போடைந்தும்

கலந்த மயக்கம் உலகம்"

(பொருள் - மரபியல் 635) எனத் தொல்காப்பியம் கூறுகின்றது.

**ஐங்குறு நூலு :**

ஐங்குறு நூறு என்ற நூலிலும் வானியல தொடர்பான சில கருத்துக்கள் தென்பட்டன. கடவுள் வாழ்த்துப் பாடலில்

"நீல மேனி வாலிலை பாகத்து

ஒருவன் இருதான் நிழற்கீழ்

மூவகை உலகம் முகிழ்ந்தன முறையே "

என்று கூறப்பட்டுள்ளது. மூவகை உலகங்களாவன விண்ணும் மண்ணும் பாதலமும் என்பர். மேல், நடு, கீழ் என வழங்குவதும் உண்டு. உலகங்கள் கோடியாயின் எனக் கூறினாலும் இம் மூன்று வகைக்குள் அடங்கும். மூவகை உலகும் முகிழ்த்தன முறையே என்பன - பரம் பொருளில் இருந்து வானும், வானிலிருந்து காற்றும், காற்றிலிருந்துதீயும், அதினின்று நீரும், அதனிற்று மண்ணும் தோன்றியது என்பதாகும். நீராகி நிலம் படைத்தனை நீராகி நிலம் படைத்தனை,நெருப்பாகி நீர் பயந்தனை, ஊரொழுவிற் காற்றொமுகினை ஒளி காட்டு வெளிக்காட்டினை என்பது பேராசிரியர் வகுத்த உரையென்பது குறிப்பிடத்தக்கது.

சப்த ரிஷி மண்டலம் தொடர்பாக பரிபாடல் என்ற நூல்மட்டுமன்றி ஐங்குறு நூற்றிலும் சில செய்திகள் இடம் பெற்றுள்ளன. சாலினி என்பது அருந்ததியைக் குறிக்கும்.

"அருந்ததி அனை கற்பின்" (ஐங்குறு நூறு 442ம்பாடல்)

என்ற பாடல் வரி இங்கு நோக்கத்தக்கது.

**அகநானூறு**

பழந்தமிழ் இலக்கியங்களில் சூரியன் உதிப்பதும் மறைவதும் பற்றிய செய்திகள் பரவலாக காணப்பட்டன.

"முந்நீர் மீமிசை பலர் தொழத்தோன்றி என

சூரிய உதயத்தை நற்றிணை கூற அகநானூறு.

"சுடர் கெழு மண்டிம் மழுங்க ஞாயிறு

குடகடல் சேரும் படகூர் மாலை"

(அகநானூறு 378ம்பாடல், 14-15 வரிகள்)

என சூரியன் மேலைக் கடலில் மறைந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

சந்திரன் பூமியின் துணைக்கோள் என பிள்ளைத்தமிழ் பிரபந்தங்களில் அம்புலிப்பருவம் ஒன்று உள்ளது. அகநானூற்றில் வரும் தலைவி சந்திரனை இளம்பிறையோடு ஒப்பிட்டுக் கூறுகின்றாள்.

"முகிழ் நிலாத் திகழ் தரும் மூவாத் திங்கள்

பொன்னுடைத்தாலி என் மகன் ஏற்றி

வருகுவைஆயின் தருகுவென்பால்"

(அகம் - 54ம் பாடல் 17-19 வரிகள்)

என் மகனோடுவிளையாட நீவருவாயாயின் உனக்கும் பால் தருவேன் எனக் கூறுகின்றாள்.

சந்திரனும் கார்த்திகை நட்சத்திரமும் அண மித்து இருக்கும் நாளைக் கணககிட்டு திருக்கார்த்திகை விழா கொண்டாடினர்.

"அறுமீன் சேரும் அகல் இரு நடுநான்

மறுகு விளக்குறுத்து மாலைதூக்கி

பழுவிறல் மூதூர் பலருடன் தூண்றிய

விழடன் அயர"

(அகம் - 141ம் பாடல் 8-12 வரிகள்)

என்று கார்த்திகை விழா பற்றி அகநானூறு கூறுகின்றது.

"சகடம் மண்டியதுகள்"

(அகம்136 பாடல் வரி 5)

என்பதில் சகடம் என்னும் உரோகிணி விண்மீனை நெருங்கியே கார்த்திகை விண்மீன் தொகுதி காணப்படு கின்றது.

வானில் தோன்றும் மற்றொரு அழகுப் பொருள் நட்சத்திரங்களாகும். தொலை நோக்கி இல்லாத அந்தக் காலத்தே தம் நுண்ணறிவினால் அவற்றைக் கண்டறிந் தனர்.

"யாமம் கொள்பவர் நாட்டியநனிசுடர்

வாகை மீனின் விளங்கித் தோன்றும்"

(அகம் 114ம் பாடல் 10-11 வரிகள்)

இரவில் காவல் காப்போர் மதிலில் ஏற்றி வைத்த விளக்குகள் போல வானத்தே நட்சத்திரங்கள் தோன்றின.

நிறைவாக சூரியக் செல்லும் பாதை. அதன் இயக்கத்தால் ஏற்படும் மண்டிலம். காற்றின் திசை ஆதாரமின்றி நிற்கும் வானம். ஐம்பூதங்களின் தோற்றம், சப்தரிஷி மண்டலம், அருந்ததி, உரோகணி நட்சத்திரங் கள் திருக்கார்த்திகை விழா எனப் பல்வேறு பட்ட செய்திகள் நம் பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டி ருந்ததை தொடர்ந்து மருத்துவம் தொடர்பாக நம் பழந்தமிழர் அறிந்த செய்தியை அடுத்து தொடர்வோம்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதிலட்சுமி சிவகுமார்.

# விழுதெறியும் வேர்கள்



ஏதோவொரு பேரரசு சாய்ந்து விட்டது போலவும் தொண்டைக்குள் ஏதோ அடைப்பது போலவு மிருந்தது காசிநாதருக்கு. திடீரென்று உடல்வலிமை அனைத்தையும் இழந்துபோய், வெறும்கூடாகிப் போனதாக உள்மனம் நடுங்கியது. வெளியே பார்த்தார். காற்று மரங்களை அசைத்துக்கொண்டிருந்தது. உணர்வற்றுப்போன மாதிரி மரங்கள் அசைவதாக நினைத்துக்கொண்டவர் போல ,அண்ணாந்து பார்த்தார். வானத்தில் கருமுகில்கள் குவிந்துகொண்டிருந்தன.

மகேஸ்வரியைத் திரும்பிப் பார்த்தார். அவள் தலையைக் கவிழ்ந்து உட்கார்ந்திருந்தாள். நிச்சயமாக அவளுக்கு உச்சியில் இடிவிழுந்தமாதிரித்தான் இது இருக்கும் என அவருக்குத் தெரியும். தனக்கே தீயைத் தீண்டிய உணர்வுதான் ஏற்பட்டிருப்பதை காசிநாதர் உணர்ந்தார்.

இடதுகையால் தனது இடதுபக்க நெஞ்சைத் தடவிக்கொண்டார். மனநெருக்கடி ஏற்படும் போதெல்லாம் அவரது இடதுகை எப்போதும் நெஞ்சத்தைத் தடவிக்கொள்ளும்.

எங்கோ ஒரு உயரத்திலிருந்து கீழே தொப்பென அறுத்துவீழ்த்திய அதிர்ச்சிபோலவும் வலிபோலவும் இருந்தது அவருக்கு.

"நீயும் மருமோனும் நினைச்சிருந்தா இதை மாற்றியிருக்க ஏலும்...நான் அம்முவைப் பிழை சொல்லமாட்டன்..." மகள் பவாவின் முகத்தைப் பார்க்காமல் சொன்னார் காசி.

"நாங்கள் எவ்வளவோ சொல்லிப் பாத்தனாங்களப்பா.... காதல் எண்டது இன மத மொழி பாத்து வாறேல்லை எண்டு அவள் எங்களுக்கு வகுப்பெடுக்கிறாளப்பா... நாங்கள் ஆகலும் வற்புறுத்தினால் அங்கையுள்ள சட்டம் அவளின்ரை பக்கம்தான் உதவும் அப்பா.. தயவுசெய்து எங்கட நிலைமையை விளங்கிக் கொள்ளுங்கோ..."

பவாவின் பேச்சில் அவர் கடும் வெறுப்புற்றார். உள்ளேயிருந்த ஏதோவொன்று அவரை அவளுக்கெதிராகப் பேசுமாறு தூண்டிக்கொண்டிருந்தது. மிகவும் சிரமப்பட்டு தன்னைக் கட்டுப்படுத்திக்கொண்டார் காசிநாதர்.

அவரின் அமைதி அவளை ஏதோ செய்திருக்க வேண்டும்.

"வெளிநாடுகளிலை பிள்ளையள நாங்கள் எதிலும் வற்புறுத்த ஏலாதப்பா... நாங்கள் அப்பிடி வற்புறுத்தினா சட்டப்படி அது குற்றம்... எங்களுக்குத் தண்டனைதான் மிஞ்சும்... பதினெட்டு வயசானா பிள்ளையள் தங்கட வாழ்க்கையைத் தாங்களே தீர்மானிக்க அங்க சட்டம் இருக்கு..." என்று அவரின் இறுக்கத்தைத் தணிக்கமுனைவதுபோலச் சொன்னாள்.

"நானும் அதைத்தான் சொல்லுறன் பவா.... அஞ்சில வளையாதது... அம்பதிலும் வளையாது.... பதினெட்டு வயதுக்குள்ள நீங்கள் பிள்ளைக்கு நல்லது எது கெட்டது எது எண்டு புரியிறமாதிரி எல்லாத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொல்லி வளர்த்திருக்க வேணும். பிள்ளை என்ன செய்தாலும் அதிலை உங்கட கவனமும் கட்டாயம் இருந் திருக்க வேணும்... பிழை விட்டிட்டியள்... பிள்ளைக்கு நல்தொரு பாதையிலை போறதுக்கு நீங்கள் கற்றுக் குடுக்கேல்லை..." குரலின் சூட்டைத் தணித்தும், இறுக்கமாகவும் அவர் மகளிடம் பதில் சொன்னார்.

அவள் தன் கையாலாகாத்தனத்தின் வெளிப் பாடாய் விசும்புவது காசிநாதரின் காதில் விழுந்தது. அந்த விசும்பல் அவருக்கு எரிச்சலைத் தந்தது.

"இஞ்ச பவா... எங்கட மொழியும் எங்கட பண்பாடுகளும்... எங்கடை அடையாளங்கள்... எங்கடை இனத்தின்ரை மொழி... பண்பாட்டுச் சிறப்பு களை பிள்ளைகளுக்கு சொல்லிக்குடுத்து.... அதுகளை அந்தப் பற்றுகளோடை வளக்கவேண்டியது தாய்தகப் பன்ரை கடமை.... அதை நீங்கள் ரெண்டு பேரும் செய்யத் தவறிவிட்டியள்... இனி அழுது ஒன்றும் ஆகப்போவதில்லை...".

"................................"

"இஞ்சபார் பவா...... நானொரு தமிழ்வாத்தி யார் தான்.... ஆனா நான் பிள்ளையளுக்கு வெறும் புத்தகத்தை மட்டும் படிப்பிக்கேல்லை.... எங்கட இனத்தின்ர சிறப்புகள் எல்லாத்தையும் தான் கற்றுக் குடுத்தனான்... நான் மாணவர்களுக்குப் போதிக் கேல்லை... ஆனால் வாழ்ந்து காட்டியிருக்கிறன்... என்னட்டைப் படிச்ச நிறைப்பேர் இப்பவும் வெளிநாடு களில இருக்கினம்.... அவையள் தங்கட பிள்ளையளை அதே பற்றோட வளத்து நல்லா வச்சிருக்கினம் தானே... உங்களால மட்டும் அது ஏன் முடியேல்லை... ம்..."

"நாங்கள் என்ன செய்யேல்லை... எல்லாப் பண்பாட்டு நிகழ்வுக்கும் அனுப்பினாங்கள் தானே..... ஒரேயொரு பிள்ளையெண்டு செல்லம் குடுத்தம்...இப்ப அவள் இப்பிடிச் செய்துபோட்டாள்...தகப்பன் மனுசன் தாங்கேலாமத்தான் என்னைப்பிடிச்சு உங்களிட்டை அனுப்பினவர்... இந்தப் பிள்ளைக்காகத்தானே... மனுசர் வாழேலாத அந்தப் பனிக்குளிருக்குள்ளை கஸ்டப்பட்டு அவர் வேலைவேலையெண்டு திரி யிறார்..." அழுகை தணியாமலே பவா சொன்னாள்.

ஒரு தந்தையாய் மனம் இளக முனைந்தது. அதைத் தடுப்பதற்காக வெளியே பார்த்தார்.

பெருவாசலின் வெளியே எரியும் மின்குமிழைச் சுற்றி ஏராளமாய் பூச்சிகள் பறந்துகொண்டிருந்ததை காசிநாதரின் கண்கள் பார்த்தன. அவற்றில் பலபூச்சிகள் பறக்கும் தகைமையிழந்து நிலத்தில் கிடந்து துடித்துக் கொண்டிருந்தன. அவற்றின்மீது அவருக்கு சற்றேனும் இரக்கப்பட முடியவில்லை.

பிறகு மகளின் பக்கம் திரும்பினார்.

"அதைத்தான் நீங்கள்விட்ட பிழையெண்டு சொல்லுறன் பவா... நீங்கள் நிலத்தில கால்பதிக்காமல் ஓடியோடி உழைச்சியள்... எல்லா வசதியளையும் பிள்ளைக்கு குடுத்தியள்... ஆனா... பிள்ளைக்கு வாழக்கையில எப்பிடிவாழவேணும் எண்டு ஒரு வழியைக்காட்ட உங்களுக்கு முடியேல்லை...."

அவர் யார் முகத்தையும் பார்க்க விரும்பாதவர் போல தொலைவில் தெரியும் வானத்தையே மீண்டும் பார்த்தார்.

பவா எதுவும் பேசவில்லை. மகேஸ்வரியும் நிச்சயமாக உள்ளே இடிந்துதான் போயிருப்பாள். அவளைப்பொறுத்தவரைக்கும் ஊரிலை நான்குபேர் நான்கு விதமாகக் கதைப்பினம் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது என்பதை அவர் நன்கறிந்திருந்தார். அவளுக்கும் இது பெருத்த இழுக்காகவே அமையும் என நினைத்தார்.

பவா எழுந்துபோய் அறைக்குள் சென்று கதவைச் சாத்திக்கொண்டுவிட்டாள். குற்றவுணர்வோடு அவள் அறைக்குள் நுழைந்திருப்பதாக அவர் எண்ணிக் கொண்டார். தனக்கும் தன்மனைவிக்கும் பின்னால் இந்தவீடு அவளுக்குரியது என்று எப்போதோ எழுதி விட்டவர் அவர்.

மகள் காட்டிய அந்த வேற்றுநாட்டு இளைஞனின் முகத்தை மனதில் கொண்டுவந்தார். பல் வேறு ஆடைகளுடன் பல்வேறு வகையான கோணங் களில் சிரித்துக்கொண்டும் பந்தாடிக்கொண்டும் வளர்ப்புநாயோடு கொஞ்சிக் கொண்டும் கிட்டார் இசைக்கருவியை அணைத்துக்கொண்டும் கவலை களேதுமற்ற இனிமையானவனாகத் தெரிந்தான் அவன். அவனின் அந்த முகத்தில் மகிழ்ச்சியும் இளமையும் ததும்பியிருந்தன. பார்வைக்கு நல்வனாகவே தோற்றம் காட்டினாலும் அவனை குடும்பத்திற்குள் வரும் புது உறவாக ஏற்க அவரின் மனம் மறுத்துக்கொண்டே இருந்தது. இந்தப் புது உறவைப் பேணுவதில் உடன் பாடற்றுத் தன்மனம் நிலைகொள்ளாமற் துடிப்பதை அவர் புரிந்துகொண்டார்.

மகேஸ்வரி எழுந்து குளியலறை நோக்கிப் போனாள். பின்னர் கைகால் கழுவிக்கொண்டு, தேநீர் எடுத்து வந்து அவரருகே வைத்தாள்.

"மழை வெக்கை... வீட்டுக்குள்ள ஒரே அவிச்சலா இருக்கு..." மீண்டும் தரையில் அவரது காலடிக்கு சற்றேதள்ளி அவள் அமர்ந்துகொண்டாள். அவளைப் பார்க்க அவரது மனதில் கருணை சுரந்தது.

"பிள்ளையின்ரை கலியாணத்திலை பவா சொல்லுறது உனக்குச் சரியா மகேஸ்வரி..." தன் குரலில் கொஞ்சம் தளர்வைக் கொண்டுவந்து கேட்டார் காசிநாதர்.

முகத்தை நிமிர்த்தி அவரை அப்போதுதான் முதல்முதலாகப் பார்ப்பதுபோலப் பார்த்தாள் அவள். ஏதோ பாய்ச்சலுக்குத் தயாரான பூனைக்குட்டியின் கண்கள்போல அவளது கண்களும் தீர்க்கமானது போலத் தோன்றின.

"யாதும் ஊரே யாவரும் கேளிர் எண்டு பிள்ளைகளுக்கு படிப்பிச்ச நீங்கள்... இப்ப உங்கட வீட்டுக்குள்ள ஒருபிரச்சினை வந்தவுடனை இன்னொரு முகம் காட்டுறமாதிரி எனக்கு தெரியுது..."

"அப்ப... பவாகுடும்பத்திலை ஏற்பட்டிருக்கிற நிலைமையை நீயும் சரியெண்டு ஏற்கச் சொல்லுறியோ..."

"அப்பிடி நான் சொல்லயில்லை... இது பிள்ளை யளின்ரை காலம்... அதுகள் தங்கட மனதுக்கு பிடிச்ச வாழ்க்கையை வாழுறதுக்கு எல்லா உரிமையும் இருக்கு... நாங்கள் சொல்லி ஏதோ நடக்கப்போகுதே... வெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்காரர் ஆர்... அதுகளும் மனிசர்தானே... அம்மு அங்கை வளர்ந்த பிள்ளை... அங்கையுள்ள மனிசரோடையும் அவையளின்ரை பழக்கவழக்கங்களோடையும் கலந்துவாழுற வாழப்போற பிள்ளை... அந்தப் பிள்ளைக்கு அது பிடிச்சுப்போயிட்டுது... பவா என்ன செய்ய ஏலும்?... அவளை ஏன் இப்பிடித் துன்பப்படுத்துறியள்..."

"ஓ... நீயும் கண்டதெல்லாத்தையும் வாசிச்சு வாசிச்சு வளர்ந்து...உலகமயமாக்கல் பற்றிப் பேசுறாய் போல..." அவரின் குரலில் வேதனையும் எள்ளலும் தொனித்தன.

தேநீரை எடுத்துத் தள்ளிவைத்தார். தேநீருக்குள் கலங்கலாய்த் தெரியும் தன் முகத்தைப்பார்த்தார். அலைவுறும் அவரின் மனதைப்போலவே அதுவும் கலங்கிக் கொண்டிருந்தது.

மழையும் தொடர்ந்து தூறிக்கொண்டுதான் இருந்தது. வீட்டைவிட்டு வெளியே செல்லவும் மனம் ஒப்பாமலிருந்து. கோயிலடிச் சந்திவரை நடந்து போய் விட்டு வந்தால் உடலுக்காவது தெம்புவரும்போல இருந்தது.

இந்தப் பருவமழைக்காலத்தில் தான் பவாவும் ஊருக்கு வந்திருக்கிறாள். தோட்டக்காணிகள், பள்ளக் காணிகள் எங்கும் வெள்ளம் நிறைந்திருக்கிறது. பயிர்களும் குடிசைகளும் அழியும் நிலைக்கு வந்து விட்டன. இனி டெங்கும் மலேரியாவும் தொற்றத் தொடங்கும். எல்லாவற்றையும் நினைக்க அவரின் மனது கலங்கியது.

இப்போ சமையலறைக்கும் சாப்பாட்டு மேசைக்கும் மாறிமாறித் திரிந்துகொண்டிருந்த பவாவைப் பார்த்தார். நாற்பது வயதுக்கு மேலாகிவிட்ட போதும் அவரின் கண்களுக்கு சின்னப்பெண்போலவே தோற்றங் காட்டுவது போலிருந்தாள். முதுமையைத் தொட எத்தனிக்காத அவளின் தோற்றம் அவருக்கு நிம்மதியைத் தந்தது. ஒரு தந்தையாக மகள்மீது மனதுக்குள் புளகாங்கிதமுற்றார்.

ஊரில் பெண்பிள்ளைகளுக்கு இருந்த வெளித் தெரியாக் கட்டுப்பாடுகள் எதையும் திணிக்காமல்தான் அவளை அவர் வளர்த்திருப்பதாக எப்போதும் அவர் நினைத்துக் கொள்வார்.

வானூர்தி நிலையத்திலிருந்து வீடுவரும்வரை பலதரப்பட்ட விடயங்களையும் கலகலப்பாக கதைத்துக் கொண்டு வந்திருந்தாள் பவா. அவள் கூண்டுக்கிளியாக இல்லாமல் வானம்பாடியாகத்தான் அங்கும் வாழ்கிறாள் என்றெண்ணியவருக்கு பெருமை பிடிபடமறுத்தது.

ஆனால் அவள் வெளிநாட்டிலிருந்து கொண்டு வந்த அதிர்ச்சி அவரை உலுப்பிக் கொண்டிருந்தது. ஒவ்வாத உணவொன்றை உண்டு முடித்தபின் நெஞ்சுக்குள் அது படுத்துமே அந்தப்பாடு, அதைப்போலவே இப்போது தனக்குள்ளும் உருவாகியிருப்பதை எண்ணிக் கொண்டார்.

ஏழு வயதில் பேத்தி அம்மு ஊருக்கு வந்திருந்த போது, அவரின் விரல்பற்றிக்கொண்டு துர்க்கையம்மன் கோயிலுக்கு வந்திருந்தாள். கோயில் வீதிகளெங்கும் வானம்பாடியாய்ப் பறந்து திரிந்தாள்.

நாதஸ்வரக் கலைஞரிடம் போய் நின்று அதனைத் தான் வாசிக்கப்போவதாக அடம்பிடித்தாள். அந்தக் காட்சிகளெல்லாம் அவரது மனக்கண்ணில் மீளத் திரையிடப்படுவதை எண்ணிக் கவலைகொண்டார்.

அந்தச் சிறுவயதில் அவள் தேவாரம் பாடியதும், சிறுவர்களுடன் விளையாடியதும் பொங்கல் நாளுக்கு பொங்கலை சுவைத்து உண்டதையும் வளவு முழுவதும் கோழிகளைத் துரத்திக்கொண்டு ஓடியாடித் திரிந்ததையும் அவர்மனம் மீட்டுப்பார்த்தது.

பெருமூச்சோடு நாற்காலியில் அமர்ந்தார்.

தான் பல்வேறு இடங்களில் பல்லின சமுகத்துடன் ஆசிரியப்பணி புரிந்ததையும், எங்கே பணி புரிந்தாலும் என்ன நிகழ்வுகளுக்குப் போனாலும் பண்பாட்டு உடையோடு சென்றதையும் நினைத்துப் பார்த்தது அவரின் உள்மனம்.

உடை என்பது காலநிலைக்கு ஏற்ப அணியப்படுவது என்பது அவருக்குத் தெரிந்திருந்தாலும் அதில் ஒரு மனநிறைவு தனக்கு ஏற்பட்டதையும் நினைத்துக் கொண்டது அவருள்ளம்.

"எங்கட இனம் என்னமாதிரியெல்லாம் அழிஞ்சுகொண்டு போகுது... ஒருதருக்கும் ஏன் இது புரியுதில்லை மகேஸ்வரி..."

தளர்வடைந்தமனதோடு மனைவியிடம் மன்றாடுவதுபோலக் கேட்டார்.

தனக்குள் இருந்து துயரம் திரள்வது அவருக்குத் தெரிந்தது. மீண்டும் இடதுகையால் நெஞ்சைத் தடவிக் கொடுத்தார்.

உள்ளே சுள்ளென்று வலிப்பதாக உணர்ந்து கொண்டார்.

"என்னப்பா..."

மகேஸ்வரி எட்டி அவரது முழங்காலைத் தொட்டாள். அவர் எதுவும் பேசாமல் இருந்தார். அவளது முகம் உள்ளே நிகழும் கலவரத்தை வெளிக் காட்டியது.

வானத்தை யாரோ கத்தியால் கீறியது போல பளிச்சிட்டு மறைந்தது மின்னல்.

"ஐயோ...கடவுளே..." மகேஸ்வரி செவிகளைப் பொத்திக்கொண்டாள். வானம் அறுந்து கொட்டியது போலவொரு இடிமுழக்கம். கனவுகளில் கொட்டுவது போல இரைச்சலோடு மழை வந்துகொண்டிருந்தது.

அவர் மகேஸ்வரியைப் பார்த்தார்.

"இஞ்ச பார் மகேசு... நானும் நிறம் மதம் இனம் எண்டு பேதம்பாக்கிற ஆளில்லை... ஆனா... எங்கட நிலைமையைக் கொஞ்சம் யோசிச்சுப்பார்... நான் ஊருலகத்துக்குப் பயப்பிடேல்லை... எங்கட இனத்திலை பிறந்த எத்தினையோ பிள்ளையள் வேறநாட்டுக் காரரைக் கலியாணம் செய்திருக்கினம்... அது அவையின்ர தனிப்பட்ட பிரச்சினை... ஆனா அதிலை உள்ள இன்னொன்றை அவை நினைக்கிறேல்லை எண்டதுதான் என்ர கவலை..."

வெளியே மழைநீர் கூரையிலிருந்து பீலி வழியாக நிலத்திற்கொட்டும் சத்தம்மட்டுமே கேட்டுக் கொண்டிருந்தது. இடிமுழக்கத்திற்கு அச்சமுற்றோ என்னவோ பவா வெளியே வந்து தாயருகே அமர்ந்து கொண்டாள். அது தனக்கு வாய்ப்பாக அமர்ந்திருப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாக அவருக்குத் தோன்றியது.

"நான் என்ன சொல்லவாறன் எண்டால் மகேசு... அந்தக் காலத்திலை இருந்து இன்றைக்குவரை எங்கடை சனம் போராலையும் நோய்நொடியளாலையும் இலச்சக் கணக்கிலை அழிஞ்சுபோச்சுது... எங்கடை இனப் பரம்பல் விகிதக் கணக்கெடுப்பை ஒருக்கால் நினைச்சுப் பாருங்கோ... முந்தியிருந்ததைவிட இப்ப எவ்வளவு குறைஞ்சுபோச்சுது தெரியுமே... அதாலை எங்கட நிலப்பரப்புகள் எவ்வளவோ கைவிட்டுப் போச்சு"

"எப்ப பாத்தாலும்... ஆர்வந்தாலும் உந்த அரசியலைத்தானே கதைக்கிறியள்... உதைக் கேட்டுக்கேட்டு எனக்கே சலிச்சுப்போச்சு..."

நெருக்கடியான குடும்ப சூழலிலும் அவருக்குள் ஒரு வெற்றுப்புன்னகை பிறந்தது.

"இது அரசியல் எண்டு அதிராதையுங்கோ.... கனபேர் நான் அரசியல் கதைக்கிறன் எண்டு நினைச்சு கதைக்கவே அச்சபட்டு ஒதுங்குகினம்... எனக்கு எல்லாரையும் விளங்கும்... அவை போகட்டும்... என்ர இனத்திலை இருக்கிற பற்றாலைதான் நான் இதைக் கதைக்கிறன்... இது எனக்கு ஒரு கடமை எண்டு நினைக்கிறன்..."

"..................."

நாங்கள் வெளிநாடுகளிலை வேற்றுநாட்டுக் காரரைக் கலியாணஞ்செய்து செய்து கரைஞ்சு போறதும் ஒரு இன அழிப்புத்தான்... எங்கட இனத்துக்கு அழிவை நாங்களும்தான் செய்துகொண்டிருக்கிறம்... தயவு செய்து அம்முவுக்கு இந்த விசயத்தை தெளிவு படுத்துங்கோ... தமிழினம் பெருகவேணும்... வருங் காலத்திலை ஒவ்வொரு பிள்ளையும் இப்பிடிக் கரைஞ்சு கரைஞ்சு கொண்டுபோனால்... எங்கட இனமே காணாமற்போயிடுமெல்லோ.... பேரே மாறினாப் பிறகு... நாளைக்கு தங்கட வேரை எங்க அவை தேடப்போகினம்?..."

மழையின் இரைச்சலையும் மீறிக் காசிநாதரின் குரல் வெடித்துச் சிதறியது. வெளியே மழையின் மூர்க்கம் அதிகமாகிக்கொண்டிருந்தது. வானம் விட்டு விட்டு மின்ன... இடியும் மழையுமான சூழல் வெளியெங்கும் தொடர்ந்தது.

---

**கிரிசாந் 2 கவிதைகள்**

## தெய்வம் பெறல்

ஊழிலமைந்த ஊண் தேறல்
கனவழைத்த மந்திரம்
சிமிழ் திறந்த மயக்குபுகை

அழைந்து நாணூற்றி
தோலுருவிப் பிசைந்து

காதுருகி

கூந்தல் வளைய

முனகத் திறந்த வாய்க்குள்
கண்டேன் ஊழிருள் உதித்த வயிற்றை

முகத்தில்
புயற் கண் விரித்த விழிகளை

தோளில்
அழுத்தி வீசும் கைச்சிலையை

எப்படிப் பெற்றேன்
என் தெய்வத்தை வசியம் செய்யும்
எழுமிச்சையை.



## துக்கத்தின் வால்

துக்கத்தின் உச்சங்கொம்பில்
காமம் ஒரு குரங்கென தியானம் செய்துகொண்டிருக்கிறது

அதன் துடிமிகு வால் அசையவில்லை
புருவங்களின் குறும்பு விரியவில்லை
கைகளில் தியான முத்திரை

அசைவே இல்லாத அது
அளவற்றுப் பெருகும் தவிர்க்க ஒண்ணாத இவ் வெள்ளத்தை
எதிர் கொள்ளும் சிறுகம்பு
ஆனாலும் அக்கம்பில் ஒரு எறும்பு அமர்ந்திருக்கிறது
தியானத்தின் உணர்கொம்புடன்

குரங்கின் வாலிலும்
எறும்பின் கரத்திலும்
ஒரு கண்ணீர்த் துளியென
துக்கம் தனித்திருக்கிறது

ஒரு வானவில் ஒளிர வைக்கும் சூரியனுக்காக.

(மார்கழி 2023)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னவயதில் 'Reader's Digest' புத்தகங்களை நான் தரிசித்தது, எங்கள் விஞ்ஞான கபாரூக் sir வீட்டில் தான். அவர் வாசித்து விட்டுத் தரும் புத்தகங்களை முக்கித் தக்கி வாசிப்பேன். என் ஆங்கிலத்து மீதான தேடல், தவிப்பை அவர் வெகுவாய்க் கண்டு கொண்டிருந்தார். என் மீது நிறைந்த அன்பு கொண்டிருந்தவர் அவர். எனக்கும் இன்றும் மாறாதிருக்கிறது, அவர் மீதான அன்பும் மரியாதையும். என்ன சொல்ல? பிரார்த்தனை தவிர வேறொன்றும் இல்லை அன்பைச் சொல்ல.


Reader's Digest களை அப்படியப்படி வாசிக்க எடுத்ததில், என் நெஞ்சுக்குப் பிடித்த ஒரு கட்டுரையாளராக என் பதினாறு, பதினேழு வயதுகளில் எனக்குள் பதிந்தவர் இந்திய எழுத்தாளுமை Ruskin Bond. பின்னாட்களில் நான் Ruskin Bond எழுதிய கட்டுரை ஒன்றை என் "அந்தப் புதுச்சந்திரிகையின் இரவு" மொழிபெயர்ப்புக் கட்டுரைகளடங்கிய தொகுதியில் சேர்த்தும் இருந்தேன். அது 'The Man who Loved Trees' எனும் தலைப்பு கொண்ட கட்டுரை. "மரங்களை நேஸித்த அம்மனிதர்" என்று ருஸ்கின் பொன்ட் சொல்வது தன் பாட்டன் குறித்து. அதன் வரிகள் இன்னும் ஞாபகம். நெஞ்சுள் ஓடுகின்றன வரிகள். இயற்கை மீது விரிந்து படரும் என் அன்பை, அவருடைய பிரியம் மேய்ந்த எழுத்திலும் உணர்ந்தேனா நான்...? இருக்கலாம்.

"உண்மையான ஒரு காதலுடன் என் பாட்டன் மரங்களை அணுகினார். அவைகளும் அதையே அவ்வுணர்வையே - அவருக்குத் திருப்பிச் செலுத்தின என்பதை நான் உணர விரும்பினேன்." என்று தொடங்கும் அதன் வரிகள். மேலும் சொல்வார் அவர்,

"வராந்தாத் திண்ணையில் ஒருநாள் காலை என் பாட்டனுடன் அமர்ந்திருக்கிறேன் நான். தோட்டத்தில், கொடியொன்று தன்னுடலை நகர்த்தி நகர்த்திப் படர்ந்து நம்மருகே வருவதுபோல ஓர் உணர்வு. வட இந்தியக் குளிர். மென்மையான சூரிய வெளிச்சம். என்ன ஆச்சரியம்! படர்க்கொடிக் கான கொழு கொம்பொன்று என் பாட்டனை நோக்கி வருவதாக உணர்ந்தேன். வியப்போடு அதன்

# Ruskin Bond இன் வண்ணத்துப்பூச்சியாகிறேன்...

கெக்கிறாவ ஸுலைஹா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழகை ரசித்திருந்தேன் நான். சுமார் இருபது நிமிடங்களின் பின், அதன் நீண்ட இலைகள் என் பாட்டனின் கால் பாதத்தை தொட்டபடியிருக்க கொடி, படிகள் வழியே படர்ந்தும் வளைந்தும் கிடந்தது. வெளிச்சத்துக்கும், கதகதப்புக்கும் தாவரங்கள் தன்னை வளைத்து வேண்டுவதை விஞ்ஞானம் இயம்பி நிற்கக்கூடும். ஆச்சர்யமில்லை. ஆயினும், அது அடியெடுத்து அடியெடுத்து, மெல்ல நகர்ந்து வந்தது என் பாட்டனின் அருகாமை வேண்டியே என்பதை நான் உணர்ந்து கொள்கிறேன். அவர் தன்னருகே மரங்கள் இருப்பதை எப்போதும் நாடி நின்ற ஒருவர், ஆமாம். நான் அப்படித்தான் நினைக்கிறேன். சிலவேளைகளில், ஒரு மரத்தடியில் தனியே போய் உட்கார்கையில், மிகுந்த தனிமையை உணர்ந்த வேளைகளில், பாட்டனுடன் போய் இருந்தால், தோட்டமே ஒரு அழகு பூமியாக மாறுவதாக நான் உணர்ந்திருக்கிறேன்.."

ருஸ்கின் பொன்ட் மே, 19 1934 களில் பிறந்தவர். ஏறக்குறைய ஐநூறு சிறுகதைகள், கட்டுரைகள் நாவல்கள் எழுதிய பெரியவர். அவற்றுள் எழுபதுக்கு மேற்பட்டவை சிறுவர்க்கான இலக்கியங்கள்.

தந்தை ஒரு ராணுவ முகாமில் பிறந்தவர். பின்னாட்களில் அவர் பிரத்தியேக வகுப்பு செய்யும் ஒரு ஆசிரியராக வட இந்திய பிரதேசத்தில் வாழ்ந்த இளவரசிகள், இளவரசர்களுக்கு கற்பிக்கும் ஒரு சிறு பள்ளிக்கூடத்தில் படிப்பிக்க ஆரம்பிக்க, ஆறு வருடங்கள் ருஸ்கினும் அவரது சகோதரியும் அங்கேயே கற்றனர். அரசு ராணுவப்படையில் 1939இல் தந்தை சேர, டெஹ்ராவில் தன் தாயுடனும் தங்கையுடனும் இவர் தந்தையை பிரிந்து வாழ வேண்டியேற்படுகிறது. எட்டு வயதில் அம்மா விவாகரத்து பெற்றுக் கொண்டு இன்னொரு சீக்கியருடன் அவரது புதுவாழ்வைத் தொடங்க, தந்தையர் பணியில் இருக்கும் வேலைத் தளத்துக்கு அருகில் தங்கவைக்கப்பட்டார் ருஸ்கின் பொன்ட். தந்தையோடு கழிந்த காலங்கள் அவருக்கு மிக மகிழ்ச்சிக்குரியவையாக இருந்தன. பத்து வயதில் துரதிஷ்டவசமாக மலேரியா கண்டு தந்தையும் இறந்து விட, தனித்துத்துவண்டார் அவர். "தந்தையின் இறப்பு பற்றி ஆசிரியர் ஒருவர் வகுப்பில் வந்துதான் எனக்கு மெல்ல அறிவிக்கிறார். நிறைய உடைந்து போனேன்" என்று எழுதுகிறார் அதுபற்றி. முதல் சிறுகதை "Untouchable" பதினாறு வயதில் வெளிவந்தது. பதினேழு வயதுகளில் அவர் எழுதிய 'The Room on the Roof' அவரது சுயம் சொல்லுவது. John Llewellyn Rhys Prize ஐ 1957 களில் வென்ற நூல் அது.

"எனது பாட்டன் இந்திய வனசேவையில் நெடுங்காலம் பணிபுரிந்த ஒருவர். எனவே, அவர் மரங்களை அதிகம் நேஸித்ததும், அவை பற்றி அதிகம் அறிந்திருந்ததும் இயல்பே. பணியிலிருந்து ஓய்வு பெறுகையில், டெஹ்ரா நகரின் புறக்கரையில், சுற்றிவர மரங்கள் நட்ட ஒரு பங்களாவை அவர் நிறுவினார். தேசி, மா, தோடை, கொய்யா, யூக்கலிப்டஸ் என்றெல்லாம் மரங்கள் செழித்து உயர்ந்து உறுதியாய் வளர, அப்பள்ளத்தாக்கின் வளமான மண் துணை புரிந்தது." என்று எழுதுகிறார் அவர்.

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

"அவ்வில்லம் அமைவதற்கு முன்னமேயே பழையதோர் அரச மரம் உட்பட இன்னும் சில மரங்கள் அங்கிருந்தன. கைவிடப்பட்டிருந்த நமது புறவீட்டின் சுவர்களை ஊடறுத்து, தன் பயங்கர வளர்ச்சியால், சுவர்களை வெடிப்புக்குள்ளாக்கி, செங்கற்களைத் தகர்த்து வைத்திருந்தது அவ்வரசமரம்.

அவ்வரசமரம் அற்புதமாகக் காட்சி தருவது. காற்றில்லாத வேளைகளில் கூட, அதன் அகன்ற மார்பும், மெல்லிய இடையும் கொண்ட இலைகள் பம்பரங்கள் போலச் சுழன்று கவனத்தை ஈர்த்து, எப்படியோ தன் நிழலுக்குள் எம்மை கொணர்ந்து விடும்." என்று நினைவு மீட்டுகிறார் அவர் அதிலே.

மேலும் அவர் தன் பாட்டி பற்றியும் எழுதுகிறார், "பாட்டியோ அவ்வரசமரத்தை வெட்டிவிடுமாறு எப்போதும் நச்சரித்து வந்தார். பாட்டனோ, "அது தன் போக்கில் வளரட்டும் தேவையானால், இன்னொரு புறவீடு கட்டிக் கொள்ளலாம்", என்பார் பதிலாக. பாட்டி, மரங்கள் பற்றி நிறைய அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், பூமரங்கள் என்றால் ரொம்பப் பிரியம் அவளுக்கு பாட்டனும் பூமரங்கள் நடுவதில், பாட்டிக்கு நிறைய உதவுவார். பூமரங்கள். பூக்கள் மீது கொண்ட பித்துக்காகவன்றி, வண்ணத்துப்பூச்சிகளை அவதானிக்க அவாவியே அவர் அப்படிச் செய்தார். "வண்ணத்துப் பூச்சிகளை கவர்ந்திழுக்க ஒரே வழி இதுதான்" என்பார் பாட்டன். தனது தோட்ட எல்லைக் குள் மட்டுமே மரம் வளர்ப்பதை அவர் விரும்பவில்லை. மாறாக, மழைக்காலமெல்லாம் ஆற்றுக்கப்பால் வனங்கள், தோப்புவெளி, புதர்கள் வழியே நடந்து, தான் நட்ட மரங்களைப் போய்ப்பார்ப்பதுவும், ஒரேயளவாக அவற்றை வெட்டிவிடுவதுவும், அது அழகுறக்காட்சி தருவதைக்கண்டு ரசிப்பதுவும் அவரது வேலையாக இருந்து வந்தது.

"யார் இதைப் பார்க்க வருகிறார்கள்? எவரும் பார்க்க வருவதற்கில்லை." முதல் தடவையாக இதன் பொருட்டு அவர் பாடுபடுவது தாளாமல் பாட்டனாரைக் கேட்கிறார் ருஸ்கின். "வருவோர் போவோரின் காட்சிக்காக இல்லை இதை நான் செய்து வருகிறேன். மரங்கள், தாவரங்களை நம்பி வரும் பறவைகள், விலங்குகளை உணவின்றி, தங்குமிடமின்றி அலையவிட நேர்வது கூடாதில்லையா?" என்று சொன்னவர், சற்றுத் தாமதித்து, "உண்மையில், மனிதனுக்கும் மரம் தேவைதான்" என்றார் ஆழமாக. மேலும் பாட்டன் சொன்னார், "பூமி பாலைநிலமாக மாறுவதை காணப் பொறுக்க மாட்டேன் நான் ஆற்றின் கரைகள் மண்ணாகிக் கரைந்தோடுவதைக் காண ஆசையில்லை எனக்கு. பூக்கள், கனிகள், இலைகள், விதைகள் என்பவற்றுக்காயும் மரங்கள் தேவை. பிரதியீடாக ஒன்றை நட்டு வைக்காமல், இருப்பதைக்கூட தன் தேவைக்காக மனிதன் வெட்டி விடுகிறான். நாமும் ஒன்றிரண்டை நடாமல் விட்டால், ஒரு காலம் பூமி பாலைநிலமாகக் காட்சி தருமல்லவா?"

ருஸ்கின் சொல்வார், "மரங்களற்ற உலகு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது ஒருவகைக் கொடிய கனவு என்றானது எனக்கு. மிகுந்த உற்சாகத்தோடு அவரது மரம் நடும் பணியில் நான் அதன் பின்னரெல்லாம் என்னையும் ஈடுபடுத்திக் கொண்டேன்."

"ஒருநாள் இந்த மரங்கள் மறுபடி நகர வாரம்பிக்கும்" தாத்தா சொன்னார். "பலகோடி ஆண்டுகளாக அவை நின்று கொண்டேயிருக்கின்றன. முன்பு, மனிதனைப்போல அவைகளும் நகர முடிந்த காலம் ஒன்று இருந்தது. தலையீடு செய்கிற மாதிரி ஒரு பெரும் மந்திரசக்தி வந்து, மரங்கள் மீது மந்திரம் ஓதின. வேர்களும், மரங்களும் அவ்வவ்விடங்களில் பதிந்தன. ஆனாலும், அவை எல்லாமும் நகர முயற்சித்த வண்ணமேயிருக்கின்றன. தத்தமது கைகளால் அவை நம்மை தொட முயற்சிப்பதையும், தொலைவுக்கு நகர முயற்சித்து வேர்களால் பரவுவதையும் நீ பார்த்த தில்லையா? ஆலமரத்தின் தொங்கும் வேர்கள் தழுவத் துடிப்பது கண்டதில்லையா?" தாத்தா கேட்டார் என்னிடம்." ருஸ்கின் சொல்கிறார்.

நாம் ஒரு தீவைக் கண்டோம். அது மலைசார் பிரதேசத்திலிருந்தது. கோடை காலத்தில் ஆற்றுவெளி வரண்டு போகும். மழைக்காலத்தில் ஆறு வெள்ளப் பெருக்கெடுக்கும். ஒரு சின்ன மாமரம் செழித்து வளர்ந்திருந்தது அத்தீவில், "மாமரத்துக்கு இப்படி, இங்கே வளர முடிகிறதெனில், மற்ற மரங்களுக்கு முடியாதா?" தாத்தா கேட்டார். மழை ஓய்ந்து சில நாளில், நடந்தே அங்கே போய், புளிய மரங்கள், செடிகள், கொடிகள், தண்டுகள், இன்னும் மரஞ்செடி கொடிகள் பல பலவற்றை நட்டு வந்தோம் நானும், தாத்தாவும், எதிர்ப்பாராமல் ஒரு மழைக்காலம் வந்தது. எல்லாமும் பார்க்கவே புதுமையாகக் காட்சி தந்தன. இலை, கிளைகளற்று மொட்டையான மரங்களோடு காட்சி தந்த அவ்வரள்பூமி மழையின் மந்திரத் தொடுகையினால் மலர்ந்து செழித்தது. எங்கும் பசுமையே சூழ்ந்து கிடந்தது. பொருந்தாத இடங்களிலும் மரங்கள் தளைத்தன. கொடிகள் தம் அகன்ற இலை களோடு செழித்து வளர்ந்தன. கூரைகளிலும் கூட அரசமரங்கள் வேர்விட்டன. யன்னலண்டைகூட மா தளைத்தது. அகற்றி வீசக் கூட மனம் வரவில்லை நமக்கு. ஆனாலும், வீடு விழாதிருக்கவேண்டி, அவற்றில் சில கிளைகளை அகற்றியேயாக வேண்டிய நிர்ப்பந்தத்தி லிருந்தோம் நாம்.

"நீங்கள் மரங்களோடு வாழுங்கள். எனக் கொன்றும் ஆட்சேபணையில்லை. என் தலைக்கு மேலே கூரைதான் இருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். காடு அல்ல" பாட்டி கோபமாய் முறைத்தார்.

இரண்டாம் உலக மகாயுத்தம் வந்தபோது, ஒரு விடுதிக்கு நான் அனுப்பப்பட்டேன். பள்ளி விடுமுறையில் என் தந்தையோடு டெல்லிக்கு அனுப்பப்பட்டேன். தாத்தாவும், பாட்டியும் வீட்டை விற்றுவிட்டு. இங்கி லாந்து பயணமானார்கள். இரண்டு, மூன்று வருஷங் களின் பின், என் உயர்க்கல்விக்காக நானும் இங்கிலாந்து போனேன், என் கல்விக்காக நாள் இந்தியாவுக்கு வெளியேதான் அதிகமாக இருக்க வேண்டியிருந்தது. அண்மையில் எப்படியோ மறுபடி டெஹ்ராவுக்கு விஜயம் செய்தேன். என் முதல் பார்வையில் நான் அவதானித்த வரை, பழைய வீட்டில் பெரிதாக மாற்றங்கள் இல்லாதது போலத்தானிருந்தது. ஆற்றங்கரை நோக்கி நான் நடந்தேன். அது பெப்ரவரி மாதம். காய்ந்து வரண்டிருந் தது பழைய நீர்வெளி என் கண்கள் சிவப்பு அரும்பு களாய்ப் பூத்திருந்த "கோரல்" மரங்களின் மலர்ச்சி கண்டு அதன்பால் ஈர்க்கப்பட்டன. காய்ந்து வரண்ட பருவகாலமாயினும், ஒரு சின்னப் பசுஞ்சுவர்க்கத் தீவினது பூமியை அங்கே நான் அவதானித்தேன். மரங்களண்டை போய் கூர்ந்து அவதானிக்கிறேன். அணில்கள் அங்கு ஓடி விளையாடின. நீண்ட வால் குயிலொன்று எனைப் பார்த்து, "நீ யார்? நீ யார்?" என்று சவாலாய்ச் சிந்துபாடிற்று.

ஆனாலும் அம்மரங்களுக்கு பரிச்சயமானவனா கவே நான் தோன்றினேன். தமக்குள்ளேயே அவை ஏதேதோ பேசிக் கொண்டன. என்னைத் தன்னருகே அழைத்தன. பெரு மரங்களினடியில் சின்னத்தாவரங் களும், காட்டு மரங்களும், புல்லும் செடிகொடிகளும் செழித்துக்கிடந்தன. ஆமாம். என்றோ நாம் நட்டிய மரங்கள் பலகிப் பெருகியிருக்கின்றன. அவைகள் நடக்க மறுபடியும், ஆரம்பித்திருக்கின்றன. உலகின் எங்கோ ஒரு சின்ன மூலையிலிருந்து என் பாட்டன் கண்ட கனவு நனவாகியிருக்கிறது." என்று எழுதுவார் அவர். அழகான நினைவின் கொண்டாட்டங்கள் அவை.

'Our Trees still grow in Dehra ', 'A Flight of Pigeons', 'The Blue Umbrella', Granny's Tree Climbing ', 'Angry River' போன்றன அவரின் அழகான மென்மை இலக்கியங்கள். பத்மஸ்ரீவிருது, சாகித்திய அகாடமி விருது, பத்மபூசன் விருது என்றெல்லாம் பல அடைவுகளை எய்தவை அவரது இந்த இலக்கியங்கள்.

'Scenes from a writer's Life' கட்டுரையில் அவர் எழுதுகிறார், "இனம் ஒன்றும் என்னை வளர்க்கவில்லை. மதமும் என்னை வளர்க்கவில்லை. வரலாறு தான் அதைச் செய்தது. வாழ்வின் நெடு வீதியில் வரலாறு பற்றி மட்டுமே என்னால் கணக்கில் கொள்ள முடியும்.." அவரது நல்லிணக்கம் மீது எனக்கு வரும் நேசத்தை பொருந்திக் கொள்கிறேன்.

சமீபத்தில் எப்படியோ கரம் கிடைத்த Sunday Times of India, Chennai May 28, *2023* திகதி பத்திரிகையில் ஒரு நேர்காணல். சட்டென்று கண்ணில் படுகிறது. ஆம்...My man, Ruskin Bond.

The Golden Years -The Many Joys of Living A Good Long life என்று ஒரு நூல் வெளியீடு செய்து, தன் 89ம் பிறந்தநாளை வெகு உயிர்ப்புடன் வித்தியாசமாய் கொண்டாடிய Ruskin Bond ஐ அவரது டுயனெழரச இல்லத்தில் பேட்டி காணுகிறார் Shobhaa Dee. இன்னமும் வாசித்துக் கொண்டும், எழுதிக் கொண்டும், ஜன்னலில் வந்து தங்கிப்போகும் குட்டிப்பட்சிகளுடன் கதையாடிக் கொண்டும் இருக்கும் அவரிடம் கேட்கப்பட்ட வினாக்கள் குறித்தும் அதற்கு அவர் சொன்ன விடைகள் குறித்தும் சிந்தனையில் நீள்கிறேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான். அது பற்றி இன்னும் நீளமாக எழுதிவிட முடியவேண்டும் எனக்கு...

கேட்கப்படுகிறது அவரிடம், "89 இல் 29 ஐ, 29ஆய் ஆக நீங்கள் விரும்புவீர்களா?" அவரது பதில் இப்படி அமைகிறது.


"இல்லை. நான் என்னை வயதானவனாக உணரவில்லை. எழுத்து சிலபோது எனை களைப்பூட்டு கிறது. இடையிடையே சில வலிகள், வேதனைகள் வந்து போகின்றன. கண்ணாடியில் முகம் பார்க்கிறேன். பற்கள் சில வீழ்ந்தும் இருக்கின்றன. கன்னச்சதை தொங்கிக் கிடக்கிறது. ஆனால் மனோரீதியாக நான் அதே அளவு 29, அன்றி 19, சிலபோது 09 இல் தான் இருக்கிறேன். "நீ ஏன் இன்னும் வளரவில்லை" என்று மற்றவர்கள் என்னை நோக்கிக் கேட்குமாறு."

"மனோரீதியிலான ஆரோக்கியத்துக்கு என்ன வகை ஆன்மீகநெறி உங்களுக்கு உதவுகிறது?" என்று ஒரு வினா எழுப்பப்படுகிறது. "நான் இயற்கையோடு மிக நெருங்கி, மிக்க நேசமுடன் இருப்பவன். பறவைகள், மரங்கள், பூக்கள், நீரோடைகள் என்று வளரும், வாழும் அம்சங்கள் அனைத்தோடும் ஒன்றி, கலந்து கிடக்கிறேன். காலைப் பொழுதில் கால்களை மடக்கி, ஒரு தியானத்துக்கு போக நான் விரும்பவில்லை. நான் இயற்கையோடு ஒன்றிகலந்து கால்களை நீட்டி அவற்றுக்குள் தியானித்து இருக்க விரும்புகிறேன். நான் ஆன்மீகத்தோடு அண்டுவதைவிட, தத்துவங்களோடு அண்டுகிறேன் வெகுவாக. உள்ளிருக்கும் குழந்தை மையை கொண்டாடுவது கூட இயற்கையைக் கொண்டாடுதல்தான்.

புத்தகங்களை நான் மிக நேசிக்கிறேன். பறவைகளை நான் மிக நேசிக்கிறேன். மானுட உறவுகளை நான் மிக நேசிக்கிறேன். எனக்கு நிறைய நண்பர்கள் கிடையாது. கொஞ்சம் பேர் என்றாலும் அவர்களோடு நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். குடும்பத்தோடு நான் மிக மகிழ்ச்சியாக இருக்கிறேன். தினமும் இப்போதும் எழுதிக் கொண்டே இருக்கிறேன். வாசிப்பு விரும்பத்தக்கதாக இப்போதும் இருக்கிறது எனக்கு. நான் முதலில் ஒரு வாசகன், அதன் பின்னரே எழுத்தாளன். மானுடர் என்னை எப்போதும் மகிழ்ச்சிபடுத்துகிறார்கள். மானுடர்களை நானும் மகிழ்ச்சி படுத்தவே விரும்புகிறேன்." என்று பதிலளிக்கிறார், ருஸ்கின்.

The Golden Years -The Many Joys of Living A Good Long life புத்தகம் பற்றி அவர் அந்த நேர்காணலில் சொல்வார். "அது மூப்படைதல், வாழ்வை ஆச்சர்ய மூட்டும் மகிழ்ச்சியோடு முதுமையிலும் கொண்டாடுதல் பற்றி சொல்லும் குட்டிக்குட்டிக் கட்டுரைகள் அடங்கிய நூல். 89இலும் பெரிய கவலைகள் என்னை அண்ட நான் விடுவதில்லை. இப்போதும் இயங்குகிறேன். பணியாற்றுகிறேன். பணியாற்றுதல் நின்றுபோகும் கணத்தில் வாழ்வதும் நின்று போகும். எதிர்காலம் என்பது நிச்சயமின்மை. என் எழுத்துகள் குறித்து நான் பெருமிதம் கொள்கிறேன். திமிர் பிடித்த எழுத்தாளர்கள் பற்றி நான் கவலை கொள்கிறேன். என்னிலும் மிகைத்த எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்று எப்போதும் உணர்வேன். மிக உணர்வு மயம் நான். மிக நோவடிக்கும் விமர்சனங்கள் என்னைக் காயப்படுத்திவிடும் அது என் பலவீனம் என்றும் நினைக்கிறேன். நான் ஒரு புத்தகப் பூச்சி. வாரத்துக்கு மூன்று நான்கு புத்தகங்கள் வாசிக் கிறேன். துப்பறியும் நாவல்களில், சுயசரிதைகளில், வரலாற்றுப் புதினங்களில் பிரியம் எனக்கு. தொழில் நுட்பத்தில் அறிவு குறைந்தவன். என்னிடம் கணினி, கைப்பேசி என்று எந்தப் பழக்கமும் இல்லை. நான் தொழில்நுட்பத்துக்கு எதிரானவன் அல்ல. ஆனால் அவற்றுக்கு அடிமை படுதல் குறித்து விருப்பம் கிடையாது. லண்டனில் வாழ்ந்தபோது நான் ஒரு வெட்கப்படும் குட்டி இளைஞனாகவே இருந்தேன். பெரிய நகரங்கள் அப்படித்தான் மனிதனை வெகுவாக தனிமைப்படுத்தி விடுகின்றன. ஒருவரை ஒருவர் அறிகிற ஆவல் அவர்களிடத்து இல்லை. தனிமை எதிர்பாராதவிதமான எங்கள் வாழ்க்கைக்குள் வந்து விடுகிறது."

Shobhaa Dee கேட்கிறார், "ஆயின் எது உங்களை மிகத் துயர்படுத்துகிறது?"



எப்பொழுதுமே போர்களும் யுத்தங்களும் தன்னை வருத்துவது குறித்து, உலகத்தில் மிக மோசமான ஆயுதமாக, நாவே இருப்பது குறித்து தான் துயரம் கொள்வதை அவர் சொல்கிறார். "மற்றவர் களுக்கு உரித்தான பொருள் ஏன் இன்னொருவருக்குத் தேவைப்பட வேண்டும்? முதுகில் குத்துதல், காட்டிக் கொடுத்தல், பழிவாங்கல் எல்லாம் விலங்குகளுக்கு இல்லை. மனிதனிடம் மட்டும்தான் உள்ளன. நாவு எதிரிகளை உருவாக்கி விடுகிறது. முரண்பாடுகளைத் தோற்றுவிக்கிறது.

"எல்லா யுத்தங்களும் கோரமாய் நடந்தேறி விட்ட பின்னாலும், பறக்கிறது வண்ணத்துப்பூச்சி. பறக்கும் வண்ணத்துப்பூச்சி மிகு அழகாகவும் இருக்கிறது..."


அந்தப் பெரிய மனிதனின் மானுடம் தழுவிய அன்பை ஒரு வண்ணத்துப் பூச்சியை கைக் கொள்வதுபோல நான் மிக மிக நேசிக்க ஆரம்பிக் கிறேன். அவரை எனக்குக் காட்டித் தந்த எங்கள் பால்யகாலத்துப் பள்ளி ஆசானையும்.. பறக்கின்றன, நன்றியின் வண்ணத்துப்பூச்சிகள் எனக்குள்!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்வைகள்

இ.புஷ்பா



"நேரம் ஏழு மணி ஆகி விட்டது. அப்பா வாற நேரம் ஆச்சுது. எல்லாரும் கெதியா வந்து சாப்பிடுங்கோ" என நான் கொடுத்த குரலுக்கு காத்திருந்தவர்கள் போலப் பிள்ளைகள் எழுந்து கை கழுவி விட்டு வந்து சாப்பிட அமருகிறார்கள்.

"இண்டைக்கு நாங்கள் ஐவர். பஞ்சபாண்டவர்கள் நாங்கள்" என்று சந்தோசத்துடன் கூறிச் சிரிக்கிறாள் கஜனி. இல்லைப் "பஞ்சபூதங்கள்", "பஞ்சபூதங்கள்" என்று கூறியதோடு "பெரியம்மா ஒரு பூதம்", "அப்பா ஒரு பூதம்" என்று, ஓசையுடன் கூறிச் சாப்பாட்டுத் தட்டில் தாளம் போடுகிறான் திலக். எனக்கு விளங்கவில்லை. கரனோ "பஞ்சபூதங்களும் முகவடிவாகும் காலங்களெல்லாம் ஆடைகளாகும்"

என்று நிலைமை புரியாது, பாடி அபிநயம் பிடிக்கிறான். நான், பார்வையைக் கூர்மையாக்குகிறேன் திலக் மீது. அவனோ, பார்வையை விலக்குகிறான்.

நாலு மணிக்குத் திலக் வரும்போது, நான், "ஏன் இப்ப வந்தது?" என்று கேட்க "எக்ஸாம் முடிஞ்சுது பெரியப்பாவைக் கேட்டன். கொண்டந்து விட்டவர் எண்டு மட்டும் சொன்னவன். நானும் கடைக்குப் போற அவசரத்திலை ஒண்டும் கேக்கேல்லை. ஏதோ நடந்திருக்குது" என்று ஊகித்துக் கொண்டு, "ஏன் திலக் ஒரு மாதிரி இருக்கிறாய்? என்ன நடந்தது சொல்லப்பு" என்று ஆதரவுடன் கேட்கிறேன். ஒரு பதிலும் இல்லை. நான், இன்னும் ஊகித்துக்கொண்டு

"பிள்ளை நல்லாப் படிச்சு முன்னுக்கு வரவேண்டு மெண்டுதானே பெரியம்மா வீட்டிலை விட்டனான். அங்க என்ன குறை. என்ன இல்லை?" என நான் கேட்க, "ஓம், ஓம் ஒரு குறையும் இல்லை. பெரியம்மா தான் குறை" என அழுத்திக் கூறி அழுகிறான்.

"சரி. எனக்கு விளங்குது" நான் ஆதரவுடன் அணைக்கிறேன். "என்ன நடந்தது எண்டு சொல்லன் ராசா". சிறிது நேர மௌனத்துக்குப் பின் "அம்மா" என்று அழைக்கிறான் "அண்டைக்கு ஒரு நாள் ஏழாம் பாடம். ஹோலுக்க சரியான சத்தம். ரீச்சேஸ் வந்து சேரேல்லை. பதில் பாட ரீச்சர் எண்டு சொல்லி ஒரு ரீச்சர் வந்தவ. வந்து மேசையிலை தட்டினா. எல்லாரும் அமைதியாயிட்டம். ஆனால் எங்கும் சத்தம். அவ, தான் கொண்டு வந்த பேப்பரை எல்லாருக்கும் தந்து, "முதல்ல பெயரை எழுதிப் போட்டு விரும்புகிற படத்தை என்ன படமெண்டாலும் கீறுங்கோ எண்டா எங்களுக்கு நல்ல சந்தோசம் எல்லாரும் கீறக் கீறக் கிட்ட வந்து கதையும் கேட்டவ. பிறகு பெல் அடிக்க "எல்லாரும் தாங்கோ எண்டு சொல்லி வாங்கிக் கொண்டு போட்டா. பிறகு..."

"பிறகு, அந்த ரீச்சர் பிறைஸ் தந்தவவோ?" இது கஜனி.

"பிறகு, அந்த ரீச்சர் சேட்டிபிக்கற் தந்ததுவோ?" கரன் கேட்கிறான். திலக் அவர்களைக் கோபமாகப் பார்த்துவிட்டு அமைதியாகிறான்.

"பிறகு என்ன நடந்தது? திலக் சொல்லு" நான் ஊக்குவிக்கிறேன். "அம்மா! அடுத்த நாள் அந்த ரீச்சர், என்னைக் கூப்பிட்டுக் கதைச்சவ. படம் நல்லாயிருக்கு. இது ஆர்? இது ஆர்? என்று கேட்டவ. எங்கண்ட குடும்பத்தைப் பற்றியும் கேட்டவ. ஆரில கோபம்? ஆரில விருப்பம்?, எங்க இருக்க விருப்பம்?, எண்டெல்லாம் கேட்டவ. "சின்னப் பிள்ளையள் அப்பா அம்மாவோடதான இருக்க விரும்புவினம். நான் உங்கட அப்பா அம்மாவோட கதைக்கிறன். இந்தப் படம் பற்றிச் சொல்ல மாட்டன். காட்டவும் மாட்டன். இங்கயும் ஆருக்கும் இது பற்றிக் கதைக்க மாட்டன். நம்பிக்கையாக் கதைக்கலாம்" எண்டு சொன்னவுடனை நான் உண்மையைச் சொல்லிப் போட்டன்" அழுகிறான் திலக். நான் அவனை ஆதரவுடன் வருடுகிறேன்.

சிறிது நேரத்திற்குப் பின்பு, "அம்மா! நீங்கள், என்னை நல்லாப் படிப்பிக்க வேணுமெண்டுதான் விட்டனீங்கள். அங்க நல்ல சாப்பாடு, அறை, கட்டில் ரியூசன் எல்லாம் இருக்குத்தான். ஆனால் நான் வீட்டுக்கைதியம்மா. ஆரோட கதைக்கிறது? புத்தகங்களோட கதைக்கலாமோ? அவை மட்டும் அறை யுக்க ரீ.வீ, போன் எல்லாம் பாப்பினம். எனக்கு விருப்பமில்லையம்மா. உங்களுக்கு முந்தியும் சொன்னனான்தானே. சொன்னால், இதையெல்லாம் கணக்கில் எடுக்கக் கூடாது. நல்ல பக்கங்களைத்தான் பார்க்க வேணும். நன்மை அடைய வேணுமெண்டா கஷ்டங்களை அனுபவிக்கத்தான் வேணும் எண்டு சொல்லுவியள்" என்று கூறிவிட்டு முகத்தைத் துடைத்தவாறு என்னைப் பார்க்கிறான்.

"பிறகு என்ன நடந்தது? நீ, பெரியம்மாவுக்குத் தெரியாமல் ஏதேனும் செய்தனியோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லையம்மா. என்னம்மா? நீங்கள். அண்டைக்குப் படம் கீறிவிச்ச ரீச்சர், கிளாஸ் ரீச்சர் மூலம் பெரியம்மாவைப் பள்ளிக்கூடத்துக்குக் கூப்பிட்டவவாம். நீங்கள், அவவின்ர பெயர், விலாசம் தானே குடுத்தனீங்கள். உங்கட விலாசத்தைக் குடுத்திருக்கலாமே? பெரியம்மாவும் என்ன பிரச்சினையோ? எண்டு நினைச்சுப் போனவவாம். அங்க இரண்டு ரீச்சமாரோடையும் கதைச்சுப்போட்டு வந்திட்டா."

"திலக்! நீ வித்தியாசமான படம் ஏதும் கீறிக் கொடுத்தனியோ? "இல்லையம்மா. நான் ஒரு பிழையும் விடேல்ல. நான் இரண்டு ஆளைக் கீறினன். ஒண்டு பொம்பிளை. மற்றது ஆம்பிளை. இரண்டு பேரையும் கயித்தாலை கை, கால், முகம் எண்டு தனித் தனி சுத்திக் கட்டிப் பக்கத்தில் துவக்கும் கீறிவிட்டனான். ரீச்சர் கேக்கேக்க ஒண்டு அப்பா. மற்றது பெரியம்மா எண்டு உண்மையைச் சொல்லிப்போட்டன். எனக்கு, மறைக்க வரேல்ல. நான் விண்வெளி வீரர்கள் எண்டு சொல்லியிருக்கலாம். விட்டிட்டன்".

நிலைமை மோசமாகப் போகுதுதான் என்று ஊகித்துக்கொண்டு, "வீட்டில் பெரியம்மா...?" வார்த்தைகளை முடிக்கவில்லை நான், "பள்ளிக்கூடத்தால நான் வந்ததும் கால்முகம் கழுவிச் சாப்பிட்டிட்டுப் புத்தகங்களை ஒழுங்காக அடுக்கி வைப்பம் எண்டு போனன். பெரியம்மா வந்தா. இடி இடிச்சுது. வெடி வெடிச்சுது எனக்கோ மின்னிக்கொண்டு வந்திது".

"எனக்கு நடந்தது ஒன்றும் தெரியாதுதானே". "நான் உன்னைப் பக்குவமாகப் பார்த்தனான்தானே என்ன? படங்கள் கீறினியாம்" எண்டு சொல்ல எனக்குத் தலை சுத்திச்சு. ரீச்சர் நிச்சயமாகச் சொல்லியிருக்க மாட்டா. கிளாஸ் ரீச்சர்தான் அண்டியிருப்பா. அவ, என்னைப் பிடிச்சு உலுக்கி "என்னடா கீறினனி? நீ தான் எங்களைப் பின்னடிக்குப் பாக்கப் போறியோ? உங்களை இஞ்ச வந்து நிண்டு படியுங்கோ எண்டு சொன்னனாங்களோ" என்று முதுகில் நல்ல அடியும் விழுந்தது. எனக்குத் தாங்க முடியேல்லை. அழுதுபோட்டு நித்திரையாவிட்டன். இரவும் நித்திரையில்லை.

"காலையிலை பள்ளிக்கூடம் போக விருப்பமில்லை. உடுப்புகள் தோச்சு வேலைகள் செய்தன். பின்னேரம் பெரியப்பாவை, எக்ஸாம் முடிஞ்சுது. என்னை அம்மாட்டை விட்டுவிடுங்கோ எண்டு கேட்க, அவரும் கொண்டு வந்துவிட்டவர்.

"அம்மா என்னை இஞ்சை வைச்சு வளர்க்க உங்களுக்குக் கஷ்டமோ? நான்தானே படிக்கிறது. இஞ்சையிருந்து படிப்பன்தானே? இஞ்ச அக்கா, அண்ணாக்களோடை சந்தோசமாக இருக்கலா மெல்லோ. பிளீஸ் அம்மா. நான் இனி அங்க போகவேமாட்டன். ஒரு வருஷம் சமாளிச்சுப் போட்டன் அம்மா. உங்களுக்கு என்னில விருப்பம் இல்லையோ? அம்மா? எனக்கூறி விக்கி விக்கி அழுகிறான்.

நான் ஆதரவோடு அணைத்து, "எனக்கு விளங்குது." இனித் திலக் என்னோடதான் இருக்கப் போறாய். "பயப்படாத திலக்" எனக் கூற அழுகையும் குறைந்து வருகிறது. "சரி இனி எல்லாரும் சாப்பிடுங்கோ" எனக் கூறிக் கொள்ளப் பிள்ளைகள் சாப்பிடுகிறார்கள். எல்லோரிடமும் திலக் பற்றிய சிந்தனையே நிறைந் திருக்கிறது என்பதை நிலவும் மௌனமே காட்டி நிற்கிறது.

## அம்மாவுக்குக் கடிதம் எழுத நினைப்பதுண்டு




சிலவேளைகளில்
அம்மாவுக்குக் கடிதமெழுத நினைப்பதுண்டு
ஆனால் எதை எழுதுவது?
நெடுங்காலத்துக்கு முன்பே
சொற்கள் வறண்டு போயின
சில வேளைகளில் அம்மாவை நினைப்பேன்
இருட்டில் நாலு காலில் ஊர்வா
எதையோ தேடிக்கொண்டு
அழுதபடி!

அன்னையர் துக்கத்தில் அழுவது
எனக்குப் பிடிப்பதில்லை
கண்ணீரால் கதை சொல்வது
அவர்கள் தலைவிதி

இன்றுவரை அவர்கள் தலைவிதியை
கடவுளும் புரிந்து கொள்ளவில்லை
சில வேளைகளில் அம்மாவுக்குக்
கடிதம் எழுத நான் நினைப்பதுண்டு
முன்பெல்லாப் பிள்ளைப் பருவம்
அதிசயங்கள் நிரம்பியதாய் இருந்தது
கீழே விழும் சந்திரனைக் கையில் ஏந்தும்
இலையுதிர் காலம் போல
அந்தக் கனவை
என்னுள் கவனமாக சேமித்து வைத்திருக்கிறேன்

சந்திரனுடைய கனவை
என் மகனுக்குக் காட்ட என்னால் முடிவதில்லை
அவன் தங்கச் சுரங்கங்களைத் தேடுகிறான்
மயக்கும் பிள்ளைப் பருவத்தில்
அம்மா, நீ என்னுள் ரகசியமாக நட்ட விதை
அழகிய பாரிய மரமாக
வளர்ந்துள்ளது.
இன்று என் கண்கள்
விண்ணை நோக்குகையில்
சில வேளைகளில்
அம்மாவுக்குக் கடிதமெழுத நினைப்பேன்
ஆனால் அக்கடிதத்தில்
ஏதை எழுதுவது?


ஓறிய மூலம் : மனோரமா பிஸ்வால் மகாபத்ர
ஆங்கில வடிவம் : ஜயந்த மகாபத்ர
தமிழாக்கம் : சோ.ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐங்கரன் விக்கினேஸ்வரா

# என்றும் மரணிக்காத காசாவின் குரல் - ரிவாட் அலாரீர் : காசா பல்கலை பேராசிரியர் இஸ்ரேலால் படுகொலை !




இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட கவிஞர், பேராசிரியர் Dr.ரிவாட் அலாரீரை (Dr. Refaat Alareer) உலகம் வாழ் கவிஞர்களும், பாலஸ்தீனியர்களும் இரங்கல் தெரிவிக்கின்றனர். புகழ் பெற்ற கவிஞர், கல்வியாளர் காசாவின் குரலாக என்றும் மரணிக்காத குரலாக விளங்கியவர்.

**என்றும் மரணிக்காத காசாவின் குரல் :**

பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் (Refaat Alareer) கடந்த புதன் இஸ்ரேல் காசா மீது நடத்திய குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்து அவரது குடும்பத்தவர்கள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேலிய விமானத் தாக்குதலில் கொல்லப்பட்ட பேராசிரியர் ரிவாட் அலாரீர் இஸ்ரேலின் பலத்த குண்டுத் தாக்குதல்களுக்கு மத்தியிலும் காசாவை விட்டு நீங்காமல் அங்கேயே தங்கியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

*1979* இல் காசா நகரத்தில் உள்ள ஷுஜாயில், புகழ்பெற்ற பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள இஸ்லாமியப் பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் பிறந்தார். காசாவில் வளர்ந்த அவர், நான் எடுக்கும் ஒவ்வொரு அசைவும் மற்றும் நான் எடுத்த ஒவ்வொரு முடிவும் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பால் பொதுவாக எதிர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியது என்று கூறியுள்ளார்.

ரிவாட் அலாரீர் *2001* இல் காசா பல்கலைக்கழகத்தில் ஆங்கிலத்தில் BA பட்டமும், *2007* இல் லண்டன் பல்கலைக்கழக கல்லூரியில் MA பட்டமும் பெற்றார். அவர் புத்ரா மலேசியா பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியத்தில் முனைவர் பட்டம் பெற்றார்.

**காசா பல்கலைக்கழக பேராசிரியர்:**

*2015*இல் காசா அன் சைலன்ஸ், பின்னர் காசா ரைட்ஸ் பேக் *2014* இல் பாலஸ்தீனிய சிறுகதைகளின் இரண்டு தொகுதிகளைத் தொகுத்துள்ளார். ஒரு நேர்காணலில் அவர் கூறுகையில் காசா ரைட்ஸ் பேக் நூல் எதிர்கால சந்ததியினருக்கு ஒரு சாட்சியத்தை வழங்குவதற்கான முயற்சியாகும் என தெரிவித்துள்ளார்.

*2007*இல், காசாவில் உள்ள பல்கலைக்கழகத்தில் ரிவாட் அலாரீர் பேராசிரியரானார். அங்கு அவர் உலக இலக்கியம் மற்றும் படைப்பாற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலக்கியத்தை கற்பித்தார். வி ஆர் நாட் நம்பர்ஸ் ( WE are not numbers ) என்ற அமைப்பை அவர் இணைந்து நிறுவி, காசாவில் உள்ள எழுத்தாளர்களை வெளிநாட்டில் உள்ளவர்களுடன் இணைக்கும் வழிகாட்டல் திட்டமாகும்.

2023 இஸ்ரேல்-ஹமாஸ் போரின் போது, பிபிசி, டெமாக்ரசி நவ், மற்றும் ஏபிசி நியூஸ் ஆகிய ஊடகங்களில் பணியாற்றினார். 2023 இல் ஹமாஸ்க்கு எதிரான இஸ்ரேல் தாக்குதலுக்குப் பிறகு, அவர் இந்தத் தாக்குதலை சரியாக "வார்சா கெட்டோ" எழுச்சியைப் போன்றது என்று கூறியமை பலத்த சர்ச்சயை உருவாக்கியது.

2021 இஸ்ரேல்-பாலஸ்தீன நெருக்கடியின் போது அதில் அவரும் அவரது மனைவியும் 30க்கும் மேற்பட்ட உறவினர்களை இழந்துவிட்டதாக விவரித்தார்.

நான் இறக்க வேண்டும் என்றால்
நம்பிக்கை தரட்டும்
அது ஒரு கதையாக இருக்கட்டும்..

**பல வார கொலை மிரட்டலுக்கு பின் கொலை:**

யூரோ-மெட் மானிட்டர் (Euro-Mediterranean Human Rights Monitor (Euro-Med Monitor) அமைப்பு ஒரு அறிக்கையை வெளியிட்டது. ரிவாட் அலாரீர் வேண்டுமென்றே குறிவைக்கப்பட்டதாகத் தெரிகிறது, தனது குடும்பத்தினருடன் இருந்த அடுக்குமாடி குடியிருப்பு அமைந்துள்ள முழு கட்டடத்திலும் வெடிகுண்டு வீசப்பட்டது. உறுதிப்படுத்தப்பட்ட நேரில் கண்ட சாட்சிகள் மற்றும் குடும்பக் கணக்குகளின்படி, இஸ்ரேலிய தரப்புகளில் இருந்து அவருக்கு ஆன்லைனிலும் /போன் மூலமாகவும் பல வாரகால கொலை மிரட்டல்களுக்கு உள்ளானார்.

கொல்லப்படுவதற்கு முன் தனது கடைசி நேர்காணலில், இஸ்ரேலிய குண்டுகள் பின்னணியில் வெடிக்கும் சத்தத்துடன், தன்னிடம் ஆயுதம் ஏதும் இல்லாத நிலையில், IDF தனது வீட்டிற்கு வந்தால் தன்னைத் தற்காத்துக் கொள்வேன் என்றும், தான் உதவியற்றவனாக உணர்ந்ததாகவும் கூறியுள்ளார்.

இஸ்ரேலிய வீரர்கள் காசாவின் சிறந்த கல்வியாளர்களில் ஒருவரை, சிறந்த மனிதனும், விலைமதிப்பற்ற காசாவின் குரலைக் குறிவைத்து, பின்தொடர்ந்து சென்று கொன்றனர் என கவிஞர் மொசாப் அபு தோஹா எழுதியுள்ளார். எனது இதயம் உடைந்து விட்டது, எனது நண்பரும் சக ஊழியருமான அலரீர் அவரது குடும்பத்தினருடன் கொல்லப்பட்டார்.

பாலஸ்தீனிய-அமெரிக்க பேராசிரியர் சாமி அல்-அரியன் கூறுகையில் அவர் ஒரு அற்புதமான கவிஞர், காசான்களுக்கு ஒரு தெளிவான குரல், பாலஸ்தீனத்திற்கு வெளியே உள்ள மக்களுக்கு ஒரு உண்மையான பாலம். பாலஸ்தீனத்திற்குள்ளும் உலகெங்கிலும் உள்ள பலரால் அவரது இழப்பை ஜீரணிக்க முடியாது என குறிப்பிட்டார்.

2014இல் காசா ரைட்ஸ் பேக் நூல் இத்தாலிய மொழியில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

**வார்சா கெட்டோ எழுச்சி:**

வடக்கு காசாவில் இஸ்ரேலிய நடவடிக்கைகள் தொடங்கியதைத் தொடர்ந்து அங்கிருந்து வெளியேற மறுத்து விட்டார். அவர் இறப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அவர் சமூக ஊடகங்களில் வீடியோவை வெளியிட்டார். கட்டிடம் குலுங்குகிறது. குப்பைகள் மற்றும் துண்டுகள் சுவர்களில் மோதி தெருக்களில் பறக்கின்றன என்று அவர் எழுதினார். அத்துடன் இஸ்ரேல் மீதான ஹமாஸின் அக்டோபர் 7 தாக்குதலுக்குப் பிறகு பிபிசிக்கு அளித்த பேட்டியில், அதை "சட்டபூர்வமான மற்றும் தார்மீக" என்று கூறி பரவலான சர்ச்சையை ஏற்படுத்தினார். இது சரியாக வார்சா கெட்டோ எழுச்சியைப் போன்றது என்றும் அவர் கூறினார்.

வார்சா கெட்டோ எழுச்சி என்பது 1943 இல் ஜெர்மனியால் ஆக்கிரமிக்கப்பட்ட போலந்தில் நடந்த ஒரு கிளர்ச்சியாகும். மேலும் யூத மக்களை அழிப்பு முகாம்களுக்கு கொண்டு செல்வதற்கான நாஜி முயற்சிகளை எதிர்க்க யூதர்கள் கெட்டோவிற்குள் கடத்தப்பட்ட ஆயுதங்களைப் பயன்படுத்து போராடினர்.

2015 இல் நிறுவப்பட்ட பாலஸ்தீனிய இலாப நோக்கற்ற அமைப்பான "வி ஆர் நாட் நம்பர்ஸ்" இன் நிறுவனர்களில் ஒருவர் ஆவார். இது உலகெங்கிலும் உள்ள எழுத்தாளர்களுடன் காசாவில் உள்ள இளைஞர்களுடன் இணைந்து செயற்படுகிறது.

தற்போது சமூக ஊடகங்களில் அஞ்சலி செலுத்தும் முன்னாள் மாணவர் ஜெஹாத் அபுசலீம், அலரீரை வகுப்பறைக்கு அப்பால் தனது மாணவர்களைப் பற்றி உண்மையிலேயே அக்கறை கொண்டிருந்த ஒரு வழிகாட்டி மற்றும் நண்பர் என்று விவரித்தார்.

**காசா பல்கலைக்கழகத்தை இஸ்ரேல் அழித்தது:**

பாலஸ்தீனிய - அமெரிக்க எழுத்தாளரும் ஆர்வலருமான சூசன் அபுல்ஹாவா சமூக ஊடகங்களில் வெளியிடப்பட்ட வீடியோவில், "நான் சந்தித்த கனிவான, மிகவும் தாராளமான, அர்ப்பணிப்புள்ள, அற்புதமான மனிதர்களில் ஒருவர்" என்று அவர் விவரித்தார்.


நவம்பர் 1 ஆம் தேதி ட்விட்டரில் பதிவிடப்பட்ட ஒரு கவிதையில், அலரீர் எழுதினார்: "நான் இறக்க வேண்டும் என்றால், அது நம்பிக்கையைத் தரட்டும், அது ஒரு கதையாக இருக்கட்டும்". இந்த பதிவு பல்லாயிரக் கணக்கான முறை பகிரப்பட்டது. அக்டோபர் 11 அன்று அலரீர் கற்பித்த பல்கலைக் கழகத்தை இஸ்ரேல் அழித்தது. இது காசாவில் உள்ள ஒரு முக்கியமான ஹமாஸ் செயல்பாட்டு, அரசியல் மற்றும் இராணுவ மையம் என்று கூறியது. புகழ்பெற்ற பாலஸ்தீனக் கவிஞரும், காசாவிலுள்ள பல்கலைக்கழகப் பேராசிரியருமான ரிவாட் அலாரீர் (Refaat Alareer) கடந்த புதன் இஸ்ரேல் காசா மீது நடத்திய குண்டுத்தாக்குதலில் படுகொலை செய்யப்பட்டமைக்கு உலகம் வாழ் கவிஞர்கள் அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில்லைநாதன் கோபிநாத்

# சுன்னாகம் திராவிட வித்தியாசாலை



பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மதம் பரப்பும் நோக்கத்துடன் இலங்கை வந்த கிறித்தவ மிசனரியினர் பெருமளவு பாடசாலைகளை அமைத்துக் கல்வி கற்பித்து அதனூடாக மதமாற்றச் செயற்பாடுகளை முன்னெடுத்து வந்தனர். இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை யாழ்ப்பாணத்தில் பெருமளவு பாடசாலைகள் மிசனரிப் பாடசாலைகளாகவே இருந்தன.

இந்த நிலைமையினை மாற்றும் நோக்குடன் ஆங்காங்கே சைவப் பாடசாலைகள் ஆரம்பிக்கப் பட்டன. இவை பெரும்பாலும் தனிநபர் முயற்சிகளாக அமைந்தன. நிறுவனச் செயற்பாடுகளான மிசனரிப் பாடசாலைகளுக்கு ஈடுகொடுக்க வல்லனவாக இருக்கவில்லை. விதிவிலக்காக நிறுவனமயமாகிச் செயற்பட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிச் சபை நகரங்களைச் சார்ந்து சிறு எண்ணிக்கையிலான பெரிய பாடசாலைகளையே நிர்வகித்து வந்தது. இந்தச் சைவப் பாடசாலைகள் கிராமம் கிராமமாக அமைந்திருந்த மிசனரிப் பாடசாலைகளுக்குப் போட்டியாக அமையவில்லை.

இந்த நிலைமையை மாற்றியமைப்பதாக அமைந்ததே 1923இல் உருவான இந்து போர்ட் என்றும் அறியப்படும் சைவ வித்தியாவிருத்திச் சங்கம். 1961இல் அரசாங்கம் பாடசாலை களைப் பொறுப்பேற்ற காலத்தில் 187 பாடசாலைகளையும் ஓர் ஆசிரிய கலாசாலையையும் கொண்ட ஓர் ஆலமரமாக வளர்ந்திருந்த நிறுவனம் அதுவாகும். சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் ஆரம்ப காலங்களில் மிக முக்கிய பங்களிப்புச் செய்தவர் எம். எஸ். இராசரத்தினம் என அறியப்படும் முருகேசர் சின்னத்தம்பி இராசரத்தினம் ஆவார்.

மு. சி. இராசரத்தினம் வட்டுக்கோட்டையைச் சேர்ந்தவர். 1884-08-18 அன்று பிறந்தவர். இவர் யாழ்ப்பாணக் கல்லூரியில் கிறித்தவத்தைத் தழுவிக் கல்வி கற்றார் என்று சொல்லப்படுகிறது. 1905இல் கல்கத்தா பல்கலைக்கழகத்தில் கலைமாணிப் பட்டம் பெற்று 1906இல் யாழ்ப்பாணக் கல்லூரியில் ஆசிரியராக இணைந்தார். பின்னர் வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி, பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரிகளில் கல்வி கற்பித்தார். ஆசிரியராக இருந்த காலத்தில் சட்டக்கல்வி கற்று வழக்கறிஞர் ஆகி 1911இல் யாழ்ப்பாண வழக்கறிஞர் சபையில் இணைந்தார். யாழ்ப்பாணம், ஊர்காவற்துறை, மல்லாகம் ஆகிய நீதிமன்றங்களில் தொழில் புரிந்து வந்தார். பல்வேறு சமூகப் பணிகளிலும் ஈடுபடாலானார்.

1923இல் சைவ வித்தியா விருத்திச் சங்கம் அமைக்கப்பட முக்கிய காரணமாக இருந்தவர் மு.சி. இராசரத்தினம் என்றே கூறப்படுகிறது. குறிப்பிடத்தக்க பொது வைபவங்கள் தவிர ஏனைய நிகழ்ச்சிகளில் ஒன்றாகக் கலந்து கொள்ளாதிருந்த சேர் பொன். இராமநாதன், சேர் பொன் அருணாசலம் ஆகியோரை ஒன்றாக வரச் செய்து சைவ வித்தியா விருத்திச் சங்கத் தொடக்க நிகழ்வினை அவர் ஒழுங்கு செய்திருந்தார். சங்கத்தின் தலைவராக இராமநாதன் இருந்தபோதும் சங்கம் உருவாக முக்கிய காரணமாக இருந்தவர் மு. சி. இராசரத்தினம் ஆவார். அத்துடன் சங்கத்தின் செயலாளராக இருந்து செயற்பாடுகளை முன்னெடுத்தவராகவும் அவர் இருந்தார்.

மாதகலில் சங்கத்தின் முதலாவது சைவப் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து ஆண்டுதோறும் ஏழு, எட்டுப் பாடசாலைகள் என அமைக்கப்பட்டன. இவை ஒவ்வொரு ஊர்ப் பெரியவர்களது உதவியுடனேயே ஆரம்பிக்கப்பட்ட போதும் சங்கத்தின் நிர்வாகத்தின் கீழ் அமைந்திருந்தன. எடுத்துக்காட்டாக வட்டுக்கோட்டையில் மு.சி இராசரத்தினத்தால் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலைகளான திருஞானசம்பந்தர் வித்தியாலயம், திருநாவுக்கரசர் வித்தியாலயம் என்பன சைவ வித்தியாவிருத்திச் சங்கப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகளே. வித்தியா விருத்திச் சங்கப் பாட சாலைகளில் சைவச் சூழலில் மாணவர்கள் கல்வி கற்க முடியும் எனக் கூறப்பட்ட போதும் தாழ்த்தப்பட்ட பிள்ளைகள் அனுமதிக்கப்படாத நிலைமையே இருந்தது. அப்பிள்ளைகள் தொடர்ந்தும் மிசனரிப் பாடசாலைகளுக்கே செல்ல வேண்டியிருந்தது. அத்துடன் தீண்டாமையால் பாதிக்கப்பட்ட தாழ்த்தப் பட்ட மக்கள் அதிலிருந்து விடுதலை பெற முடியும் எனும் நம்பிக்கையில் மதம் மாறும் செயற்பாடுகளும் தொடர்ந்து நடந்து வந்தன.

இந்த நிலையில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சம மரியாதையும் கல்வியும் முன்னேற்றமும் கிடைப்பதே அவர்கள் சைவ சமயத்தில் தொடர அவசியம் என்பது உணரப்பட்டது. அவ்வகையில் யாழ்ப்பாணம் தாழ்த்தப் பட்டவர்கள் சங்கம் 1926 இறுதியில் உருவானது. அச் சங்கத்தின் ஆரம்பத் தலைவராக மு.சி. இராசரத்தினமே இருந்தார். அக்காலத்திலும் அவர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சாதியத்தை ஒழிப்பதனை விடவும் சைவ சமயத்தினை முன்னிலைப்படுத்தியே தாழ்த்தப் பட்டவர்களின் சங்கம் உருவாகியது என்பது உண்மையே. அதே நேரம் சம ஆசன, சம போசனப் போராட்டம், ஆலய நுழைவுப் போராட்டங்களுக்கு முற் பட்ட சாதிய ஆதிக்கம் நிறைந்த சூழலில் தாழ்த்தப் பட்டவர்களுடன் அடையாளப்படுத்திக் கொண்டு மு. சி. இராசரத்தினம் செயற்பட்டார் என்பதையும் கவனிக்க வேண்டும்.

1927இல் காந்தி யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது அவரை வரவேற்கும் குழுவில் மு.சி. இராசரத்தினமும் முக்கிய இடம் பெற்றிருந்தார். தாழ்த்தப்பட்டவர்களின் சங்கம் சார்பில் ஆரம்பிக்கும் பாடசாலையை அடிக்கல் நட்டு ஆரம்பிக்கும் நிகழ்வும் நடைபெற்றது. அவ்வாறு 27-11-1927 அன்று சுன்னாகத்தில் அடிக்கல் நாட்டப் பட்ட பாடசாலையின் பெயர் "சுன்னாகம் திராவிட வித்தியாசாலை" என்பதாகும்.

இப்பாடசாலையைக் கட்டுவதற்கு உதவி புரிவதாகக் கூறிய இந்து போர்ட் (சைவ வித்தியா விருத்திச் சங்கம்) எட்டு மாதங்களாகியும் உதவவில்லை என மனவருத்ததைத் தெரிவிக்கும் ஆசிரியத் தலையங்கம் 1928 ஆவணி திராவிடனில் வெளியாகி யிருக்கிறது.

அக்காலங்களின் பின்னர் சைவ வித்தியா விருத்திச் சங்கத்தில் மு. சி. இராசரத்தினம் அதிக பணிகள் செய்ததாகத் தெரியவில்லை. சுன்னாகம் திராவிட வித்தியாசாலை எனும் பாடசாலை சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பாடசாலைப் பட்டியல் களிலும் இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களுக்காக மு. சி. இராசரத்தினம் முன்னெடுத்த பணிகள் அவரைப் பற்றி எழுதப்பட்ட தனிப்பட்ட வரலாறுகளிலும் பதிவு செய்யப் படவில்லை; சாதியத்துக்கெதிரான போராட்டங்களைப் பற்றிய வரலாறுகளிலும் பதிவு செய்யப்படவில்லை. இவை எல்லாவற்றுக்கும் சாதியக் காரணங்கள் உண்டு என்பதே உண்மை.

ஜீவநதி ஏற்பாட்டில் மலரன்னையின் அமுதவிழாவும், "மலரன்னையின் வாழ்வும் படைப்பும்"(ஜீவநதி வெளியீடு) நூல் வெளியீடும் 08.01.2024 அன்று திருநெல்வேலியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸில் எழுத்தாளர் திருமதி கோகிலா மகேந்திரன் தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை திரு இரா.குலசிங்கம் வழங்கினார். வெளியீட்டுரையை எழுத்தாளர் புலோலியூர் வேல்நந்தகுமார் நிகழ்த்தினர். மலரன்னையின் சிறுகதைகள் பற்றிய சிறப்புரையை எழுத்தாளர் தாட்சாயணி அவர்களும் மலரன்னையின் நாவல்கள் பற்றிய சிறப்புரையை எழுத்தாளர் த. அஜந்தகுமார் அவர்களும் நிகழ்த்தினார்கள். நூல் பற்றிய கருத்துரையை எழுத்தாளர் திரு ந. மயூரரூபன் தெரிவித்தார். ஏற்புரையையும் நன்றியுரையையும் மலரன்னை நிகழ்த்தினார். இவ்விழாவில் ஜீவநதி பதிப்பகத்தால் மலரன்னை அவர்களுக்கு "தமிழர் ஈழ இலக்கியத் தாய்" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டது. இவ்விருதை மூத்த எழுத்தாளர் அ. யேசுராசா வழங்கிக் கௌரவித்தார்.




இ.இராஜேஸ்கண்ணனின் "உரித்து"(தாயதி வெளியீடு) சிறுகதைத்தொகுதி வெளியீட்டு விழா 06.01.2024 வதிரி பூவற்கரைப்பிள்ளையார் ஆலய இரவீந்திரசர்மா மண்டபத்தில் கலாநிதி சு.குணேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. அறிமுகவுரையை திரு தானா விஷ்ணு அவர்களும், வெளி யீட்டுரையை திரு க. பரணீதரன் அவர்களும் நிகழ்த்தினார்கள். "புனைவு இலக்கியங்களும் புனைவுசாரா இலக்கியங்களும்: இராஜேஸ்கண்ணனி எழுத்துக்கள் பற்றிய ஒரு புரிதல்" என்னும் தலைப்பில் கலாநிதி தி. செல்வமனோகரன் சிறப்புரை யாற்றினார். மதிப்பீட்டுரைகளை திரு ந.குகபரன், திரு சி.விமலன் வழங்கினார்கள். ஏற்புரையையும் நன்றியுரையையும் திரு இ.இராஜேஸ்கண்ணன் நிகழ்த்தினார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவமுட்டை



பிரதி புதன்கிழமைதோறும் ஆஸ்திரேலிய தாயகம் வானொலியில், நிலாமுற்றம் என்னும் ஒரு கலந்துரையாடல் நிகழ்ச்சியைத் தொகுத்தளிக்கிறேன். வாரம்தோறும் ஒரு தலைப்பு தெரிவு செய்யப்பட்டு அது பற்றி அறிவுபூர்வமாகவும் ஜனரஞ்சகமாகவும் வானலைகளில் கலந்துரையாடப்படும். அன்றைய நிகழ்ச்சியின் தலைப்பு, கோழிமுட்டை சைவமா அல்லது அசைவமா என்பது. பலரும் பலவிதமான கருத்துக்களை முன்வைத்து நிகழ்ச்சி சூடுபிடித்த நிலையில், கோழிகள் முட்டையிட சேவல் தேவையில்லை என்பது, உங்களில் எத்தனை பேருக்குத் தெரியும்? என்ற கேள்வியை முன்வைத்தேன்.

வழமைக்குமாறாக நேயர்களிடமிருந்து இந்தக் கேள்விக்கு எதிர்வினைகள் அதிகம் வரவில்லை. இதனால் நேயர்களை உசுப்பேத்த குசும்புக் குறிப்பொன்றை வானலையில் தவளவிட்டேன். பண்ணைகளிலிருந்து சந்தைக்கு வரும் முட்டைகள் சைவ முட்டைகள். எனவே சைவக் கோவில்களில் கொடுக்கப்படும் புளிச்சாதம், தயிர்ச்சாதத்துடன் அவிச்ச முட்டை ஒன்றையும் பிரசாதமாக வழங்கலாம், கோவில்களில் இதை நடைமுறைப் படுத்தினாலென்ன? என நான் சொல்லிமுடித்ததும் நிலையக்கலையக தொலைபேசிகள் சூடேறத் துவங்கின. கோவில் குருக்கள் முதற்கொண்டு சமுகத்தில் தங்களைச் சைவப் பழங்களாக இனங்காட்டும் பெருந்தலைகள் வரை என்னை ஒரு பிடிபித்தார்கள். நான் எப்பொழுதும் சர்ச்சைக்குரிய விஷயங்களையே சொல்லிச் சமூகத்தைக் குழப்புவதாகக் குற்றம் சாட்டினார்கள். இதனால் ஒலிபரப்பு விதிகளுக்கமைய எனது கருத்தை நியாயப்படுத்த, சைவமுட்டை பற்றிய அறிவியல் விஷயங்களை விளக்க ஆரம்பித்தேன்.

தாயின் பாலைக் குடித்து வளரும் பாலூட்டிகளைப் போன்று, கோழிகளிலும் கருக்கட்டாத முட்டைகள் சூலகத்திலிருந்து தொடர்ச்சியாக வெளிப்படும். இந்த கருக்கட்டாத கருமுட்டைகள் சேவல் மிதிக்கும்போது வெளிவரும் விந்துகளுடன் சேர்ந்தால், அவை கருக்கட்டி, கருக்கட்டியமுட்டைகளாக வெளியேறும். சேவலின் விந்துகளுடன் சேராதவை, கருக்கட்டாத முட்டைகளாக உருக்கொள்ளும். இந்த முட்டைக்குள் கரு உயிர் இருக்காது. பேட்டுக் கோழிகளை வெட்டும்போது உள்ளே வட்டவடிவ சின்னச் சின்ன மஞ்சள் நிற முட்டைகள் இருப்பதைக் கண்டிருப்பீர்கள். சேவல் கோழி, பேட்டை மிதிக்காவிட்டாலும் இவைகள் கருக்கட்டாத, முழு முட்டைகளாகத் தொடர்ந்து வெளியேறிக்கொண்டேயிருக்கும்.

சும்மா இழுக்காமல் சைவமுட்டை விஷயத்துக்கு வாங்கோ, என்ற கருத்துப்பட குறுஞ்செய்திகள் வானொலி தகவல் பெட்டியில் வந்து குவிந்தன. நீண்ட எனது அறிவியல் தகவல்களால் நேயர்கள் சலிப்படைந்திருக்கவேண்டும். நிகழ்ச்சிக்குப் பொருத்தமான, கொக்கர கொக்கரக்கோ சேவலே என்ற டி.எம் சௌந்தர்ராஜன், ஜிக்கி பாடிய பாடலை ஒலிபரப்பி, எனது அறிவியல் விளக்கத்தைத் தொடர்ந்தேன்.

மனிதர்கள் உட்பட பாலூட்டிகளில், விந்துடன் இணைந்து கருக்கட்டாத முட்டைகள் அழிந்து, மாதவிடாய் காலத்தில் குருதியுடன் வெளிவரும். ஆனால் கோழிகளில் அப்படியல்ல. அவை கருக்கட்டாத, கரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயிரற்ற முட்டைகளாக வெளியேறும்.

ஊரிலே கோழிக் குஞ்சு பொரிக்க, முட்டைகளை அடை வைக்கிறோம். அப்போது, சில முட்டைகள் குஞ்சு பொரிக்காது கூழாகின்றன. இங்கு கூழாகும் முட்டைகள் கருக்கட்டாத முட்டைகள். குஞ்சு பொரிக்கும் முட்டைகள் கருக்கட்டிய முட்டைகள், என்ற தகவலை தொலைபேசியில் தொடர்பு கொண்டு சொன்னார் கொடிகாமத்து தம்பிராஜா. இவர் ஊரில் கோழிப் பண்ணை வைத்திருந்தவராம். நிறைய வாசிப்பதால் ஊர் உலகத்து தகவல்கள் அனைத்தையும் விரல் நுனியில் வைத்திருப்பவர். வானொலி விவாதங்களில் பங்குகொண்டு ஆக்கபூர்வமான கருத்துக்களைச் சொல்பவர். அவர் தனது கருத்துக்களைச் சொல்ல தாராளமாக நேரம் கொடுத்த பின்னர் நான் தொடர்ந்தேன்.

கோழிப் பண்ணைகளில் சிறிய கூடுகளில் வளரும் ஆயிரக்கணக்கான பேடுகளை, கிரமமாய் “விசிற்”பண்ணி சில்மிஷம் பண்ண, சேவல் கோழியால் முடியாது. பண்ணைகளில் சேவல் வளர்க்கப்படுவதும் இல்லை. இதனால் பண்ணைகளிலிருந்து சந்தைக்கு வரும் முட்டைகளில் கரு உயிர் இருக்காது. ஆனால் மற்ற எல்லாச் சத்துக்களும், கருக்கட்டிய முட்டைகள் போன்று இருக்கும். பசுவிலிருந்து வரும் பாலுக்கும், பண்ணைகளிலிருந்து வரும் கருக்கட்டாத, கரு உயிர் அற்ற முட்டைகளுக்கும் வித்தியாசமில்லை. இவை பாலைப்போல புரதம், கொழுப்புச் சத்துக்கள் அடங்கிய சைவ முட்டைகள், எனச்சொல்லி கோவில் பிரசாத விஷயத்துக்கு முற்றுப்புள்ளி வைத்தேன் நான்.

புலம்பெயர் நாடுகளில் இயங்கும் எவ்-எம் வானொலிகள், பெரும்பாலும் விளம்பரங்களை நம்பியே இயங்குகின்றன. அன்றைய நிகழ்ச்சியில் அட்டவணைப் படுத்தப்பட்டிருந்த விளம்பரங்களில் கோழிக்கடை விளம்பரமும் ஒன்று. கோழி இறைச்சி விளம்பரத்தில் சொல்லப்பட்ட விஷயங்கள் கலந்துரையாடலை, கறிக்கோழி பக்கம் திருப்பியது.

முட்டைக்காக வளர்க்கப்படும் கோழிகள், கறிக்கோழி இனங்களல்ல. கறிக்கோழி வளர்ப்பில் சேவலாக இருந்தாலென்ன பேடுகளாக இருந்தாலென்ன அவற்றின் சதைதான் முக்கியம். ஆனால் முட்டைக்காக வளர்க்கப்படும் கோழிக் குஞ்சுகள் எல்லாமே பேடுகளாக வளரவேண்டும். முட்டையிடும் கோழி இனங்களில் சதைவளர்ச்சி இருக்காது. இவற்றை இறைச்சிக்காக வளர்த்து விற்பனை செய்தால் பண்ணை வைத்திருப்பவர் திவாலாகிவிடுவார்.

கிராமங்களில் சேவல் கோழிகளையும் முட்டையிட்டு ஓய்ந்த பேட்டுக் கோழிகளையும் அடித்தே குழம்பு வைப்பார்கள். ஆனால் கறிக்கோழிகள் எனப்படும் புரொயிலர் கோழிகள் இனவிருத்தி செய்யப்பட்ட பின்பு எல்லாம் தலைகீழாக மாறிவிட்டன. காரணம் புரொயிலர்கோழி இனங்கள் 45 நாள்களில் இரண்டு கிலோவரை வளரக்கூடியன. இதற்குமேல் அற்றின் சதை வளர்ச்சி வெகுவாகக் குறைந்துவிடும். இதனால் 45 நாள்களுக்கு மேல் கறிக் கோழிகளை வளர்ப்பது இலாபகரமானதல்ல. பண்ணைகளிலிருந்து சந்தைக்குவரும் புரொயிலர் கோழிகள் பெரும்பாலும் நாற்பத்தைந்து நாள்கள் உயிர் வாழ்ந்தவையே!

இவைகள் உயிருடன் வாழ்ந்த நாள்களைவிட உறைகுளிர்ப் பெட்டிகளில் அதிக காலம் இருந்தவை என்பதே உண்மை, என இடையில் புகுந்து கொமன்ட் அடித்தார் நேயர் ஒருவர்.

நகைக்கடை விளம்பரத்தின் பின்னர் விவாதம் தொடர்ந்தது.

32 நாள்களிலேயே இரண்டு கிலோ இறைச்சியை கொடுக்கக்கூடிய கறிக்கோழியை இப்பொழுது இன விருத்தி செய்துள்ளார்கள். இந்த இனத்துக்கு கோப் (Cobb) என்று பெயர்.

கறிக்கோழிகள், அங்கிங்கு திரும்ப முடியாத சிறிய கூண்டுகளில் வளர்க்கப்படுவன. அவற்றைக் கூண்டுக்கு வெளியே விட்டால் அவற்றால் ஓட முடியாது.

32-நாள்களில் இரண்டு கிலோவரை வளரும் கோப் இன கறிக்கோழிகளின் கால்களால் அதன் உடல் பாரத்தை தாங்கமுடியாது. சுருண்டு விழுந்துவிடும். கூண்டுக்குள் இருந்தபடியே தீன் தின்னும் கோழியின் உடல் வளரும் வீதத்துக்கேற்ப இருதயம் வளர்வதில்லை. இதனால் கோளியின் சிறிய இருதயத்தால் பெரிய உடலுக்கு இரத்தத்தைப் பாச்ச முடிவதில்லை.

நாட்டுக்கோழிகள் 45-நாள்களில் கால் கிலோவும் தேறமாட்டது. ஆனால் பண்ணைகளில் வளர்க்கப்படும் புறொயிலர் கோழிகள் எப்படி இரண்டு கிலோ நிறைக்குமேல் விருத்தியடைகின்றன? என்பது நேயர் ஒருவரின் நியாயமான கேள்வி.

வளர்ச்சிக்கான ஹோமோன்களை கோழித் தீனுடன் கொடுப்பது வளர்ச்சியடைந்த நாடுகளில் குற்றமாகும். இலங்கை இந்தியா போன்ற நாடுகளிலும் கோழித் தீனுடன் ஹோமோன்கள் கொடுக்கப்படுவதாகத் தெரியவில்லை. சதை வளர்ச்சிக்கான ஹோமோன்களின் விலை அதிகமாதலால் இது இலாபகரமானதல்ல. ஆனால் புறொயிலர்கோழி இனங்கள் விரைவில் சதைவைக்குமாறு இனவிருத்தி செய்யப்பட்டவை. இவற்றின் உடலுக்குள் விரைவில் சதைவளர்வதற்கான மரபணுக்களுண்டு. இந்த மரபுணுக்கள் நாளொன்றுக்கு 50 கிராமுக்குமேலான சதையை வளர்க்கும்வகையில் ஹோமோன்களை கோழியின் உடலுக்குள் உற்பத்தி செய்யும். கறிக்கோகோழியின் தசைகளில் பாவிக்கப் படாது எஞ்சியிருக்கும் ஹோமோன்கள், கோழியை உட்கொள்ளும் மனித உடலிலும் தாக்கத்தை ஏற்படுத்தலாமென நம்பப்படுகிறது.

இதனால்தான் பிள்ளைகளுக்கு அதிக கறிக் கோழி கொடுப்பது நல்லதல்ல. பெண்பிள்ளைகள் குறைந்த வயதில் பூப்படைவதற்கு இதுவும் ஒரு காரணம், என்ற குறிப்பை வானொலிக்கு அனுப்பியிருந்தார் பார்வதி அம்மா.

நீங்கள் சொல்வதில் உண்மை இருக்கலாம் அம்மா, ஆனால் இன்னமும் இது விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்படவில்லை என்ற பதிலுடன் அன்றைய அறிவியல் விவரணத்தை நிறைவு செய்ய முயன்றேன். இதற்காகவே காத்திருந்த சாமி, கோழிமுட்டைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிவருவது மலவாசலூடாகவா? என்ற குறும்புத்தனமான கேள்வியொன்றை முன்வைத்தார். இவர் ஒரு சபைகுழப்பி. நிகழ்ச்சியை நிறைவுசெய்யும் நேரத்தில் வானலைக்கு வந்து தொல்லை கொடுப்பவர். இருந்தாலும் அவரது கேள்வி காத்திரமானது என்பதால், மேலும் அழைப்பு வராதிருக்க தொலைபேசிகளைத் துண்டித்து விட்டு சாமியின் கேள்விக்குப் பதில் சொல்லத் துவங்கினேன்.

பறவைகளில் மலவாசல் என்று நாம் கருதுவது, "புணர்ச்சிக் கழிவுப் பொதுவாய்"(Cloaca) எனப்படுவதையே. இதனூடாகத்தான் புணர்ச்சியும், கழிவும், முட்டையும் வெளியேறும். சிறுநீர்க் குழாயும், பெருங்குடலும் புணர்ச்சிக் கழிவுப் பொதுவாய்க்குள்ளேயே முடிவடையும். இதனால்தான், கோழி இட்ட முட்டையில் கோழி எச்சம் பிரண்டிருப்பதை வைத்து, முட்டை உணவுக் குழாயூடாக (குடல்) வந்து மலவாசலூடாக வெளியேறுவதாக நாம் தவறாக எண்ணுவதுண்டு.

புணர்ச்சி கழிவு பொதுவாயின் உட்பகுதியில் மிகச் சிறிய ஆண், பெண் பால் உறுப்புக்கள் இருக்கும். கோழியில் ஆண்குறி, புணர்ச்சிக் கழிவுப் பொது வாய்க்குள், சாதாரண நிலையில் சுருண்டிருக்கும். இதனால்தான் சேவல், பேட்டுக்கோழியை மிதிக்கும் போது வாலைப் பதித்து, பேட்டின் செண்டைப்பூவை கொத்தி இழுப்பது. இது பேட்டுக் கோழிக்கு சேவலால் விடப்படும் சிக்னல். ஆனால் வாத்துக்களில் அப்படியல்ல. வாத்தில் ஆண்குறி புணர்ச்சிக் கழிவு பொது வாய்க்கு வெளியே சற்று நீண்டு துலக்கமாக இருக்கும்.

கோழிகள் சிறுநீர் கழிக்குமா? அதற்கு சிறுநீர்க்குழாய் இருப்பதாகச் சொல்கிறீர்களே என, தனிப்பட்ட எனது முகநூல் மெஸெஞ்சருக்கு சாமியின் குறிப்பு வந்தது.

கோழி மட்டுமல்ல எல்லாப் பறவைகளும் சிறுநீர் கழிக்கும். பறவைகளுக்கும் சிறுநீரகம், சிறுநீர்க் குழாய் என்பன உண்டு. சிறுநீரில் உள்ள நீர் பறவைகளில் மீண்டும் உடலுக்குள் உறுஞ்சப்படுவதால், சிறுநீர்க் கழிவு திண்மமாகவே வெளியேறும். சுருக்கமாகச் சொன்னால், முட்டை, சிறுநீர், மலம் ஆகியன வெளியேறலும், புணர்ச்சியும், பறவைகளில் நாம் "மலவாசல்" என்று கருதும், "புணர்ச்சிக் கழிவுப் பொதுவாய்" ஊடாகவே நடைபெறும் எனச் சொல்லி, மேலதிக விவாதங்களுக்கு இடம்கொடுக்காது நிகழ்ச்சியை நிறைவு செய்தேன் நான்.

# வெகுதூரம் செல்லாதே



என்னை விட்டு நீ
வெகுதூரம் செல்லாதே
ஒரு நாள் என்பது
என் வாழ்வில்
மிகவும் நீண்ட பொழுது
வெற்று நிலையத்தில்
காத்திருக்கும் பயணி போல
நான் உனக்காகக் காத்திருக்கும்
ஒவ்வொரு நொடிகளும் பொன் போன்றவை
என் அன்பே
மணி நேரம் கூட
என்னை விட்டு விலகாதே
உன் பிரிவு
என் இதயத்தை திணறடிக்கின்றது
அன்றொருநாள் நான்
நட்சத்திரங்கள் சாட்சியாகச் சொன்னேன்
நீ எப்போதும்
என்னால் நேசிக்கப்படுவாய் என்று
நான் இப்போதும் சொல்கிறேன்
உன்னை ஆழமாக நான் காதலிக்கிறேன் என்று
பறவைகள் பாடும் வரை
மீன்கள் இவ்வுலகில் நீந்தும் வரை
சூரியன் இவ்வுலகில் பிரகாசிக்கும் வரை
காற்று வீசும் வரை
கடலில் அலைகள் இருக்கும் வரை
வானில் நட்சத்திரங்கள் மின்னும் வரை
இவ்வுலகை
முகில்கள் சூழ்ந்திருக்கும் வரை
கோள்கள் சுழரும் வரை
உன்னை நான்
காதலித்துக்கொண்டே இருப்பேன்

■ தியா காண்டீபன் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கூட்டுப்பிரார்த்தனை - 2024 - பாதீடு

இருநூற்று இருபத்தைந்து பக்த கோடிகள்
கோட்டை இராசதானி
ஜப்பான் பாராளுமன்றப் பெருங்கோயில்
உருவேறி வரவு செலவுக் கூட்டுப்பிரார்த்தனை
கூடிக் கலையாடுவர்
கவிபாடுவர் பேசுவர் ஏசுவர்
ஆடிப்பாடித் துள்ளிக் குதிப்பர்
அடி சண்டை பிடிப்பர்
அடுத்தநாள் அவசரமெனில்
மின்விளக்குக் கேளிக்கையில்
விவாதம் வேண்டாமென்றே
தொடுத்த போரைக் கைவிட்டு ஆரத்தழுவி
வாக்களித்து வெற்றி வெற்றியென்றே
ஐ எம் எவ் அடியார்கள் கோசமிடுவர்

ஐ எம் எவ்வை விட்டால் வேறு கதியில்லை
என்று சொல்லவொரு சனாதிபதி
அது கேட்டுக் கேட்டுக்குக் கைகொடுக்கும் ஐ எம் எவ்
கடன் கொடுத்து உடன்கட்டையேறும்
அடித்து இடித்துக் குதிப்பார் சஜித் எனினும்
மக்கள்பிடி தளராமல் பாதுகாப்பதவர் விதியெனும்
எதிரணிப் பஜனைக்கும் ஐ எம் எவ்வே பாட்டின் பொருளாவர்

புரட்சி சிவப்பென்று பொடியளுக்குப் பொடிபூசி
வரட்சியில் மொத்தமாய் பௌத்த பிக்குகள் ஆசி
அறகலய வென்றால் அரசோ வெறுந்தூசி
நிபந்தனைகளோடு ஐ எம் எவ்வை ஆட்கொள்வோம்
என்பார்க்கும் அப்பருக்கும் அப்பர் அவரப்பருக்கும்
ஐ எம் எவ்வே கதி

ஒன்றாய் ஓர்குலமாய் நின்றார் பிரார்த்தனையில்
நன்றாயினர் அவர்தம் கைவண்ணத்தில்
நின்றார் நிலமிசை நீடு வாழ்வார் என்றே
பரலோகப் பயணமானார்
முத்திப் பேரின்ப மோட்சங் கண்டார்
ஒன்றாய் விரைந்தே!

## ஐ எம் எவ். பெம்மானே!

அனுதினமும் அநுபூதிநிலை பெருக்கி
ஐ எம் எவ்வே பதியாகி
மக்களெல்லாம் பசுவாகி
நுகர்வும் உலகமயமும்
அடிமுடியற்ற பரஞ்சோதியாகி
பாசவலைப் பற்றறுத்து
சாதாரண சனமெல்லாம் மகாசனமாகி

நானாகி நீயாகி அவனாகி அவளாகி
இவனாகி இவளாகி
ஆணாகி பெண்ணாகி மானாகி மரமாகி
தேனாகி தினையாகி ஊனாகி உயிராகி
இரும்பாகி கல்லாகி மண்ணாகி மயிராகி
மலையாகி மடுவாகி கடலாகி நிலமாகி
மழையாகி வெள்ளமாகி வெய்யிலாகி வரட்சியாகி
சுனாமியாகி சூறாவளியாகி
அதுவாகி இதுவாகி அத்வைத வேதமாகி
ஒன்றாகி இரண்டாகி ஒன்றும் இரண்டுமாகி
உள்ளாகி வெளியாகி வெளியாகி உள்ளாகி
பூவரசாகி வேம்பாகி பனையாகி தென்னையாகி

தன்மை முன்னிலை படர்க்கையாகி
ஒருமை பன்மை உயர்திணை அஃறிணையாகி
இலக்கியம் இலக்கணமாகி
நீதி நியாயமாகி சரி பிழையாகி
உண்மை பொய்யாகி பொய்யே உண்மையாகி
மந்திரிசபையே பாராளுமன்றமாகி
தேர்தலாகி எம்பியாகி தெருவியாபாரியாகி
எல்லாமே நன்றாகி வென்றாகி

தற்காத்துத் தகைசான்ற சொற்காத்து பாதுகாப்பு
அற்றோர் பாமரச் சனங்காத்து
விற்று வரும் இலாப நட்டக் கணக்குப்பார்த்து
மொத்த வியாபாரத்தில் ஐ எம் எவ்வின் சொத்தாகி
முழுச்சனமும் ஐ எம் எவ்வின் வித்தாகி விழுதாகி
காசாகி கரியாகி உயிராகி பிணமாகி
பசியாகிப் பிணியாகி சாவாகிச் சாம்பலாகி
பித்தாகிச் சத்தாகி விண்ணோர்களேத்த விலைவாசியாகி
செத்தாலென்ன சிவலோகந்தானே
முத்தியடைந்தாலென்ன பேரின்பப் பெரும்பேறே!
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன்
ஐ எம் எவ் பெம்மானே எம்மானே!

## ஐ எம் எவ். மானங்காத்தார்

அரசமரப் பாராளுமன்றப் படியேறி
விசர் வராமல் சனத்தைக் காக்கச் சன்னதங்கொண்டு
நூற்றியிருபத்திரண்டு எம்பிமார் எழுந்தருளி
சோற்றுக்காய் ஐ எம் எவ் துதிபாடி பதவி
வீற்றிருக்க விருந்தளித்து வென்றார்
வரவு செலவு வாக்கெடுப்பில்
தந்தை வாக்களிக்க மகனோ வீட்டுக்கு விட்டோட
கூட்டாளிகள் சிலரும் கற்போடு காணாமல்போக
மந்தைகளாய் விந்தை பல செய்தே வென்றார்
வென்றார் சாதாரண சனமெல்லாம் தோல்விபெற
ஐ எம் எவ் மானங்காத்தார்
அரியண்டமினியில்லையென்று ஆற அமர்ந்தார்
அரியாசனை மீதேறிக் குந்தி.

## அதுவென்றால் இதுவாகும்

இந்தியா என்றால் திருகோணமலை என்றாகும்
அதானி என்றால் பூநகரி மன்னார் கொழும்புத் துறைமுகம் ஆகும்
சீனாவென்றால் அம்பாந்தோட்டை ஆகும்
சுமந்திரன் சாணக்கியன் என்றால்
ரணில் விக்கிரமசிங்க என்றாகும்
தமிழர் உலகப்பேரவையென்றால் மல்வத்தை அஸ்கிரிய
பீடமாகும்
இமாலயப் பிரகடனமென்றால் இலங்கைத் தீவு ஆகும்
டெல்லிப் பணிமனையென்றால் தமிழரசுத்தலைவர் ஸ்ரீதரன் ஆகும்
அதுவாகும் இதுவாகும் எதுவுமாகும்
இனியென்ன நமக்கெல்லாம் விசராகும்
ஏன் என்றால் விசமாகும்
ஆதலினால் ஆராயாதிருப்பாயாக
மௌனமே மோனத்தவமாய்.

சோ.தேவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலை மாற்றெனும் விந்தை

த.அபிநாத்




தமிழின் சொல்லணிகளுள் ஒன்றாக அடையக் கூடிய மாலை மாற்று அணியானது ஒரு சொல்லையோ, தொடரையோ அதன் ஆரம்பம் முதல் இறுதிவரை படித்தாலோ அல்லது இறுதியிலிருந்து ஆரம்பம் வரை படித்தாலோ எவ்வித மாற்றமும் இன்றி ஒரே மாதிரி அமைவதனால் அணிகளுள் தனிச்சிறப்புடையதாக அமைகிறது. குடகு, திகதி, கைரேகை போன்ற சொற்கள் மற்றும் மாடு சாடுமா, தேரு வருதே, மாவடு போடுவமா போன்ற தொடர்கள் மாலை மாற்றாக அமைகின்றன. தமிழை சிறப்பிக்கும் மாலை மாற்றை மாறனலங்காரம் "ஒரு செய்யுள் முதல் ஈறு உரைக்கினும் அஃதாய் வருவதை மாலை மாற்றென மொழிப" என வரை விலக்கணப்படுத்துகிறது.

மாலை மாற்றானது தமிழில் மாத்திரமன்றி ஆங்கிலத்தில் Palindrome என அறியப்படுகிறது. civic, madam, noon போன்ற சொற்கள் இதற்கு உதாரணங் களாக அமைகின்றன. ஆங்கிலத்தில் 17ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பென்ஜோன்ஸன் என்பவரே இவ் வுத்தியை கையாண்டிருப்பதாக குறிப்பிடப்படுவதுடன் கிமு 79 காலப்பகுதியை சேர்ந்த "SATOR AREPO TENET OPERA ROTAS" எனும் இலத்தீன் தொடரே உலகின் மிகப்பழமையான மாலை மாற்றாக அமைகிறது.

அலங்கார இலக்கண நூல்களுள் தலையாய தாக போற்றப்படும் தண்டியலங்காரத்தில்

"நீவாத மாதவா தாமோக ராகமோ
தாவாத மாதவா நீ"

எனும் குறள்வெண்பா மாலை மாற்றாக அமை வதுடன் நீங்காத பெருந்தவத்தையுடையவனே, மோக மாகிய வேட்கை தீராதது ஆதலால் மாதர் மேல் கொள்ளும் ஆசையை நீக்குக எனும் பொருளையும் உணர்த்தி நிற்கிறது. இவ்விதமான நயமும் தனித்துவ மும் மிக்க சித்திரகவிகளுள் ஒன்றான மாலை மாற்றை கை யாண்டு பல விந்தை மிகு படைப்புகள் இலக்கிய உலகில் சிருஷ்டிக்கப்பட்டுள்ளன.

தோடுடைய செவியன் விடை யேறியோன் என மழலை மொழி பாடிய ஞானசம்பந்தர் தன் 375வது திருப்பதிகத்தினை முழுமையாக மாலை மாற்றணி யினை கையாண்டு பாடியுள்ளார். "யாமாமா நீயா மாமா யாழீகாமா காணாகா காணாகாமா காழீயா மாமாயாநீ மாமாயா"

மேற்கண்ட பாடலானது அப்பதிகத்தின் முதற்பா ஆகும். ஆன்மாக்களாகிய நாங்கள் கடவுளென்றால் அது பொருந்துமா? நீயே ஒப்பில்லாத கடவுளென்றால் அது முற்றிலும் தகும். பேரியாழ் இசைப்பவனே, யாவரும் விரும்பத்தக்க கட்டழகனே, யாவரும் காணுமாறு பாம்பு களை அணிகலனாக தரித்தவனே. அவயவங்கள் காணா வண்ணம் காமனை அருவமாகச் செய்தவனே. சீர்காழி என்னும் திருத்தலத்தில் வீற்றிருந்தருளுபவனே மாயை முதலிய மலங்களிலிருந்து எம்மை விடுவிப்பாயாக என்ற அரும் பொருளின் பொதிவாக அமைகிறது.

18ம் நூற்றாண்டு காலப்பகுதியில் மஹாகவி வேங்கடாத்வரி வடமொழியில் "ராகவயாதவயீ ம்" எனும் காவியத்தினை மாலை மாற்றணியை கை யாண்டு பாடியிருப்பினும் அதன் சிறப்பம்சம் யாதெனில் இட மிருந்து வலமாக படிக்கும்போது இராம சரிதையான இராமாயணமாகவும், வலமிருந்து இடமாக படிக்கும் போது கிருஷ்ணசரிதையான பாகவதமாகவும் பொருள் தருவதேயாகும்.

சமகாலத்தில் வெளி வந்த வினோதன் திரைப் படத்தில் கவிஞர் மதன்கார்க்கி மாலை மாற்றாக

" மே கராகமே மே எதாளமே தாரா ராதா
காலபாலகா வாதமாதவா ராமா மாரா "

என அப்பாடல் முழுமையையும் மாலை மாற்றாக எழுதியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இவற்றுக்கப்பால் ஈழத்துகவிஞரும் எனது ஆசிரியருமான இ.சு.முரளிதரனின் கலையுருக்காட்டி எனும் நூலிலே

" நாகவாகனா மாநடனமா நேச வாசனே வேகமாகவே
வேதமோதவே பூவை வாசவா வாசவாவை பூ வேதமோதவே
வேகமாகவே நேசவாசனே மாநடனமா நாக வாகனா
நாத நூதனா ராகசாகரா நே ய மாயனே மாது போதுமா
தோடுபாடுதோ நாவை நாரணா நாரணாவை நா தோடுபாடுதோ
மாது போதுமா நேயமாயனே ராக சாகரா நாத நூதனா"

என திருமாலை போற்றும் வண்ணமாக மாலை மாற்றுப்பாடலை எழுதியுள்ளார்.

இவ்விதமாக தனித்துவம் மிக்கதான மாலை மாற்றணியின் தனித்துவம் மற்றும் அதன் அரிதான பாவனையையும் அறிவதனூடாக அதன் மாட்சிமை யை உணரமுடியுமாயுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வ.ந.கிரிதரன்

# குடிவரவாளன்

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்




ஏற்கனவே அமெரிக்க தடுப்புமுகாம் வாழ்வை மையமாக வைத்து "அமெரிக்கா" என்னுமொரு சிறுநாவல் எழுதியுள்ளேன். ஒரு காலத்தில் கனடாவிலிருந்து வெளிவந்து நின்றுபோன "தாயகம்" சஞ்சிகையில் 90களில் தொடராக வெளிவந்த நாவலது. பின்னர் மேலும் சில சிறுகதைகளை உள்ளடக்கித் தமிழகத்திலிருந்து "அமெரிக்கா" என்னும் பெயரில் ஸ்நேகா பதிப்பக வெளியீடாகவும் வெளிவந்தது. உண்மையில் அந்நாவல் அமெரிக்கத் தடுப்பு முகாமொன்றின் வாழ்க்கையினை விபரித்தால் இந்தக் குடிவரவாளன் அந்நாவலின் தொடர்ச்சியாக தடுப்பு முகாமிற்கு வெளியில் நியூயார்க் மாநகரில் புலம்பெயர்ந்த தமிழனொருவனின் இருத்தலிற்கான போராட்ட நிகழ்வுகளை விபரிக்கும். இந்த நாவல் ஏற்கனவே பதிவுகள் மற்றும் திண்ணை இணைய இதழ்களில் அமெரிக்கா 2007 ஆம் காலப்பகுதியில் தொடராக வெளிவந்தது குறிப்பிடத்தக்கது. இந்நாவல் தமிழகத்தில் "ஓவியா பதிப்பக" வெளீயீடாகக் "குடிவரவாளன்" என்னும் பெயரில் வெளியாகியுள்ளது. ஒரு பதிவுக்காக இந்நாவல் இங்கு தொடராகப் பிரசுரமாகும். - வ.ந.கி -

## அத்தியாயம் ஒன்று
## 'இன்று புதிதாய்ப் பிறந்தேன்'

நியூயார்க் மாநகரத்தின் புரூக்லின் நகரின் கண்ஃப்ளஷிங் வீதியில் அமைந்திருந்த சீர்திருத்தப் பள்ளியாகவும், அவ்வப்போது சட்டவிரோதக் குடிகாரர்களின் தடுப்புமுகாமாகவும் விளங்கிய அந்த யுத்தகாலத்துக் கடற்படைக்கட்டடத்தின் ஐந்தாவது மாடியின் பொழுதுபோக்குக் கூடமொன்றிலிருந்து இருள் கவிந்திருக்குமிந்த முன்னிரவுப் பொழுதில் எதிரே தெரியும் "எக்ஸ்பிரஸ்" பாதையை நோக்கிக் கொண்டிருக்குமிந்த அந்தக் கணத்தில் இளங்கோவின் நெஞ்சில் பல்வேறு எண்ணங்கள் வளைய வந்து கொண்டிருக்கின்றன. கடந்த இரு மாதங்களாக அவன் வாழ்வினோர் அங்கமாக விளங்கிக் கொண்டிருந்த இந்தத் தடுப்பு முகாம் வாழ்க்கைக்கோர் விடிவு. நாளை முதல் அவனோர் சுதந்திரப் பறவை. சட்டவிரோதக் குடியாக அச்சிறையினுள் அடைபட்டிருந்த அவனைப் பிணையில் வெளியில் செல்ல அனுமதித்துள்ளது அமெரிக்க அரசின் நீதித்துறை. அவனது அகதி அந்தஸ்துக் கோரிக்கைக்கானதொரு தீர்வு கிடைக்கும் அவன் வெளியில் தாராளமாகத் தங்கித் தனது வாழ்வின் சவால்களை எதிர்நோக்கலாம். அவனைப் பற்றிச் சிறிது இவ்விடத்தில் கூறுவது வாசகருக்கு உதவியாகவிருக்கலாம்.

இளங்கோ: இவனொரு இலங்கைத்தீவின் தமிழ்க் குடிமகன். இளைஞன். 1983 இனக்கலவரத்தைத் தொடர்ந்து நாட்டைவிட்டு வெளியேறிய ஆயிரக்கணக்கான இலங்கை அகதிகளிலொருவன். இலங்கையின் பிரதான இரு சமூகங்களான தமிழ் மற்றும் சிங்களச் சமூகங்களுக்கிடையிலான இனரீதியிலான புகைச்சல்களுக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கும் அதிகமானதொரு சமூக, அரசியல் ரீதியிலானதொரு வரலாறுண்டு. இறுதியாக இலங்கையை ஆண்ட விதேசியர்களான ஆங்கிலேயர் 1948இல் இலங்கையைவிட்டு வெளியேறிய காலகட்டத்திலிருந்து ஆரம்பித்தது அண்மைய இன ரீதியிலான மோதல்கள். ஆயினும் இவ்விதமானதொரு நிலையுருவாவதற்குக் காரணங்களாக இத்தீவின் கடந்தகால வரலாற்று நிகழ்வுகள் இருந்தன. துட்டகாமினி / எல்லாளன் தொடக்கம், முதலாம் இராசராசன் / இராஜேந்திரன் பின் சிங்கைப் பரராசசேகரன் எனத் தொடர்ந்து, கடைசிக் கண்டி மன்னன் ஸ்ரீஇராசசிங்கன் என முடிந்த நீண்டகாலத்து வரலாற்று நிகழ்வுகளையெல்லாம் அவ்வளவு இலகுவாக ஒதுக்கித் தள்ளிவிட முடியாது. இரு பிரதான சமூகங்களுக்குமிடையில் நிலவிய பரஸ்பர அவநம்பிக்கையும், இனரீதியிலான குரோதங்களும் 1948இலிருந்து மீண்டும் சிறிது சிறிதாகப் பற்றியெறிந்து இன்று சுவாலை விட்டெரிய ஆரம்பித்துள்ளன. இனரீதியிலான திட்டமிட்ட குடியேற்றங்கள், கல்வியில் தரப்படுத்தல், மொழி மற்றும் மதரீதியிலான அரசியல் முன்னெடுப்புகள் இவையெல்லாம் பிரச்சினையை மேலும் சுவாலை விட்டெரிய வைத்தன. இவையெல்லாம் மேலோட்டமான காரணங்கள். ஆழமான அடிப்படைக் காரணங்களாக நாட்டு மக்களிடையே நிலவிய சமூக, அரசியல், பொருளாதார ரீதியிலான குணாம்சங்கள், பிரச்சினைகளிருந்தன.

எதிரே விண்ணில் நிலவு பவனி வந்து கொண்டிருந்தது. அருகில் ஒரு சில சுடர்கள். நகரத்து வான். நகரத்து நிலவு. நகரத்துச் சுடர்கள். நகரத்து ஆடம்பரமும், கேளிக்கை உல்லாசங்களும், செயற்கையொளியும் மண்ணை மட்டுமல்ல விண்ணையும் பாதிப்பதன் விளைவு. கிராமங்களிலிருந்து மக்கள் நகரங்களுக்கு; வறிய நாடுகளிலிருந்து செல்வந்த நாடுகளுக்கு என்றெல்லாம் எப்பொழுதுமே புலம்பெயர்ந்து கொண்டு தானிருக்கின்றார்கள். புலம்பெயர்தல் பல்வேறு வழிகளில், பல்வேறு காரணங்களுக்காக அவ்வப் பொழுது நடைபெறுகின்றன. புதையல்கள் நாடிய புலம் பெயர்வுகள்; மண்ணை அடைதற்கான புலம் பெயர்வுகள்; பெண்/பொன்னிற்கான புலம்பெயர்வுகள்; வர்த்தகத்திற்கான புலம்பெயர்வுகள்; வாழ்வைத் தப்ப வைத்துக் கொள்வதற்கான புலம்பெயர்வுகள்; யுத்தங்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான புலம்பெயர்வுகள். புலம் பெயர்ந்த நெஞ்சங்களுக்கு அவ்வப்போது அதிகமாக ஆறுதலளிப்பவை இந்த வானும், மதியும், சுடரும் தான். வெண்ணிலவை ஆறுதளிக்க நாடிய கவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நெஞ்சங்கள்தான் எத்தனை எத்தனை.

மீண்டும் இளங்கோவின் சிந்தனை எதிர் காலத்தை நோக்கித் திரும்பியது. அவன் நாட்டை விட்டுப் புறப்பட்டதற்கு அரசியல் மற்றும் பொருளா தார ரீதியிலான காரணங்களிருந்தன. உயிர்தப்பிப் பிழைத்தலொரு முக்கியமான காரணமென்றால் அடுத்தது பொருளியல் ரீதியில் அவனையும் அவன் குடும்பத்தவரையும் முன்னேற்றுவது இன்னுமொரு காரணம். வெளியில் சென்றதும் அவன் எதிர் நோக்க வேண்டிய பல பிரச்சினைகள் அவனை நோக்கிக் காத்துக் கிடக்கின்றன. புதிய மண். புதிய சூழல். புதிய கலாசாரம். வேற்று மனிதர்கள். தப்பிப் பிழைத்தலுக்கான போராட் டம். இவற்றுக்கிடையில், இவர்களுக்கிடையில் இருத் தலுக்கான போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும்.

கையில் இருநூறு அமெரிக்க டாலர்களே யிருந்தன. இதனையே முதலாக வைத்து அவன் தன் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். "என்ன ஒரே யோசனை?" எதிரில் அருள்ராசா. இவனுமொரு இலங்கைத் தமிழ் அகதியாகப் புலம்பெயர்ந்தவன். அவர் களுடன் தங்கியிருந்த ஏனைய தமிழ் அகதிகளெல்லாரும் ஒருவரொருவராக வெளியில் சென்றுவிட இவனும் இளங்கோவும் மட்டுமே எஞ்சியிருந்தார்கள். அவர் களிருவருக்கும் இங்கு தெரிந்தவர்களென்று யாருமிருக்க வில்லை. மற்றவர்களுக்கு "பாஸ்டன்", "நியூஜேர்சி", "கனக்டிகட்", "லாங் ஐலண்ட்" என்று பல்வேறிடங்களில் பலரிருந்தார்கள். இவர்களுக்கு யாருமில்லை. இருவரும் சேர்ந்தே நியூயார்க்கில் வாழ்வை முன்னெடுப்பதாக முடிவு செய்திருந்தார்கள். அருள்ராசா, ஊரில் இவ னொரு கணக்காளனாகப் பிரபல நிறுவனமொன்றிற் காகப் பணியாற்றியவன்.

"நாளைக்கு வெளியிலை சென்றதும் எங்கை போய் தங்குவதாக பிளான்?" இளங்கோ கேட்டான்.

கையிலிருந்த "இந்தியா எப்ரோட்" (India Abroad) பத்திரிகையின் வரி விளம்பரப் பகுதியினைக் காட்டி னான். அத்துடன் கூறினான்: "இங்கை ரூம் வாடகைக்கு வாரத்துக்கு முப்பது டொலர்களென்று போட்டிருக்கு. முதலிலை அங்கு போய்க் கொஞ்ச காலத்துக்குத் தங்கி யிருப்பம். அங்கிருந்து கொண்டு ஏதாவது வேலைக்கு முயற்சி செய்வம். என்னட்டையும் ஒரு முந்நூறு நானூறு டொலர்கள்தானிருக்கு. உன்னிடமும் இருநூறு தானிருக்கு. இது போதும் வாழ்க்கையை ஆரம்பிக்க. நான் மத்தியானம் போன் பண்ணிப் பார்த்த னான். மராட்டியக் குடும்பமொன்றின் வீடு. அங்கை பலர் அறைகளை வாடகைக்கு எடுத்து இருக்கிறார்களாம். முதலிலை அங்கை போவம். நாளைக்கு வருகிறோ மென்று சொல்லிப் போட்டன். நீயென்ன சொல்லு றாய்?"

"நீ சொல்லுறதும் சரியாய்த்தானிருக்கு. அங்கை இருக்கிறவர்களிடமும் ஏதாவது யோசனைகளைக் கேட்கவும் வாய்ப்பாகவுமிருக்கும். எதுக்கும் முதலிலை அங்கை போவம். பிறகு எல்லாவற்றையும் பார்ப்பம். முதலிலை இந்தச் சிறையிலிருந்து விடுபட்டால் அது போதுமெனக்கு."

அதன்பின் சிறிதுநேரம் கூடத்திலிருந்த தொலைக்காட்சியில் ஏனைய கைதிகளுடன் சேர்ந்து ஓடிக்கொண்டிருந்த பழைய திரைப்படமொன்றைப் பார்த்தார்கள். சிறிது நேரம் "டேபிள் டென்னிஷ்" விளையாடினார்கள். அதுவும் சிறிது நேரத்தில் சலித்துப் போய்விடவே படுக்கும் கூடத்திற்கு வந்து தத்தமது "பங்பெட்ஸ்"ஸில் படுத்துக் கொண்டார்கள். அப் பொழுது நேரம் நள்ளீரவை நெருங்கிக் கொண்டிருந்தது. கூடங்களை இணைக்கும் நடைபாதைகளில் கறுப்பினக் காவலர்கள் தூங்கி வழிந்து கொண்டிருந்தார்கள். கைதிகளை அவ்வப்போது வந்து எண்ணிச் சரிபார்க்கும் அதிகாரியும் வந்துபோய் நீண்டநேரமாகி விட்டிருந்தது. ஆப்கானியர்கள், மத்திய அமெரிக்கர்கள், கரிபியன் தீவுக் கூட்டங்களைச் சேர்ந்தவர்களென்று கைதிகள் பலர். பல்வேறு விதமான கைதிகள். சட்டவிரோதக் குடிகள். சிறு குற்றங்கள் செய்து தண்டனை அனுபவித் துக் கொண்டிருப்பவர்கள். நாடு கடத்தலை எதிர் நோக்கி யிருப்பவர்கள். இவர்களனைவரும் பெரும் பாலும் உறங்கிக் கொண்டிருந்தார்கள். அருள்ராசா கூடச் சிறுது நேரத்தில் உறங்கிப் போய் விட்டான். இளங்கோவுக்கு மட்டும் உறக்கமே வரவில்லை. இவ்விதமான சமயங் களில் அவனுக்குக் குறிப்பேடு எழுதும் பழக்கமுண்டு. தலைமாட்டில் தலையணைக்கடி யிலிருந்த குறிப் பேட்டினை வெளியில் எடுத்தான். அதிலிருந்தவற்றைச் சிறிது நேரம் வாசித்தான். நெஞ்சில் மீண்டும் உற்சாகம் சிறிது சிறிதாகக் குமிழியிட்டது. அதிலிவ்விதம் மேலும் எழுதினான்: "இன்று புதிதாய்ப் பிறந்தேன்". மனம் இலேசானது. அருகில் உறங்கிக் கொண்டிருந்த மானிடப் பூச்சிகளைப் பார்த்தான். "யானெதற்கும் அஞ்சுகிலேன் மானுடரே!" என்று மனம் கூவியது. புதிய கனவுகளுடன், புதிய நம்பிக்கைகளுடன், உற்சாகம் பொங்க இளங்கோ மறுகணமே ஆழ்ந்த தூக்கத்திலாழ்ந்து விட்டான்.

## அத்தியாயம் இரண்டு:
## நள்ளிரவில்...

ஆழ்ந்த தூக்கத்தில் கிடந்த இளங்கோ திடீரென விழித்துக் கொண்டான்.. அருகில் அனைவரும் ஆழ்ந்த தூக்கத்தில், ஒரே ஒருவனைத் தவிர, மூழ்கிக் கிடந்தார் கள். பகல் முழுவதும் கற்பனைகளும், எதிர்காலக் கனவுகளும், சலிப்பும், விரக்தியுமாகக் காலத்தை யோட்டியவர்களின் சிந்தைகளை எத்தனையெத்தனை கனவுகளும், கற்பனைகளும் ஆக்கிரமித்துக் கிடக்குமோ? அருகில் தூங்காமல் படுக்கையில் விழித்திருந்தான் ரஞ்சிற்சிங். சில நாட்களுக்கு முன்னர் ஜேர்மனியிலிருந்து வந்திருந்தான். அங்கு அவனுக்குச் சட்டரீதியான குடி யுரிமை ஆவணங்களிருந்தன. இங்கு சட்டவிரோதமாக வந்து அகதி அந்தஸ்து கோரியிருந்தான். பிடித்து உள்ளே போட்டு விட்டார்கள். அதன்பின்தான் அவனுக்கு அமெரிக்கரின் அகதிக் கோரிக்கைபற்றிய சட்ட திட்டங்கள் ஓரளவுக்கு விளங்கின.

"நண்பனே. என்ன யோசனை?" என்றான் ஆங்கிலத்தில்.

இளங்கோவின் கேள்வியால் ரஞ்சிற்சிங்கின் சிந்தனை சிறிது கலைந்தது. "உனக்கென்ன நீ கொடுத்து வைத்தவன். நாளைக்கே வெளியில் போய் விடுவாய்? என் நிலையைப் பார்த்தாயா?. இவர்களுடைய சட்ட நுணுக் கங்களை அறியாமல் புறப்பட்டதால் வந்தவினையிது."


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உன்னுடைய வழக்கறிஞரின் ஆலோசனையென்னவாம்?"

"உனக்குத் தெரிந்ததுதானே. அகதிக்கோரிக்கை பற்றிய வழக்கு முடியும் மட்டும் உள்ளுக்குள்தான் இருக்க வேண்டுமாம். எல்லாம் நாட்டுக்குள் அடியெடுத்த வைக்கமுதல் பிடிபட்டதால் வந்த நிலைதான்."

"உன்னுடைய திட்டமென்ன?"

"யார் உள்ளுக்குள் இருந்து தொலைப்பது. என்னை அனுப்புவதென்றாலும் ஜேர்மனிக்குத்தான் அனுப்புவார்கள். அங்கு திரும்பிப் போவதுதான் சரியான ஒரே வழி. தேவையில்லாமல் பணத்தை முகவர் பேச்சைக்கேட்டுக் கொட்டித் தொலைத்ததுதான் கண்ட பலன். எல்லாம் ஆசையால் வந்த வினை"

"உனக்காவது பரவாயில்லை. ஜேர்மனிக்குத் திரும்பிப் போகலாம். அங்கு உனக்கு உரிய குடியுரிமைப் பத்திரங்களாவது இருக்கு. இங்கிருப்பவர்களின் நிலையைப் பார்த்தாயா? இவர்களின் வழக்குகள் முடியும் மட்டும் உள்ளுக்குள் இருந்தே உலைய வேண்டியதுதான். அதற்குப் பின்னும் அநேகமானவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்படும். நாடு கடத்தப்படுவார்கள். அதுவரையில் கற்பனைகளுடன், நம்பிக்கைகளுடனும், எதிர்காலக் கனவுகளுடனும் இருக்க வேண்டியது தான். இவர்களது சட்டதிட்டங்களை நினைத்தால் ஒரு சமயம் சிரிப்பாகவிருக்கிறது"

"சட்டவிரோதமாக எப்படியாவது நாட்டுக்குள் நுழைந்து விட்டால், பிணையிலாவது வெளியில் வரலாம். ஆனால் நாட்டுக்குள் நுழையமுதல் நீரில் வைத்து அல்லது விமான நிலையங்களில் பிடிபட்டு விட்டாலோ அதோ கதிதான். அவர்கள் சட்ட விரோதமாகக் கூட நாட்டினுள் அனுமதிக்கப்படாதவர்கள். அவர்களுக்கு வழக்குகள் முடியும் வரையில் பிணை கூட இல்லை. இந்த விசயம் முன்பே தெரிந்திருந் தால் உல்லாசப் பிரயாணியாகவாவது உள்ளுக்குள் நுழைந்த பின் அகதிக் கோரிக்கைக்கு விண்ணப்பித்திருக்கலாமே. அந்த முகவன் மட்டும் இந்நேரம் என் முன்னால் நின்றால் அவன் குரல்வளையினைப் பிடித்து நெரித்து [illegible]வேன். அவ்வளவு ஆத்திரம் ஆத்திரமாய் வருகிறது."

"அமெரிக்கரின் சட்டதிட்டங்கள் தெரியாத புது முகவன் போலும். மற்ற நாடுகளைப் போல் அகதிக் கோரிக்கை கோரியதும் தவறாக நினைத்து விட்டான் போலும். கனடாவில் அகதி அந்தஸ்த கோரியதுமே வெளியில் விட்டு விடுவார்களாம். அவ்விதம் எண்ணி விட்டான் போலும். நாங்களும் திட்டமிட்டபடியே கனடாவுக்குப் போயிருந்தால் இவ்வளவு பிரச்சினைகளுக்குள் அகப்பட்டிருக்கத் தேவையில்லை. என்னவோ தலையோடு வந்தது தலைப்பாகையோடு போனது மாதிரி தப்பிவிட்டோம். இல்லாவிட்டால் திரும்பிப் போவதற்கும் வழியில்லை. உள்ளுக்குள்ளேயே கிடந்திருக்க வேண்டியதுதான்"

ரஞ்சித்சிங் சிறிது சிந்தனை வயப்பட்டான். பின் கூறினான்: "நீ சொல்வது உண்மைதான். ஒரு விதத்தில் என் நிலை பரவாயில்லை. இவர்களின் நிலையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால்தான் விளங்குகிறது"

"ஒரு திரைப்படப்பாடல்தான் இந்தச் சமயத்தில் நினைவுக்கு வருகிறது. தமிழ்த் திரைப்படக்கவிஞனின் திரையிசைப்பாடலது. ஒரு காலத்தில் தமிழ்த் திரையுலகில் கொடிகட்டிப் பறந்தவன். தமிழில் நல்ல புலமை வாய்ந்தவன். அந்தப் புலமையே அவனுக்குத் திரையிசைப்பாடல்கள் எழுதுவதற்கு நன்கு கைகொடுத்தது. வாழ்க்கையைப் பற்றியதொரு நல்லதொரு பாடல். "வாழ்க்கையென்றால் ஆயிரம் இருக்கும். வாசல் தோறும் வேதனையிருக்கும். வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை... உனக்கும் கீழே உள்ளவர் கோடி. நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு... மயக்கமா தயக்கமா. மனதிலே குழப்பமா?.. இவ்விதம் செல்லுமொரு பாடலது. வந்த துன்பம் எதுவென்றாலும் வாடி நின்றால் ஓடுவதில்லை."

"நல்ல பாடல்தான். வாழ்க்கையில் நன்கு அடிபட்ட ஆத்மா போலும். நம்மைப் போல. அந்த அனுபவமே இத்தகைய நல்ல பாடல்களின் மூலாதாரம்." என்று கூறிவிட்டு மெதுவாகச் சிரித்தான் ரஞ்சித்சிங். பின் தொடர்ந்தான்: "அது சரி உன் கதையென்ன? ஜேர்மனியில் பல சிறிலங்கன் நண்பர்கள் எனக்கிருக்கிறார்கள். அவர்கள் கதை கதையாகக் கூறுவார்கள்"

"அதை மீண்டும் ஞாபகமூட்டாதே. இதற்கு முன்பு நான் சிறுவனாகயிருந்தபோது இது போன்ற கலவரங்களிலிருந்து தப்பி வந்தவர்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள் பற்றிய கதைகளைக் கேட்டிருக்கிறேன். 1977இல் ஒரு கலவரம் நடந்தது. முதன்முறையாக தனிநாட்டுக் கோரிக்கையை வைத்து பிரதான தமிழர் கூட்டணிக் கட்சி தேர்தலில் வென்றிருந்தது. ஆனால் இம்முறை நடந்த கலவரம் மிகப்பெரியது. அரசாங்கத்தின் ஆதரவுடன் திட்டமிட்டு நடாத்தப்பட்ட கலவரம். ஈழத்தமிழர்களின் போராட்டத்தைப் பற்றிக் கூற வேண்டுமானால் அது மிகப்பெரியதொரு நீண்ட கதை"

"சின்னதொரு இருப்பு. சிறியதொரு கோள். எவ்வளவு அழகிய கோளிது. இநத நீலவானும், இரவும், மதியும், சுடரும்தான் எவ்வளவு அழகு."

ரஞ்சித்சிங்கின் கூற்று இளங்கோவுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. "என்ன கவிஞனைப் போல் பேசுகிறாய்?" என்றான்.

அதற்கவன் கூறினான்: "எழுத்தும், வாசிப்பும் என் இரு கண்கள்; என்னிரு நுரையீரல்கள்; என்னிரு இருதய அறைகள். அவையில்லாமல் என்னால் ஒருபோதுமே இருக்க முடியாது. நீ கூறுவது சரிதான். நானொரு எழுத்தாளன் தான். எப்பொழுதுமே என்னை இந்தப் பிரபஞ்சம் இதன் படைப்பின் நேர்த்தி, பிரமிக்க வைத்து விடுகின்றன. விரிந்து கிடக்கும் இந்த இரவு வானத்தைப் போல் என்னை ஆகர்சித்ததென்று எதுவுமேயில்லை. எப்பொழுதுமே என் சிந்தையைத் தூண்டி விடும் வல்லமைமிக்கது இந்த இரவு வான். இந்தப் போர், இரத்தக் களரிகளெல்லாம் அழகான இதன் சூழலை எவ்விதம் சிதைத்து விடுகின்றன. இந்த இருப்பை, இதன் நேர்த்தியை இரசித்தபடி வாழ்நாளெல்லாம் இதனைப் புரிவதற்கு, அறிவதற்கு முயன்று கொண்டிருந்தால் அதுவே இனியதுதான்."

இளங்கோவுக்கு அந்தக் கணம் சிரிப்பையும், ஒரு வித வியப்புடன் கூடிய வேடிக்கை உணர்வினையும் தந்தது. பூமிப்பந்தின் ஒரு கோடியில் அவதரித்து, அதன் இன்னொரு கோடியிலுள்ள சிறையொன்றில், ஊரெல்லாம் தூங்கும் நடுயாமப் பொழுதொன்றில், இன்னுமொரு கோடியில் அவதரித்து, இன்னுமொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோடியில் சஞ்சரித்த ஜீவனொன்றுடன் எவ்விதமாக உரையாடல் தொடருகிறது!

"என்ன சிரிக்கிறாய் நண்பனே! என்னைப் பார்த்தால் பைத்தியக்காரனைப் போலிருக்கிறதா? இப்படித்தான் பைத்தியக்காரர்களாக அன்றைய சமுதாயம் எண்ணிய பலர் பின்னர் சரித்திரத்தையே மாற்றியமைத்திருக்கின்றார்கள். இதுதான் வாழ்க்கை."

"நீ என்னைப் போலவே சிந்திக்கிறாய். இந்தக் கணத்தில் நான் தூக்கத்திலிருந்தும் எழும்பாவிட்டால், நீயும் இவ்விதமாகக் கொட்டக் கொட்ட விழிப்புட னிருக்காதிருந்தால் இவ்விதமானதொரு அரியதொரு உரையாடலுக்கான சந்தர்ப்பத்தை இழந்திருப்போம். ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னால் எம்மினத் துக் கவியொருவன் பாடி வைத்துச் சென்றுள்ளான்: "யாதும் ஊரே! யாவரும் கேளிர்" என்று. இந்தச் சிறிய தொரு கோள் இதில்வாழும் மனிதர் அனைவருக்கும் உரியதாக இருக்க வேண்டும்."

"அப்படியே இருந்திருந்தால் நானும் அல்லது நீயும் அல்லது இங்கு தூங்கிக் கிடக்கின்றார்களே இவர் கள் அனைவருக்கும் இந்த நிலை ஏற்பட்டிருக்கா தில்லையா?" என்று விட்டு இலேசாகச் சிரித்தான் ரஞ்சித்சிங். தொடர்ந்தும் கூறினான்: "உன் நாட்டுக் கவிக்குத் தெரிந்தது மட்டும் இந்த அமெரிக்கர்களுக்குத் தெரிந்திருந்தால்..."

அதற்கு இளங்கோ இவ்விதம் பதிலிறுத்தான்: "யார் சொன்னது அமெரிக்கர்களுக்குத் தெரியவில்லை யென்று. இவர்களைப் பொறுத்தவரையில் யாதும் ஊரே யாவரும் கேளிர்தான். இவர்கள் நுழையாத இடமென்று இந்தக் கோளின் எந்த மூலையிலாவதிருக்கிறதா? அவ்விதம் நுழைவதற்குத்தான் இவர்களுக்கு ஏதாவது பிரச்சினையேதாவதுண்டா? பிரச்சினையெல்லாம் நம்மைப் போன்ற மூன்றாம் உலகத்து வாசிகளுக்குத் தான்."

இதற்கிடையில் இவ்விதமிருவரும் உரையாடிக் கொண்டிருப்பதைக் கண்ட அதுவரையில் தூங்கி வழிந்து கொண்டிருந்த கறுப்பினத்துச் சிறையதிகாரி "எல்லோரும் தூங்குமிந்த நேரத்திலென்ன கதை வேண்டிக் கிடக்கிறது. நித்திரை வராவிட்டால் பொழுது போக்குக் கூடத்திற்குச் சென்று பேசுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றான்.

"நண்பனே! கவலையை விடு. நாளை நல்லதாக விடியட்டும். நல்லிரவு உனக்கு உரித்தாகட்டும்" என்று மீண்டும் படுக்கையில் சாய்ந்தான் இளங்கோ.

ரஞ்சித்சிங்கும் பதிலுக்கு "உனக்கும் நல்லிரவு உரித்தாகட்டும்" என்று கூறிவிட்டுத் தன் படுக்கையில் சாய்ந்தான்.

எவ்வளவு முயன்றும் இளங்கோவுக்குத் தூக்கம் வரவே மாட்டேனென்றது. யன்னலினூடு விரிந்திருந்த இரவு வானினைச் சிறிது நேரம் நோக்கினான். ஆங்காங்கே சிரித்துக் கொண்டிருந்த சுடர்க் கன்னிகளை நோக்கினான். சிறிது நேரத்தின் முன் ரஞ்சித்சிங் கூறிய வார்த்தைகள் காதிலொலித்தன: "எழுத்தும், வாசிப்பும் என் இரு கண்கள்; என்னிரு நுரையீரல்கள்; என்னிரு இருதய அறைகள். அவையில்லாமல் என்னால் ஒரு போதுமே இருக்க முடியாது. நீ கூறுவது சரிதான். நானொரு எழுத்தாளன்தான். எப்பொழுதுமே என்னை இந்தப் பிரபஞ்சம் இதன் படைப்பின் நேர்த்தி, பிரமிக்க வைத்து விடுகின்றன. விரிந்து கிடக்கும் இந்த இரவு வானத்தைப் போல் என்னை ஆகர்சிப்பத்தென்று எதுவுமேயில்லை. எப்பொழுதுமே என் சிந்தையைத் தூண்டி விடும் வல்லமை மிக்கது இந்த இரவு வான். இந்தப் போர், இரத்தக் களரிகளெல்லாம் அழகான இதன் சூழலை எவ்விதம் சிதைத்து விடுகின்றன. இந்த இருப்பை, இதன் நேர்த்தியை இரசித்தபடி வாழ் நாளெல்லாம் இதனைப் புரிவதற்கு, அறிவதற்கு முயன்று கொண்டிருந்தால் அதுவே இனியதுதான்." இளங்கோ வுக்கு மீண்டும் பிரமிப்பாகவேயிருந்தது. ரஞ்சித்சிங் அவனைப் போலவே சிந்திக்கின்றான். அவனைப் போலவே அவனுமொரு எழுத்தாளன். இவனுக்கும் அப்படித்தான். நூலும் எழுத்துமில்லாமல் இருக்க முடியாது. எழுதும் போது கிடைக்கும் களிப்பே களிப்புத்தான். நூல்களை வாசிக்கும் போது அவை எவ்விதம் அவனது சிந்தனையை விரிவு படுத்தித் தெளி வினைத் தருகின்றனவோ அவ்விதமே எழுதும்போதும் அவன் சிந்தனை கொடி கட்டிப் பறக்கிறது. சிந்திக்கச் சிந்திக்க ஏற்படும் தெளிவு இந்தப் பிரபஞ்சத்துப் புதிர்களை அறியும் ஆவலை மேலும் மேலும் தூண்டி விடுகின்றது. பொதுவாக இயற்கை நிகழ்வுகளெல்லாம் எழுத்தாளர்களது சிந்தனைக் குதிரைகளைப் பல்வேறு வழிகளில் தட்டி விடத்தான் செய்கின்றன.

குறிப்பேட்டினையெடுத்துப் பக்கங்களைப் புரட்டுகின்றான். முன்பு எப்பொழுதோ எழுதி வைத் திருந்த பக்கங்களைப் பார்வை மேய்கிறது:

- "சாளரத்தின் ஊடாக சகமெல்லாம் ஆழ உறங்கும் அர்த்த ராத்திரி வேளையில் வானம் நடுக்கமுற, வையமெல்லாம் கிடுகிடுக்க, மோனத்தை வெட்டி யிடிக்கும் இடியும், பொத்துக் கொண்டு பெய்யும் பெரு மாரியும், நரியின் ஊளையினையொத்தப் பெருங் காற்றும் கோலோச்சுமொரு இரவுவானில் ஒளிவிளக்கந் தாங்கிவந்த காயும் மின்னலொன்றின் கணநேரத்து இருப்பும், வான் வனிதையாக கொட்டு மிடித்தாளத்திற் கிசைய நடம் செய்யும் அதன் வனப்பும்" கவியொருவ னின் சிந்தனையினைத் தட்டியெழுப்பி விடுகின்றன. அதன் விளைவாக விளைந்தது அற்புதமானதொரு கவிதை. "இவ்வொளிமின்னல் செயல் என்னே? வாழ்வோ கண நேரம்; கணநேரம் தானுமுண்டோ? சாவும் பிறப்புமக் கணநேரத் தடங்குமன்றோ? ஜனனப் படுக்கை யிலே ஏழைமின்னல் தன்னுடைய மரணத்தைக் கண்டு துடி துடித்து மடிகின்ற சேதி புதினமன்று; அச் சேதியிலே நான் காணும் சோதி கொளுத்திச் சோபிதத்தைச் செய்துவிட்டு ஓடி மறைகிறது; வாழும் சிறு கணத்தில் தேடி ஒரு சேவை செகத்திற்குச் செய்ததுவே! சேவையதன் மூச்சு; அச்சேவையிழந்த வுடன் ஆவிபிரிந்து அகல் வானில் கலந்ததுவே! என்னே இம் மின்னல(து) எழிலே வென்றிருந்தேன். மண்ணின் மக்களுக்கு மின்னல் ஒரு சேதி சொல்லும். வாழும்சிறு கணத்தில் வைய மெலாம் ஒளிதரவே நாளும் முயற்சி செய்யும் நல்லசெயல் அதுவாகும்" எனச் சிந்தையினை யோட்டுமவன் "என்னுடைய சிந்தனையால் இச்சகம் தான் சிறிதுபயன் கண்டிடுமோ?" என்கின்றான்.

இன்னொரு கவியோ "எட்டுத் திக்கும் பறந்து திரிந்து, காற்றில் நீந்தி, கொட்டிக் கிடக்கும் வானொளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதுவுண்டு, பெட்டையோடின்பம் பேசிக் களிப்புற்று, குஞ்சு காத்து, வைகறையாகும் முன் பாடி விழிப்புறும்" சிட்டுக் குருவியின் இருப்பு கண்டு "விட்டு விடுதலையாகி நிற்போமிந்த சிட்டுக் குருவியைப் போலே" என்கின்றான்.

மற்றுமொரு கவிஞனோ "புலவன் எவனோ செத்த பின்னும் ஏதேதோ சேதிகள் சொல்ல" எழுதி வைத்த புத்தகத்தில் வரியொன்றின் புள்ளியைப் போல் கருதி பூச்சியொன்றைப் "புறங்கையால் தட்டி" விடுகின்றான். புள்ளியெனத் தென்பட்டது புள்ளியல்ல பூச்சியே என்பதை உணர்ந்ததும் "நீ இறந்து விட்டாய்! நெருக்கென்ற தென்நெஞ்சு! வாய் திறந்தாய், காணேன், வலியால் உலைவுற்றுத் "தாயே!" என அழுத சத்தமும் கேட்கவில்லை. கூறிட்ட துண்டுக் கணத்துள் கொலையுண்டு ஓர் கீறாகத் தேய்ந்து கிடந்தாய். அக்கீறுமே ஓரங்குலம் கூட ஓடி இருக்கவில்லை. காட்டெருமை காலடியிற் பட்ட தளிர்போல, நீட்டு ரயிலில் எறும்பு நெரிந்தது போல், பூட்டாநம் வீட்டிற் பொருள்போல் நீ மறைந்தாய். மீதியின்றி நின்னுடையமெய் பொய்யே ஆயிற்று. நீதியன்று நின்சா, நினையாமல் நேர்ந்ததிது. தீதை மறந்துவிட மாட்டாயோ சிற்றுயிரே!" என்று வேதனையால் புலம்புகின்றான்.

வாசிக்க வாசிக்க நெஞ்சிலொருவித இன்பம் பரவ இரண்டாவது முறையாக அன்றைய இரவு தூக்கத்தைத் தழுவினான் இளங்கோ.

(தொடரும்...)

---

# இரவே உறங்கி விடு



இரவே!
விழித்திருக்கிறாயா,
பகலவன் வரவுக்காகவா?

உனக்கும்
உறக்கம் வரவில்லையா?
உணர்வுச்சுழிப்புக்குள்
தத்தளித்துப் போகிறாயா?

உறவுகளுக்காய்
ஏக்கம் கொள்கிறாயா,
நனவிடை தோய்ந்து
நலிந்து போகிறாயா?

இரவில்
யாரோ எவரோ
செய்யும் கொடுமைகளுக்காய்
"இரவின் கொடுமை" என்று
நீ ஏன் பழி கேட்கிறாய்?

இருளினுள்
நீ இருந்தாலும்
ஒளிவிழும் இடங்களில்
நடப்பதெல்லாம்
உனக்கு வெளிச்சமாமே.

முதுமையிலும் பிணியிலும்
தூக்கம் வராமல்
கிழடுகள் உழன்றால்
நீ என் செய்வாய்?

இரவு தரும் தனிமை
எங்கணும் கிடையாது
சரவு சச்சரவின்றி
சுகித்திருக்கும் நேரம் அது.

ஆழ் மனதின் அவலங்களை
சூழ்மனிதர் சோகங்களை
ஏழ்கடல் எல்லைகளை
எண்ணி நீ ஏம்பலிக்கிறாயா?

யாருக்குத் தான்
கவலை இல்லை.
உனக்கு மட்டுமே என்று
எண்ணுதல்
சுகம் கெடுக்கும்.

உணர்வுகளை உதறிவிடு
ஏக்கத்தைத் தவிர்த்துவிடு
இரவே உறங்கிவிடு.

த.கலாமணி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ்க்கவி

# காடுலாவுகாதை 2



## காடுலாவு காதை பாகம் 2
## நாவல் தொடர்

காடுலாவு காதை பிரான்ஸிலிருந்து வெளிவந்த "நடு" சஞ்சிகையில் தொடராக வெளிவந்து ஜீவநதியின் பதிப்பில் நூலாக வெளிவந்துள்ளது. அதன் இரண்டாம் பாகம் வன்னிக்காடுகளின் போர் நடந்த தடங்களையும் அங்கே நடந்த சம்பவங்களின் நேரடி சாட்சியாகவும், எழுதப் படுகிறது. இதில் கதையொன்று ஊடாடிக்கொண்டு வருகிறது. என்றாலும். அது கதையல்ல நிஜம். சில பாத்திரங்களின் பெயர்களை மட்டும் மறைத்துமிருக் கிறேன். அது அந்த கதை மாந்தர்களின் நிகழ்கால வாழ்க்கைக்கு பாதகமாக இருக்கலாம் என்பதாலாகும். ஏன்றாலும் அதிர்ஸ்டவசமாக அவர்கள் இதை படிக்க நேர்ந்தால் அவர்களால் புரிந்து கொள்ள முடியும். சம்பவத்தில் இடம்பெறும் சிலர் நம்மிடையே என்ன, இப்போது உலகிலும் இல்லை. வெறுமனே வேட்டைக் காகவும் தேவைக்காகவும் வனங்களை அளந்த லெச்சிமி. இங்கே தனது வாழ்வாதாரங்களுக்காக நடத்தும் போராட்டம் காடுலாவும் நிகழ்வாக மாறியது. அடுக்களை யும் வீடுவாசல் முற்றமென்றும் இருந்த பெண்களின் காடுகளில் வாசம் செய்யும் அனுபவத்தை மட்டுமல்ல பெரும் ஆனந்தத்தையும் திகிலையும்கூட இது அள்ளி வழங்கும் என நம்புகிறேன். - தமிழ்க்கவி

*1*

மழை இரவிரவாக பெய்து காலையில் ஓய்ந்து போயிருந்தது. என்றாலும் வானம் முகில்களால் இறுக மூடுண்டு கிடந்தது. நேற்றிரவு படம் பார்க்க நண்பர் களுடன் புறப்பட்டுப் போன சந்துருவை காணவில்லை. அவன் மதுவின் வீட்டில் படுத்திருப்பான் போல இருந்தது. படலைக்குள் படுத்திருந்த டைகர் நாய் திடீ ரென எழுந்து உடலை முறுக்கெடுத்தது. யாரையோ பார்த்து விட்டது. ஆனால் யாரையும் காணவில்லை. பக்கத்து வீட்டிலிருந்து சந்திரா ஓடிவந்தாள். "மாமி அண்ணாவை எழுப்பி விடட்டாம் கடைக்கு போகோணுமாம்" என்றாள்.

திகைத்து திரும்பிய லெச்சிமி "என்னடி சொல்லிறாய் அவன் இஞ்ச படுக்கேல்லடி. அப்ப சந்துரு வும் அவனும் எங்க போனவங்கள்". தையக்காறம்மாவின் மருமகன் தலையிலடித்தவாறே ஓடிவந்தான். "அய்யோ இந்தப்பயலுக எல்லாத்தையும் இயக்கம் கொண்டு போவிருச்சு. எம்மவனே உங்கா ஒன்ன எப்பிடிடா அம்மா விட்டிட்டு இருக்கும்... மோசம் பண்ணிட்டாங் களே" என்று குழற ஆரம்பித்தான். அவள் இடிந்து போய் உட்கார்ந்தாள். அத்தனை பிள்ளைகளும் வழக்கமாக அவள் வீட்டில்தான் உறங்குவார்கள். அதனால் பழி அவள் மீதே விழுந்தது. "நம்பித்தான ஒங்க வூட்டில வுட்டோம் இப்பிடி பண்ணிட்டீங்களே"

இதில் யார் தலையாரி யார் சேவகன் என்பது தெரியாமலே அவர்களைத் தேடி முதல் முதலாக இயக்கங்கள் குடியிருக்கும் கொலை வலயத்துள் அதாவது வன்னியின் வனத்துக்குள் இறங்கினாள். ஒரு போதும் அந்தப்பகுதிக்குள் அவள் போனதில்லை. எனினும் அவளது பிள்ளைப்பாசம் அந்த அச்சத்தை விரட்டியது. காடுகள் அவளுக்கு புதிதல்ல மனிதர்கள் வாழும் இந்த வனாந்தரம் புதிதுதான்.

"போகாத இடந்தனிலே போக வேண்டாம் போகவிட்டுப் புறஞ்சொல்லித்திரிய வேண்டாம் நெஞ் சாரப் பொய்தன்னை சொல்ல வேண்டாம் நஞ்சுடனே ஒருநாளும் பழக வேண்டாம். நல்லிணக்கம் இல்லா ரோடு இணங்க வேண்டாம்" அவ்வையின் கொன்றை வேந்தன் வரிகள் அவளுக்குள் உருள அவளது கால்கள் ஆண்களுக்குரிய ஹீரோ மிதிவண்டியை மிதித்துக் கொண்டிருந்தன. நீண்ட காலமாக செப்பம் பண்ணி யிருக்காத மண் ஒழுங்கைகளில் முன்பின் அறிமுகமில் லாத பாதை தெரியாத ஊருக்குள் அவள் சென்று கொண்டிருந்தாள். ஏநைன் வீதியிலிருந்து முதலாவது மைல் கல்லில் திரும்பி தாண்டிக்குளம் வழியாக வீதியில் விரைந்தாள். குழுமாட்டுச்சந்தி கடந்து மரக்காரம்பளை சாஸ்திரி கூழாங்குளம் வந்தாள். சின்னஞ்சிறு கிராமம் பாடசாலை பெரிதாக இருந்தது. இந்த ஊரில் படித்தவர்கள் அதிகம் என்று கேள்விப் பட்டிருக்கிறாள். பெரிய விளையாட்டு மைதானமும் அதன் எதிரில் ஒரு சிவன் கோவிலும் இருந்தது. ஒரு சின்ன டீக்கடை இதுவரை ஏழு அல்லது எட்டு மைல் சைக்கிளோடி விட்டாள். களைப்பு நீக்கவே வேண்டும். எனவே ஒரு தேநீர் வாங்கி குடித்தபின் கடைக்காரரிடம் "இந்தப் பாதை எங்கே போகிறது" என்று கேட்டாள். அவர் அதிர்ந்து போனார். "நீங்கள் ஊருக்கு புதிசா?" என்றவர் "எங்கயிருந்து வாறீங்கள்" என்றும் கேட்டார். அவள் தனது கிராமத்தின் பெயரைச் சொன்னாள். அவர் திகைத்துப் போனார். வேண்டாம் நீங்கள் இப்பிடியே திரும்பிப் போங்கோ உங்கால போனா திரும்பி வர மாட்டியள்" என்று கெஞ்சுமாப்போல கூறினார். காரணம் இருந்தது. அவள் வாழும் பிரதேசம் புளொட் இயக்கத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. இது அவளறிந்த வரை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாடு தான். மாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயக்கங்களிடையே போட்டா போட்டி இருந்து வரு கிறது. அதிலும் சில நாட்களாக மோதல்களும் இடம் பெறுவதாக கேள்வி. அவளுக்கு இது பற்றியெல்லாம் ஆழமாகவோ நீளமாகவோ தெரியாது. பிள்ளைகள் அவற்றின் மீது ஆர்வம் கொண்டு விடுவார்கள் என்ற பயத்தில் அவர்களுடைய வீட்டில் இந்த வகையான கதை களை பேசுவதில்லை. இதனாலேயே அவர்களை அவர்கள் விருப்பப்படி படங்களைப்பார்க்க அனுமதிப்பாள். இப் போது படம்பார்க்க போனவர்கள் தான் மாயமாகி விட்டார்கள்.

கடைக்காரனின் அச்சம் அவளுக்கும் வந்தது. அவளை உளவாளி என்று கருதிவிடுவார்களோ என்ற பயம்தான். “ச்சா... அதுக்கும் ஒரு தகுதி வேண்டாமே” என மனதுக்குள் நினைத்தாலும், அவளுடைய அடி வயிற்றில் சூடாக எதுவோ பரவியது போல உணர்ந்தா லும், ச்சா இயமனை அறியாம உயிர் போகிடுமே. போய்த்தான் பார்ப்பமே என்ற என் மனதின் உறுதி அவளை நெட்டித்தள்ளியது. அதற்கப்பால் ஒரு காட்டுப் பாதையில் பெரும்பாலும் ஒற்றையடிப்பாதையே பிழக்கத்தில் இருப்பதுபோல தேய்ந்திருந்தது. “ஈச்சங் குளம்” என்று ஒரு எல்லைக்கல்லில் அம்புக்குறி இடப் பட்டு எதிர் தென்முனை கிடாச்சூரி என குறிக்கப் பட்டிருந்தது. அக்காலத்தில் மாவீரர் துயிலுமில்லங்கள் கிடையாது. அந்த பெரு மந்துகளூடாக பயணம் செய்தாலும் அங்கே மனிதர்கள் வாழ்வதற்கும் அவர்கள் வீதிகளை பயன்படுத்தியதற்கும் சான்றாக வீதி பிழக்கத்திலிருந்தது. அது மட்டுமல்ல பாதையின் கரை யோரங்களில் ஆடுமாடுகள் மேயக்கட்டப்பட்டிருந்தன.

ஓரிடத்தில் கரும்பலகை அளவினதான வெள்ளைப்பலகை தொங்கியது. அதில் கல்மடு என தலைப்பிடப்பட்டிருந்தது. உறுமல் என எழுதியிருந்தது. வேறு எதுவும் தென்படவில்லை. இது ஒரு குடியேற்றக் கிராமம் என்பதை அதன் வீடுகளின் அமைப்பு கூறியது. அங்கே சில மனிதர்களின் நடமாட்டம் தெரிந்தது. ஆனால் யாரும் அவளிடம் பேசவுமில்லை அவளும் யாரிடமும் வழி கேட்கவுமில்லை. உள்ளம் கனத்த நிலை யில் அவள் பிள்ளைகளை எப்படியாவது சம்பந்தப்பட்ட போராளிகளை கண்டு பேசி அழுது குழறி மீட்டு வர வேண்டும் என்பதிலேயே குறியாக இருந்தாள் மனம் கொதித்துக் கொண்டிருந்தது. எனினும் ஒரு சீரான வேகத்தில் அவளது மிதிவண்டி போய்க் கொண்டி ருந்தது. பள்ளங்கள் வாய்க்கால்கள் உழவுயந்திரம் ஓடிய அறுத்தோடிகள் என சில இடங்களில் இறங்கி வண்டியை உருட்டவேண்டியும் இருந்தது. கல்மடு கடந்த போது பூம்புகார் என்ற அறிவிப்புடன் ஒரு கம்பம் நின்றது. அவள் நேராகவே பயணித்தாள். அவளது மிதி வண்டி ஒரு பிரதான பழைய பஸ் போக்குவரத்து நடந்த வீதியை அடைந்தது. அவள் கீழே இறங்கினாள். எதிரே வீதியின் மறு பக்கத்தில் துப்பாக்கிகளை கழற்றி பரப்பி வைத்துக் கொண்டு நான்கு பேர் ஒரு தாழ்வாரசாரத்தில் இருந்ததை கண்டாள். நேராக அவர்களின் முன் சென்று நின்றாள்.

“ஆரம்மா என்ன வேணும்.” அவள் சற்று ஆறுத லடைந்தாள். அவனது குரலில் தேன் தடவியிருந்தது. பதட்டப்படாமல் அவள் வந்த காரணத்தை சொன்னாள். “எனக்கு உதவியில்லை அவன்தான் உழைப்பாளி (பொய்)அவனை திரும்ப தாருங்கள்.” அவன் அவளை ஆறுதலாக பார்த்தான். நிதானமாக “நாங்கள் ஆரையும் எடுக்கேல்லயே” என்றான். “நீங்கள் என்ன இயக்கம்” என்று விடாப்பிடியாக கேட்டாள்.

“நாங்கள் விடுதலைப்புலிகள்”

“அப்பிடியெண்டா அவங்கள் இஞ்சதான வந்திருப்பாங்கள்”

“இல்லையம்மா இப்ப இயக்கங்களுக்க சண்டை நடக்குது இந்த நேரம் புதிசா ஆளெடுத்தா அவங்களுக்கு பயிற்சி குடுக்க ஏலாது. நாங்கள் எடுக்கேல்ல” என்றவன் பொறுங்கோ என்று கையமர்த்திவிட்டு தனது தொலைத் தொடர்பு கருவியை எடுத்து யாரிடமோ விசாரித்தான். அந்த உரையாடல் அவளுக்கும் கேட்டது. அவர்கள் இங்கு வரவில்லை என்பதை உறுதி செய்ததால் அவள் திரும்பி செல்ல வேண்டியதாயிற்று. அவள் திரும்ப அவன்,

“எங்கயிருந்து வாறீங்க” என்றான். அவள் தனது கிராமத்தின் பெயரைச் சொன்னாள். சற்றே தன் தாடியை வருடியவன். “வந்த பாதை வேண்டாம் இப்பிடியே போங்க மன்னார் வீதி வரும் அங்கயும் எங்களப்போல ஆரும் இருப்பினம் அவயளிட்டயும் விசாரிச்சிட்டு போகலாம்” என்றான். அவள் வண்டியை தென்புறமாக திருப்பி உழக்க ஆரம்பித்தாள். ஒரு ஐம்பது யார் மிதித் திருப்பாள். எதிரே நால்வர் ஓடி வந்து கொண்டிருந்தார் கள். கொஞ்சம் பொறுங்க போகலாம் என்றார்கள். ஏன்? “ஆனைக்கிளையொன்று ரோட்டக்கடக்கிது அதுகள் கொஞ்சத் தூரம் போகட்டும் சீறல் கேட்ட பிறகு போவம்” என்றார் ஒரு முதியவர். சுமார் அரை மணிநேரம் கடந்து பெரிதான சீறல் சத்தம் ஒன்று கேட்டது. அதன்பின் அவர்கள் அச்சமில்லாமல் புறப்பட்டார்கள் அவளும் அவர்களைத் தொடர்ந்து வேகமாக தன் மிதிவண்டியை உழக்கினாள்.

இங்கும் பல கிராமங்களை கடந்தாலும் சுமார் ஐந்து மைல்களாவது கடந்த பின்பே மன்னார் வீதி வந்தது. ஆனால் அந்த இடம் பூவரசன்குளம் என்பது அவளுக்கு தெரிந்திருந்தது. இது ஈ.பீ. ஆர். எல்.எவ் பிரதேசம் என்பதும் தெரியும். ஒரு செப்படி வித்தைபோல தாண்டிக் குளத்தில் நுழைந்து பூவரசங்குளத்தில் மிதந்திருக்கிறாள்.

அவர்களிடம் தனது மகன் போக வாய்ப்பே இல்லை என்பதால் அவள் யாரையும் விசாரிக்கவில்லை. ஆனால் மறுநாளே அவர்கள் திரும்பி வீட்டுக்கு வந்து விட்டார்கள். அவர்கள் இருந்த இடமும் அதுதான். இயக்கங்களுக்கிடையே மோதல் நடந்ததால் தம்மை திருப்பி அனுப்பிவிட்டார்கள் என்று பிள்ளைகள் சொன்னாலும் அந்த வனப்பகுதியே அவர்கள் வாழ்விட மாக விரைவில் மாறியது.

சாதாரணமாக யாரும் கூறும் ஒரு வார்த்தை “எனக்கு அரசியல் பிடிக்காது நானுண்டு என்பாடுண்டு என்று இருக்கிறேன் எதற்கு வீண் வம்பு” என்பதாகும். இதைத்தான் அவளும் சொல்லிக் கொள்வாள் அரசிய லும் வேண்டாம் அவங்கட சாகவாசமும் வேண்டாம். அதேபோல இயக்கங்களின்ர கதையும் தேவையில்லை நாய் வாழ்ந்தா என்ன பூனை சிம்மாசனம் ஏறினா என்ன நாங்க பாடுபட்டாத்தான் நமக்கு சோறு. விதி வேகமாக ஒரு வலையைப்பின்னி வருகிறது என்பதை அவளால் புரிந்து கொள்ளவே முடியவில்லை... அது இந்திய ராணுவத்தின் வடிவில் வந்தது.

(தொடரும்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- 01-

## இன்னொன்றைப்பற்றி

முன்பு எழுதிய கவிதையை விடவும்
சிறப்பான இன்னொன்றை
நேற்று உடுத்த ஆடையை விடவும்
அழகான இன்னொன்றை
முதலில் வாங்கிய தொலைபேசியை விடவும்
தரமான இன்னொன்றை
சென்ற ஆண்டு பெற்ற வெற்றியை விடவும்
உயர்வான இன்னொன்றை
காலையில் கேட்ட பாடலை விடவும்
இனிமையான இன்னொன்றை
இரவு சொன்ன கதையை விடவும்
புதுமையான இன்னொன்றை
நேற்றுத்தின்ற சாப்பாட்டை விடவும்
சுவையான இன்னொன்றை
இன்னொன்றை..
இன்னொன்றை..
இன்னொன்றை..
இன்னொன்றை..
எனக்காக பரிந்துரைத்த அம்மா
தனக்கு முன்பிருந்த எதைப்பற்றியும்
மீள் பரிசீலனை செய்யவே இல்லை
இறுதிவரை..

- 02 -

## ஒளி

இரண்டு கைகளிலும்
தீபச்சிட்டிகளை ஏந்தி
அணையாமல் அவற்றையே
குனிந்து பார்த்தபடி
நகர்ந்து வரும் அஷிராவின் கண்களில்
பட்டுத் தெறிக்கிறது
தீபங்களின் ஒளித்துண்டுகள்

என்னிடம் ஒன்றைத் தந்துவிட்டு
தீபக்கோலத்தின் மத்தியில்
மறுதீபத்தை வைத்து
காற்றில் அணையாமல்
கைகளால் மூடிய
தீபத்தின் சுவாலையில்
அகன்று மேவுகிறது

அணையாத கருணை
அணையாத காதல்
அணையாத வேட்கை
அணையாத கனவு
அணையாத நேசம்



- 03-

## மழைக்கால குறிப்புகள்

நீ நான் நாம் என்ற
பொய் புலம்பலின் இடையில்
அரவமற்று நுழையும்
வேட்கையை
காமம் என்பதா?
காதல் என்பதா?..

சொல்
செயல்
பார்வை
நிகழ்த்தும் மாயத்தில்
கிளர்த்து விரியும் மனதை
அடக்கும் வித்தை
இன்னும் பிடிபடவில்லை
எனக்கும்
உனக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவருக்கும்..

மனதின் ஒரு மூலையில்
ஊறிக்கொண்டிருக்கும் காமத்தை
வர்ணக் கோப்பையில் எடுத்து
நம் முன்னால்
நீட்டுகிறது மழை..

மறைவான தெருவொன்றில்
எதையோ கொட்டிவிட்டு ஓடி மறையும்
பொதுநலவாதியை போல
என்னில் எவரோ எதையோ
கொட்டுகிறார்கள்

பதட்டத்துடன்
மனதை திறந்து பார்க்கிறேன்
நெளிந்துகொடிருக்கிறது
புழுத்துப்போன காமம்

தெருவின் ஓரம்
சிறுநீர் கழிப்பவனைக் கண்டு
மருண்டோடும் நாயை
துரத்திக்கொண்டோடும்
மனதை அடக்க
சாத்தானை வணங்குகிறேன்

என்னுள் இறங்குகிறது
ஏதோவொன்று

- 04-

## வலி

எதற்கும் புன்னகை செய்பவன்
இல்லாமல் போனான் நேற்று

ஒப்பாரி வைக்கும் போது
நானே அவன் தாய்
கொள்ளிக் குடத்தை சுற்றும்போது
நானே அவன் தகப்பன்
பந்தம் பிடிக்கும் பொது
நானே அவன் மகன்
வாய்க்கரிசி இடும்போது
நானே அவன் சோதரன்
அவனை சுமந்து சென்ற பின்தான்
நான் அவனுக்கு உண்மை தோழன் ஆனேன்

நானிட்ட தீ
கடைசியாகத்தான் எரித்தது
அவன்
புன்னகையை!
கனவை!
காதலை!

- 05 -

## மோனம்

வயிற்றிலிருந்து வடியும்
குருதியில் மொய்க்கும் எறும்புகளை
காலால் எத்தும் அடிபட்ட நுளம்பின்
குற்றுயிரோசையில்

குருதியை உறிஞ்சி முடித்து
நுளம்பின் கால்களையும்
கொடுக்கையும் கவ்வியபடியே
லாவகமாய் காவிச்செல்கின்றன
எறும்புகள்

எறும்புகள் காவிச் செல்வது
யார் உடல்?
யார் குருதி?
யார் உயிர்?
யார் மனம்?

- 06 -

## காந்தியின் தொப்பி

திடீரென்று காணாமல் போனது
காந்தியின் தொப்பி

அவர்
உரையாற்றிய மேடைகளெல்லாம்
திக்விஜயம் போன இடங்களெல்லாம்
நடைப் பயணம் போன தெருவெல்லாம்
இளைப்பாறிய வீடுகளெல்லாம்
தொப்பியைத்தேடியலைந்தார்கள் தொண்டர்கள்

மறுநாள்
தான் உச்சரித்த
அகிம்சையின் மந்திரங்களை கூவியபடி
ஊர்வலம் போகின்றவர்களை பார்த்துச்சிரிக்கிறார்
தெருவோரமாக நிற்கும் காந்தி

கால்களுக்குள் மிரிபட்ட
காந்தியின் தொப்பியை
மறுநாள் காலையில்
காவிக்கொண்டு போகும்
மாநகரசபையின் குப்பை வண்டிக்கு
மூக்கைப் பொத்தியபடி
கையசைக்கும் காந்திக்கு எனக்கும்
அப்படியே ஒரே முகம்!

சிவசேகரனின்
கவிதைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

த. கலாமணி

# கே.டானியலின் தண்ணீர் நாவல் வெளியீடு






"தண்ணீர்", டானியலின் நாவல்களுள் ஒன்று வடமராட்சியிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைக் கருப்பொருளாகக் கொண்டு எழுதப் பட்டது. தண்ணீர் நாவல் எழுதப்பட்டுக்கொண்டிருந்த சமயம் டானியல் நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் ஒரு நீரிழிவு நோயாளி. நீரிழிவின் தாக்கத்தினால் அவருடைய கண்கள் பாதிக்கப்பட்டிருந்தன. அதே வேளை, முழங்காலுக்குக்கீழேயும் அவருடைய கால்கள் அவ்வப்போது விறைத்துக்போய்விடும்.

நீரிழிவு நோயினால் தனது உடல்நிலை மோசமடைந்து செல்வதை அவர் உணர்ந்திருந்தார். டானியலின் நோய் பற்றி அறிந்திருந்த அவரின் தமிழக நண்பர்கள் சிகிச்சைக்காக அவரைத் தமிழகம் வருமாறு அழைத்திருந்தனர். நீரிழிவு நோயினால் தமது கண் பார்வை மாத்திரமன்றி, தமது சிறுநீரகங்களும் பழுதடைந்திருந்தன என்பது அவர் அறிந்த ஒன்றுதான். ஆனாலும் தமிழகம் செல்லும் முன்னர் "தண்ணீர்" நாவலை எழுதி முடித்துவிடவேண்டும் என்ற முனைப்பு அவரை உந்தித் தள்ளிக் கொண்டிருந்தது.

நான் அக்காலத்தில் டானியல் அவர்களுடன் நல்ல தொடர்புகளைப் பேணிவந்திருந்தேன். அவரது "ஸ்ரார் கராஜ்" இல் போடப்பட்டிருந்த சிறுவாங்கிலில் அமர்ந்து கொண்டு அவர் சொல்வதைக் கேட்பது எனக்கு மிகவும் விருப்பமான ஒன்றாக இருந்தது. "அநுபவமே கல்வி" என்று நான் ஏற்கெனவே படித்துத் தெரிந்திருந்தேன். டானியல் கூறிய கதைகள் எல்லாம் அவருடைய அனுபவங்களே என்ற வகையில் அவர் மீது மதிப்பும் மரியாதையும் கொண்டிருந்தேன்.

டானியலின் நாவல்கள் சகலவற்றையும் நான் வாசித்திருந்ததனால், அந்நாவல்களில் வரும் சம்பவங்கள் பற்றிய தமது அனுபவங்களை அவர் கூறும்போது அவரை வியந்து பார்த்து கவனமாகச் செவிமடுத்து வந்தேன். ஒரு சமயம் டானியலின் கராஜிற்கு வந்த ஒருவரை எனக்குக் காட்டி இவர் தான் என்னுடைய அடிமைகள் நாவலில் வரும் சாதிமான் ஒருவரின் பேரன் என்று குறிப்பிட்டார். அப்போது, கராஜிற்கு வந்த அந்த இளைஞர் அதனை ஆமோதித்து சிரித்துக் கொண்டிருந் தார். இப்படியாக எத்தனையோ கதைகள். டானியல் துணிச்சலானவர், பெரும் விமர்சகர்களைக் கூட விமர்ச்சிக்கக் கூடிய நெஞ்சுரம் படைத்தவர்.

டானியல் என்மீது நிறைந்த அன்பு கொண்டிருந்தவர். அக்காலத்தில் நான் எழுதியிருந்த சில சிறுகதைகளைப் படித்துவிட்டு தனது கருத்துகளைச் சொன்னவர். தாயகம் சஞ்சிகையில் 1974இல் வெளிவந்த "காலத்தின் கோலம்" என்ற என் சிறுகதையைப் படித்துவிட்டு, என்னுடைய தடத்தில் நின்று, நீங்கள் ஆசிரியர் என்பதனால், சாதி பற்றிய உண்மையொன்றை உங்கள் பாஷையில் சொல்லியிருக்கிறீர்கள் என்று சிலாகித்தவர். "உங்களின் எழுத்து நடையைப் பார்க்கும் போது உங்களுக்கு நாவல் எழுதவரும் என்று தோன்றுகிறது. குறுநாவல் ஒன்று எழுதிப்பாருங்களேன் தம்பி" என்று என்னை உற்சாகப்படுத்தியவர்.

பஞ்சமர் நாவலின் பின்பு வெளிவந்த அவருடைய நாவல்கள் சிலவற்றின் வெளியீட்டு நிகழ்வுகளிலே நான் உரையாற்றியிருக்கிறேன். அந்நாவல்கள் குறித்து என்னுடைய விமர்சனங்களை எழுதிவந்திருக்கிறேன். ஒரு தோழமை உணர்வுடனும் சகோதர உறவுடனும் அவருடன் நான் பழகி வந்திருக்கிறேன். டானியல் என்னை, கனிவாக, "தம்பி" என்றே அழைப்பார். அவருடைய வீட்டுக்கு நான் மதியவேளைகளில் சென்றிருந்த நாட்களில், "இஞ்சை, தம்பி வந்திருக்கிறானப்பா. ஆரதக்கறி ஏதும் இருந்தால் சாப்பாடு எடுத்துவா அப்பா" என்று மனைவிக்குச் சொல்லி என்னை உபசரித்தமையை இன்றும் நான் நினைத்துப் பார்க்கிறேன்.

டானியல் என்னுடன் உரையாடுகின்றபோது, தான் இன்னும் எழுத இருக்கின்ற நாவல்கள் பற்றியும் குறிப்பிடுவார். 1982 இலிருந்து நான் புனிதபத்திரிசியார் கல்லூரியில் ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தேன். அக்காலப் பகுதியிலே தான் "கானல்" என்ற நாவலை எழுதுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை அவர் மேற்கொண்டிருந்தார். எப்போது ரயில் முதன் முதலில் யாழ்ப்பாணத்திற்கு வந்தது என்பதை அறிவதற்கு அவர் முயற்சித்துக் கொண்டிருந்தார். அப்போது, நான் புனித பத்திரிசியார் கல்லூரியில் இருந்ததனால், கானல் நாவலுக்குத் தேவையான சில தகவல்களை நூலகத்தில் இருக்கக்கூடும் என்று நினைத்து "கானல்" நாவலின் கதைப்பின்னணியை விபரித்து, அதன் அடிப்படையில் சில தகவல்களைத் தேடித்தருமாறு எனக்கு ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார். டானியல் இறந்த பின்பு, "டானியலின் கடிதங்களை ஒரு நூலாக வெளியிட எண்ணியுள்ளோம்" என்று கலாநிதி மனோன்மணி சன்முகதாஸ் அவர்கள் கூறியிருந்தபோது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டானியல் எனக்கு எழுதிய அக்கடிதத்தை அவர்களிடம் சமர்ப்பித்திருந்தேன்.

புனித பத்திரிசியார் கல்லூரியில் நான் ஆசிரியராகிய பின்பு, கோவில் வீதியிலுள்ள அவரின் வீட்டுக்கே சென்று அவரைச் சந்தித்து உரையாடி வருவேன். டானியலுடைய நாவல்களை அவ்வேளையில் தட்டச்சுச் செய்து வந்தவர் நண்பர் பவானந்தன் ஆவார். டானியல் மீதும் அவரின் அரசியற் கோட்பாட்டின் மீதும் மிகுந்த பற்றுள்ளவராக பவானந்தன் இருந்தார். அப்போது, அவர்களுக்கிடையில் டானியலுடைய கையெழுத்துப் பிரதிகளை பவானந்தனுக்கு எடுத்துச் செல்லும் ஒருவராக நான் இருந்தேன். தட்டச்சுச் செய்த நாவல்களை பவானந்தன் என்னிடமே தந்துவிடுவார். இதனால் டானியல் நாவல்கள் சிலவற்றை நான் தட்டச்சுப் பிரதியிலேயே படித்து முடித்துவிடுவேன்.

*1985* இல், கரவெட்டிப் பிரதேச மக்களின் குடிநீர்ப்பிரச்சினையைக் கருப்பொருளாக வைத்து "தண்ணீர்" என்ற பெயரில் நாவல் ஒன்றை எழுத வேண்டும் என்று என்னிடம் சொல்லியிருந்தார். "தண்ணீர்" நாவலில் வரும் சித்தமணியம் பற்றி உரையாடிக் கொண்டிருந்த போது, தேவரையாளிச் சைவ வித்தியாசாலையின் ஸ்தாபகர் சூரன் அவர்கள் பற்றி டானியலுக்குச் சொன்னேன். சித்தமணியத்துக்கும் சூரனுக்குமிடையே இருந்த உறவுதான் தேவரையாளிச் சைவ வித்தியாசாலையை நிறுவதற்குச் சாதகமாக இருந்தது என நான் குறிப்பிட்டபோது. சூரனின் வரலாற்றைக் கூறுமாறு என்னைக் கேட்டார். நான் ஏற்கெனவே சூரன் தன் கைப்பட எழுதியிருந்த தன் வரலாற்றை வாசித்திருந்தேன். அதனால் அந்த வர லாற்றைச் சொல்வதில் சிரமமேதும் இருக்கவில்லை. "சூரன் எப்போதும் கழுத்தைச் சுற்றி ஒரு சிறுதண்டை கட்டியிருப்பார் அவருடைய படத்தை தேவரையாளிப் பள்ளிக்கூடத்தில் வைத்திருக்கிறார்கள். நீங்கள் தெணி யான் மாஸ்ரருடன் சென்று அதைப் பார்க்கலாம்" என்று சொன்னேன். டானியல் அப்படத்தை, பாடசாலைக்குச் சென்று பார்த்திருந்தார். "தண்ணீர்" நாவலில் சூரன் பற்றி எழுதிச் செல்லும் போது, சூரன் கழுத்தில் அணிந்திருந்த துணியை "நலமுண்டுத் துண்டு" எனக்குறிப்பிட்டிருந்தார். எமது கிராமிய வழக்கிலுள்ள சொல்லொன்றை டானி யலின் தண்ணீர் நாவல் மூலமே அறிந்து கொண்டேன்.

தண்ணீர் நாவலை எழுதிக் கொண்டிருந்த போது, நோய் காரணமாக அவரால் தொடர்ந்து எழுத முடியாமற் போய்விட்டது. கண்கள் ஒத்துழைக்க மறுத்துவிட்டன. மகள் தாரகாவை வைத்துக் கொண்டு, தான் சொல்ல அவளைக் கொண்டு எழுதிவிடலாம் என்று முயற்சி செய்து பார்த்தார். ஆனால் தாரகா அப்போது விபரம் புரியாத சிறு பெண்ணாக இருந்தாள். அந்த முயற்சியும் கை கூடவில்லை என்றதும் தண்ணீர் நாவலை எழுதி முடிக்க முடியுமா என்ற அச்சம் வந்து விட்டது. தண்ணீர் நாவல் எப்படியும் எழுதி முடிக்கப் படவேண்டும் என்பதில் அவர் உறுதியாக இருந்தார். தெணியானை அழைத்து தன் வீட்டில் இரண்டு நாட்கள் தங்கியிருக்கச் செய்து தான் எழுதி யிருந்த அத்தியாயங் களுக்குப் பின்னால் கதை எப்படி அமைய வேண்டும் என்ற விபரத்தைக் கூறி, தெணியானைத் தொடர்ந்து எழுதுமாறு கேட்டிருந்தார். இதற்குப் பின்பு இரண்டு நாட்கள் கழித்து டானியல் வீட்டுக்குச் சென்ற போது, "என்னால் முடியவில்லை, தம்பி. தெணியான் மாஸ்ரரிடம் கொடுத்து விட்டிருக்கிறேன்" என்று சொன்னார்.

இதைக் கேட்டதும் எனக்கு வருத்தமாகப் போய் விட்டது. "டானியலின் நாவலை தெணியான் எழுது வதா? அது எப்படிச் சாத்தியமாகும்?" என்று என்னையே கேட்டுக் கொண்டு, டானியலிடம் இந்நாவலை நீங்கள் தான் எழுதிமுடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். தெணியானும் ஆளுமையுள்ள எழுத்தாளர் தான். ஆனால் டானியலின் எழுத்துப்பாணியும் தெணியானின் எழுத்துப் பாணியும் வேறு வேறு. என்னுடைய கோரிக்கையில் டானியல் உற்சாகமடைந்தார். இருநூறு "வாற்" மின்குமிழைப் பொருத்தி அந்த வெளிச்சத்தில் எழுதி முடித்தார். நாவலை எழுதி முடித்ததில் அவருக்கு மிகுந்த மகிழ்ச்சி. தமிழகம் செல்லு முன்னர் முன்னுரையையும் எழுதித் தந்தார். நான் அதனை தெணியானிடம் சேர்த்தேன்.

டானியல் இறந்து ஓரிரு வருடங்களின் பின்னர், ஒருநாளில், தெணியான், க.தங்கவடிவேல் மாஸ்ரர், சி.வன்னியகுலம் ஆகியோர் ஒரு வீட்டில் சந்தித்து, டானியலின் தண்ணீர் நாவலை வெளியிட வேண்டும் என்று தீர்மானித்து, தெணியான் அவர் வசமுள்ள டானியலின் கையெழுத்துப் பிரதியைத் தெணியான் திருத்த வேண்டும் என்றும் கதைத்துக் கொண்டார்கள். இதனை நான் அறியவந்தபோது, என்னால் பொறுக்க முடியவில்லை. நான் ஏற்கெனவே அத்தியாயம் அத்தி யாயமாக அதைப் படித்திருந்தேன். அதில் திருத்தும் படி யாக எதுவும் இருக்கவில்லை. டானியலின் மகன் வசந்தனைச் சந்தித்தபோது இச்செய்தியைச் சொன்னேன். அப்போது, பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் அவர்களும் அந்நாவலை தாம் வெளியிடுவதாக முன் வந்தார்கள்.

தெணியானிடமிருந்து கையெழுத்துப் பிரதியை வசந்தன் பெற்றுத்தர, அச்சுவேலைகள் ஆரம்பமாயின. ஒவ்வோர் அத்தியாயத்தினதும் முதற்படியை (1st Proof) பேராசிரியர் சண்முதாஸ் சேர் அவர்களும் இரண்டாம் படியை நானும் Machine proof ஐ கலாநிதி மனோன்மணி அவர்களும் செவ்வை பார்த்து முடித்தோம். பின்பு அந்நாவலை பல்கலைக்கழகத்தில் வெளியீடு செய்த போது, முரசொலி திருச்செல்வம் என்னிடம் இரண்டு விளம்பரங்கள் எடுத்துத்தந்தால் தானும் இரண்டு விளம்பரங்களைப் பெற்று முரசொலியில் அனுபந்த மாகப் போடலாம் என்று சொல்லி, அதனைச் செயற்படுத்தினார். அவ்வெளியீடு குறித்த பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களின் சிறப்புக் கட்டுரை அந்த அனுபந்தத்தில் இடம் பெற்றிருந்தது. சிறப்பான ஒரு வெளியீட்டு விழாவாக அது அமைந்திருந்தது.

ஆனால், அதன் பின்பு நடந்தவை தான் கேலிக் குரியனவாக இருந்தன. டானியலின் "தண்ணீர்" நாவலின் இறுதி வடிவம் தெணியான் அவர்களின் திருத்தத்தின் பின்பானது என்று, உண்மை தெரியாத சிலர் கூட்டங் களில் உரையாற்றிக் கொண்டிருந்தனர். தெணியானும் மறுப்புச் சொல்லாமல் இருந்தார். ஆனால், டானியலின் கையெழுத்துப் பிரதியில் எந்தத் திருத்தமும் செய்யப்பட வில்லை என்பது தான் உண்மை. இதனைக் கூறுவதற்கு அக்கூட்டங்களில் எனக்குச் சந்தர்ப்பம் கிடைக்க வில்லை. சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன். அது இப்போது தான் கைகூடியிருக்கிறது.

**(சொல்ல வருவேன்...)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோகிலா மகேந்திரன்

# 1 முடிவைத் தொடுவாய் முயன்று

"சரியா தீர்மானம் எடுக்கக் கூடியதாய் இருத்தலை விடக் கடின மானது வேறு ஒன்றுமில்லை. அதனால் அதைவிடப் பெறுமதி யானதும், விலைமதிக்க முடியாதது மான விடயமும் ஏதுமில்லை" என்று கூறினான் நெப்போலியன் பொனபாட்.

உயிரினங்கள் எல்லாமே நாள்தோறும் பற்பல தீர்மானங் களை எடுக்கின்றன. கீழ்நிலை அங்கிகளில் அவை வெறுமனே அடிப்படைத் தேவைகளால் நிர்ண யிக்கப்படுகின்ற மரபுந்தலாக இருக்கலாம். கூர்ப்பிலே எமக்கு மிக நெருக்கமாகக் காணப்படும் முலை யூட்டிகள் முடிவுகளை எடுப்பதற்குத் தேவையான மூன்று முக்கிய திறன்களாகிய புலன் அங்கங்கள் மூலம் தெரிந்து கொள்ளல், கவனம் செலுத்துதல், ஞாபகம் வைத்திருத் தல் ஆகியவற்றைக் கொண்டிருக் கின்றன. முடிவுகளை எடுப்பதிலே ஞாபகம் முக்கிய கூறு எனக் கொண்டால் உயர் நிலை அங்கிகள் வேறு உயிரிகளையும், உணவு காணப்படும் இடங்கள், நீர் காணப் படும் பரப்புகள் ஆகியவற்றையும் கட்டாயமாக நினைவில் வைத்திருக் கின்றன. நீர், உணவு, அன்பு, பாது காப்பு ஆகிய முக்கிய அடிப்படைத் தேவைகள் பூர்த்தியாக்கப்பட்டு அங்கி உயிர் வாழ்தல் என்ற இலக்கு அடையப்படுவதிலே இந்த ஞாபகம் தொடர்புபடுவதைப் புரிந்து கொள்ளலாம். விலங்குகளுக் குள்ளே மிக நீண்ட கால ஞாபகம் கொண்ட உயிரியாக "டொல்பின்" காணப்படுகிறது.

கடுமையான தீர்மானங்களை எடுக்க நிர்ப்பந்திக்கப்படுகிறபோது பல்வேறு தெரிவுகளின் இடையில் காணப்படும் சாதக, பாதக அம்சங்களைச் சீர்தூக்கிப் பார்த்துப் பொருத்தமான நடத்தையைத் தொடருதல் விலங்கு களிலேயே காணப்படும் இயல்புதான். அவற்றின் தனிப்பட்ட விருப்பங்களும், உந்தல்களும் கூட அந்த முடிவுகளிலே செல்வாக்குச் செலுத்தும் என்பதும் உண்மைதான். தனக்கொரு பாதை, தனித்துவப் பாதை, அதற்கொரு பயணம்!

மனிதர்களிலே முக்கியமான முற்றாக்குதல்கள் நடைபெறும் பொறிமுறை என்பது, தொடர் சிந்தனைகளின் எல்லையாக அமையும். அது ஒரு மூளைத்தீர்ப்பு, பூர்த்தியாதல் நிலை, அல்லது உறுதி எடுத்தல் ஆகலாம். இங்கே மனமும் மூளையும் முக்கிய பங்காற்றும்.

கிராமங்களிலே திருமணம் பேசி, ஓரளவு சரிவரும் நிலையை, "முற்றாக்கியாச்சு" என்று கூறுவார்கள். இன்னும் திருமணப்பதிலோ, திருமணமோ நடைபெறவில்லை. ஆயினும் அந்தத் திருமணத்துடன் தொடர்புடைய முக்கிய மனிதர்களின் மனங்கள் ஒரு தீர்மானத்துக்கு வந்துவிட்டன என்பது தான் அதன் பொருள்.

வினைத்திறனும், விளைதிறனும் கொண்ட தீர்மானங்களை எடுத்தல் என்பது வெற்றிகரமான வாழ்க்கையின் முக்கிய கூறு என்பதை யாரும் மறுக்க மாட்டார்கள்.

அறிகை உளவியலில் இதுஎளிமையான விடயங்கள் முதல், மிகமிகச் சிக்கலான விடயங்கள் வரை, இரண்டு அல்லது பல தெரிவுகளில் ஒன்றைத் தேர்ந்தெடுத்தல் எனும் செயலொழுங்கு என வரைவிலக்கணப்படுத்தப்படும்.

எங்களுடைய மிகப் பழம் பெரும் காப்பியங்களிலே ஒன்றான மகாபாரதத்தில், மிகப் பெரியதோர் மனவடுவுக்குரிய நெருக்கீட்டைச்சந்தித்த வேளையிலே, பாஞ்சாலியின் உறுதி எடுத்தலை,

"பாவி துச்சாதனன் செந்நீர், அந்தப்
பாழ் தூரியோதனன் ஆக்கை யிரத்தம்
மேவியிரண்டும் கலந்து குழல்
மீதினிற் பூசி நறு நெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன் யான் – இது
செய்யு முன்னே முடியே னென்றுரைத்தாள்"

என்று பாடுவான் பாரதி. அது அவள் எடுத்த சபதம்! அந்தப் பாடற் தொகுதிக்குப் "பாஞ்சாலி சபதம்" என்றே தலைப்பிட்டான்.

அதே காவியத்தில் மற்றோர் இடம். பாரத யுத்தம் நடைபெறப் போகிறது என முடிவாகிவிட்டது. குந்தி கர்ணனைக் காணச் செல்கிறாள். தானே அவனது தாய் என்பதை நிரூபிக்கிறாள். மிக மிக உணர்ச்சி வசமான ஒரு நேரத்தில், கர்ணனைப் பாண்டவர்களோடு சேரு மாறும், யுத்தத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெற்றி ஏற்பட்ட பின்னர், தனது மூத்த புதல்வனாகிய அவன் அரசாளப் பாண்டவர்கள் அவனுக்கீழ் இருந்து பணி செய்வார்கள் என்றும் கேட்கிறாள். அப்போது மிகப் பெரு வள்ளலாகிய கர்ணன் என்ற அந்தப் பாத்திரம் செய்யும் முடிவு, நெஞ்சைத்தொடும், உறுதியான முடிவு.

"செருமுனைச் சென்று? செஞ்சோற்றுக் கடன் கழிப்பதுவே, எனக்கு இனிப்புகழும், கருமமும், தர்மமும்" என்று கூறுவான். அதனையே அவன் செய்தான். புகழ் பெற்றான்.

நாள்தோறும் நாங்கள் பல நூறு முடிவுகளைச் செயற்படுத்துகிறோம். சில முடிவுகள்எமது நாளின் கிரமமாக வந்த பின்பு நாங்கள் அதிகம் யோசிக்காமலே அவற்றைச் செயற்படுத்துவோம். காலையில் பல்துலக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு ஒருநாள் வந்த பிறகு அது நாள்தோறும் நடைமுறைப்படுத்தப்படுகிறது. ஒரு வேளை வேப்பங்குச்சியில் துலக்குவது என்பதில் இருந்து, பற்பொடியால் துலக்குவது, என்ற நிலைக்கு மாறிப் பின்னர் பற்பசையாலும் தூரிகையாலும் துப்பரவாக்குவது என்ற முற்றுக்கு நாம் வந்திருக்கலாம்.

பல சந்தர்ப்பங்களில் நாங்கள் மிக நன்மை தரும் என்று நம்பிச் செயற்படுத்தும் தீர்மானங்கள் எதிர்பாராத சிக்கல்களைத் தோற்றுவிப்பதுண்டு இந்தியாவிலே ஒருமுறை, முன்னர் மக்கள் குடியிருக்காத ஒரு பிரதேசத்தில் குடியிருப்புக்களை நிறுவத் தீர்மானித்தார்கள். ஆயினும் அங்கு நாக பாம்புகள் மிக அதிகமாக வாழ்வது அறியப்பட்டது. நாகபாம்பு ஒன்றைக் கொலை செய்து, அதன் உடலைக் காண்பிப்பவர்களுக்குப் பரிசாகப் பணம் தரப்படும் என அறிவிக்கலாம் என்று ஒரு அதிகாரி முடிவு செய்ய, அந்த முடிவு செயற்படுத்தப்பட்டது. ஆரம்பத்தில் பல பாம்புகள் அழிக்கப்பட்டது உண்மை தான். சில காலத்தின் பின் அதிகாரியை விட உயர்ந்த நுண்மதி கொண்ட குடிமகன் ஒருவன், "நாகபாம்புகளை வளர்த்து இனப் பெருக்கம் செய்தால் அதிக பணம் பெறலாம்" எனச் சிந்தித்தான். செய்தான். வலு வேகமாக வேறு பலரும் அந்த முடிவைப் பின்பற்றினார்கள். பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும் நிலை இருக்கும் போது, பாம்புப் பண்ணை வைப்பது முடியாத காரியமா என்ன? இறுதியில் அதிகாரியின் நிலை, "பல்லாக்கு வாங்கப் போனேன் ஊர்வலம் போ! நான் பாதியிலே திரும்பி வந்தேன் தனிமரமாக" என்ற கதையாகி, பணம் கொடுக்கும் முடிவு கைவிடப்பட்டது. பணம் செலவு செய்து நாகபாம்புகளைஅதிகரித்ததே கண்ட மிச்சம்!

இதற்கு மறுதலையாக, மனித வரலாற்றிலே வெற்றி பெற்றுப்புகழ் சேர்த்த பல முடிவுகள் காணப்படு கின்றன. ஃபோர்ட் (Fort) மோட்டார்க் கம்பனியின் புகழ் பூத்த ஸ்தாபகர் ஹென்றி ஃ போர்ட் அவர்கள் தனது நிறுவனத்தின் பணியாளர்களது வேதனத்தைத் திடீரென இரு மடங்காக உயர்த்தினார் அவர். இந்த முடிவின் விளைவாக அவரது கம்பனியின் உற்பத்தியும் விற்பனையும் வேகமாக அதிகரித்ததோடு, நடுத்தரக் குடும்பங்கள் ஒரு வாகனத்தைக் கொள்வனவு செய்யும் நிகழ்தகவு அதிகரித்தது; அதன் மூலம் அவர்களின் கனவுகளைப் பலிக்கச் செய்தார் என்று பேசப்படு கிறது. முதலில் அவர் எடுத் தமுடிவு அபாயகரமானது போலத் தோன்றினாலும் அவரது நம்பிக்கையும் ஊகமும் பலித்தன.

பெனிசிலின் நுண்ணியிர்க் கொல்லியைக் கண்டு பிடித்து வரலாற்றுப் புகழ் ஈட்டிய விஞ்ஞான அலெக்சாண்டர் பிளெமிங் (Alexander Flemming) தான் செயற்கை முறையில் வளர்த்துக் கொண்டிருந்த பற்றீரிய வளர்ப்G ஊடகங்களில், ஒரு திரட்டுத் தட்டில் (Petri dish) பற்றீரியாவின் வளர்ச்சியை ஏதோ ஒன்று தடை செய்வதைத் தற்செயலாக அவதானித்த போது, "அது என்னவாக இருக்கும் பார்க்கலாம்" என்று எடுத்த முடிவு தான், இந்தப் பெரிய கண்டுபிடிப்புக்கு வழி வகுத்தது. அவர் அதைப் பொருட்படுத்தாமல் விட்டிருக்கலாம். விடவில்லை. அது தான் விஞ்ஞானியின் சிறப்புப் பண்பு.

அவசரமாக, இறுதி நேரத்தில், பதற்றத்துடன் எடுக்கப்படும் முடிவுகள் பேரழிவுகளை ஏற்படுத்தும் என்பதற்கும் உலக சரித்திரத்தில் பல சான்றுகள் இருக்கின்றன. 1912 ஏப்ரல் 14ம் திகதி, "டைட்டானிக் கப்பலின்" துன்பியல் நிகழ்வு இடம் பெற்றது உலகறிந்த செய்தி! கப்பலின் காவலாளியிடம் பனிப்பாறைகளை அவதானிக்கும் இருவிழிமி (Binoculars) இருக்கவில்லை. வழக்கம்போல, இருவிழியி கப்பலுக்குள்ளே தான் ஒரு இடத்தில் வைக்கப்பட்டுப் பூட்டப்பட்டிருந்தது. அதன் திறப்புத் தான் கைமாற்றப்படவில்லை. இதற்கான காரணம் என்னவெனில், கப்பல் புறப்படும் கடைசி சேரத்தில், கப்பலின் இரண்டாம் நிலை உயர் அதிகாரி மாற்றப்பட வேண்டும் என்று எடுக்கப்பட்ட முடிவு. அவசரத்தில் முதலில் இருந்த அதிகாரியிடம் இவர் திறப்பைப் பெற்றுக் கொள்ளவில்லை. காலமும் விளையாடலாம். கூற முடியாது!

ஒருவர் பெறும் கல்வி அறிவு, பொதுவாகச் சிறந்த முடிவுகளை எடுக்க உதவுகிறது என்பதில் சந்தேகமில்லை. விஞ்ஞானக் கல்வியை சா/த வரையாவது ஒழுங்காகவும், தெளிவாகவும் படித்தவர், கொழுப்பு நிறைந்த உடனடி உணவுகளை உண்ணும் முடிவையோ, மதுபானம் அருந்தும் முடிவையோ, போதைப் பொருள் பாவிக்கும் முடிவையோ, புகைக்கும் முடிவையோ ஒரு போதும் எடுக்க மாட்டார்.

தனி ஒருநபராக நாங்கள் அனைவரும் பல முடிவுகளை எடுக்க நேருகிறது. குடும்பத்திலே எமக்காகவும், ஏனைய குடும்ப அங்கத்தினருக்காகவும் தனித்தோ, இணைந்தோ நிறைய முடிவுகளுக்கு வரவேண்டி ஏற்படுகிறது. வேலைத் தலங்களில் பல சந்தர்ப்பங்களில் சிக்கலான முடிவுகளை எடுக்கும் நிர்ப்பந்தம் ஏற்படலாம். தவிரவும் சமூகத்திலும், நாட்டின் செயற்பாடுகளிலும் ஒரு பிரஜையாக நின்று சில முடிவுகளை எடுத்தே தீரவேண்டும்.

பொருள், கருவி, காலம், வினை, இடனொடுஐந்தும்
இருள் தீர எண்ணிச் செயல்

(தொடருவோம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

து.திலக்(கிரி) எழுதிய சிதறல்கள் - 100(ஜீவநதி வெளியீடு) 16.12.2023 அன்று யா/உரும்பிராய் இந்தக்கல்லூரி நூற்றாண்டு விழா மண்டபத்தில் திரு சி.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது. வரவேற்புரையை வன்னியூர் வரன் அவர்களும், அறிமுகவுரையை கலாநிதி சூரியகுமாரி இராசேந்திரம் அவர்களும் வாழ்த்துரைகளை திருகு.வீரா, திரு கோ.சபேசன் ஆகியோரும் வழங்கினார்கள். வெளி யீட்டுரையை திரு வெற்றி துஷ்யந்தன் நிகழ்த்தினார். நயப்புரையை திரு யோ.புரட்சி, திரு புலோலியூர் வேல்.நந்தகுமார் நிகழ்த்தினார்கள். ஏற்புரையை திரு து.லிங்கேஸ்வரன் நிகழ்த்தினார்.



தேசிய கலை இலக்கியப்பேரவையின் 50 வது ஆண்டுவிழா 23.12.2023 அன்று ரிம்மர் மண்டபத்தில் க.தணிகாசலம் தலைமையில் நடைபெற்றது. வாழ்த்துரைகளை சோ. பத்மநாதன், சிவ.ராஜேந்திரன், ந. பார்த்தீபன், சோ. தேவராஜா வழங்கினார்கள். கவிதா நிகழ்வு, பாடல்கள், பட்டிமன்றம், நாடகம் என பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றன.



அம்பலவன் புவனேந்திரனின் "கார்மலி சொன்ன காதை", "வேர்களையிறயா விழுதுகள்" நூல் அறிமுகம் பண்டார வன்னியன் புத்தகசாலையில் 2023.12.31 அன்று த.சிவ குமாரன் தலைமையில் நடைபெற்றது. அறிமுகவுரையை கலாநிதி மேழிக்குமரன் அவர்களும் ஆய்வுரைகளை இரா.இராஜேஸ்வரன், ஏழாலை அகராவும் நிகழ்த்தினார்கள்.

மு.தமிழ்ச்செல்வனின் "நஞ்சாகும் நிலம்" சூழலியல் பத்தி களின் தொகுப்பு நூல் வெளியீடு 13.01.2024 அன்று கிளி நொச்சி மாவட்டச் செயலக திறன் விருத்தி மண்டபத்தில் ரி.எஸ்.யோசுவா தலைமையில் நடைபெற்றது. வாழ்த் துரையை த.சத்தியமூர்த்தி அவர்களும், நூல் அறிமுகத்தை சி.கருணாகரனும், ஆய்வுரையை பேராசிரியர் எஸ்.ரகுராமும் நிகழ்த்தினார்கள். சூழலியல் அரசியல் பற்றி நிலாந்தன் உரையாற்றினார். ஏற்புரையை நூலாசிரியர் வழங்கினார்.

புலோலியூர் ஆ.இரத்தினவேலோனின் "அன்றலர்ந்த மலர்கள்" (ஜீவநதி வெளியீடு) விமர்சனக் கட்டுரைத்தொகுப்பு அறிமுக விழா25.12.2023 யா/புற்றளை மகாவித்தியாலய கேட்போர் கூடத்தில் திரு க.பரணீதரன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்விற்கு மூத்த எழுத்தாளர் கோகிலா மகேந்திரன் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். அறிமுகவுரையை திரு மு.கனகலிங்கம் அவர்களும் வெளியீட்டுரையை திரு கு.வசீகரனும் நிகழ்த்தினார்கள். சிறப்புரையை திரு இ.இராஜேஸ் கண்ணன் அவர்கள் "ஈழத்து இலக்கிய வரலாற்றில் புலோலியூர் ஆ.இரத்தின வேலோனின் இலக்கியத் தடம்" என்னும் தலைப்பில் ஆற்றினார். கருத்துரையை திரு புலோலியூர் வேல் நந்தகுமார் வழங்கினார். ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்தினார்.



பி.முத்துலிங்கத்தின் "அரசியல் பொருளாதாரம், தத்துவம் ஒரு பார்வை" வெளியீட்டு விழா 07.01.2024 அன்று திருநெல்வேலியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸில் திரு சோ.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. வாழ்த் துரையை திரு ந. ஜெகநாதன் அவர்களும் வெளயீட்டுரையை க. தணிகாசலம் அவர்களும் நிகழ்த்தினார்கள். மதிப்பீட்டு ரையை திரு க. அருந்தவபாலன் கூறினார். ஏற்புரையையும் நன்றியுரையையும் பி. முத்துலிங்கம் நல்கினார்.



மஹாகவி உருத்திரமூர்த்தியின் ஆளுமைப்பகிர்வும் கலந்துரையாடலும் "பிஞ்சுப்பாடல்கள்" அரங்காற்றுகையும் 20.01.2024 அன்று கே.ஏ.எஸ்.சத்தியமனை நூலகத்தில் திரு சோ.தேவராஜா தலைமையில் நடைபெற்றது. உரைகளை சி.ரமேஷ், மல்லிகா செல்வரட்ணம், சின்னராஜா விமலன், க.சிறீகணேசன், அ.முருகதாஸ், ந.இரவீந்திரன், அரசி சுமண்யன் விக்கினேஸ்வரன் ஆகியோர் நிகழ்த்தினார்கள்.

நம்மவர் முற்றம்(இலக்கியத்தேடலுக்கான அரங்கு) 13.01.2024 அன்று எங்கட புத்தக இல்லத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் "இலக்கியர்களுக்கு வரலாற்றைக் கற்றல் ஏன் முக்கியமானது" என்னும் தலைப்பில் க.வாசுதேவன் உரையாற்றினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை நாட்டின் வட பகுதியில் பிரமாண்ட காட்சியறையுடன் அச்சுப்பதிக்தல்
சார்ந்த அனைத்து விதமான வேலைகளுக்குமான ஓர் அச்சுக்கூடம்

# மதி கலர்ஸ்

## MATHI COLOURS (PVT) LTD.

**BEST QUALITY | BEST PLACE | BEST PRICE & YOUR BEST CHOICE**

உங்கள் எண்ணங்களின் வண்ணங்களாய்!....

**PRINTERS & WEDDING CARDS**

உங்களுக்குத் தேவையான அனைத்து விதமான பிறின்டிங் தேவைகளையும் உடனுக்குடன்
தரமாகவும், நேர்த்தியாகவும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்...

திருமண அழைப்பிதழ்களின் காட்சியறை




NO. 10, MURUGESAR LANE,
NALLUR, JAFFNA.

021 222 9285

mathicolours@gmail.com



CUSTOMER CARE
077 722 2259

இச் சஞ்சிகை அல்வாய் கலையகம் வெளியீட்டு உரிமையாளர் கலாநிதி த. கலாமணி அவர்களால் மதி கலர்ஸ் நிறுவனத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org